# விவேகி

VIVEKI 1.3.67 40 சதம்



''ரேடியோ ... தற்கு?''

''பேசா ... டடுச் சண்டை சரியாகக் காதில விழுகுதில்ல''

விவேகி

மலர் 8 இதழ் 3

கௌரவ ஆசிரியர்:
மு. வி. ஆசீர்வாதம் ஜே. பி.
நிர்வாக ஆசிரியர்:
மாட்டீன்
ஆசிரியர்கள்:
செம்பியன் செல்வன்
செங்கை ஆழியான்

# உலக நாடக விழா

இம் மாதம் உலகெங்கும் நாடக விழாக்கள் கொண்டாடப் படுகின்றன. ஒவ்வொரு நாடுகளிலும் அந்தந்த நாடுகளின் சிறப்பான–புகழ் மிக்க நாடகங்கள் நடிக்கப்படுவதும், மக்கள் அதனை ஒரு தேசிய விழாவாகக் கொண்டாடுவதும் ஒரு வரவேற்கத்தக்க மரபாகவே இருந்து வருகின்றது. இதன் காரணத்தால் சிறப்பு மிக்கதும், பயன் கலைகளிலே பல்வகைத் துறைகளையும் இணைத்துத் தொழிற்படும், சிக்கலானதுமான நாடகக்கலை வளர்ந்து வருகின்றது. மேலும், இந்த விழாவையொட்டி நடிக்கப்படும் நாடகங்கள் பெரும்பாலும் அந்தந்த நாட்டிற்கே உரித்தான பண்பைப் பேணுவனவாகவே அமைகின்றன.

ஆகவே, இத்தகைய விழாக்கள் நாட்டின் மக்கட் பண்பையும், கலைப் பண்பையும் உயர்த்துவனவாகவும், பிரதிபலிப்பனவாகவுமமைந்து நாட்டின் தேசிய விழாக்களாக மாறிவிடுகின்றன. இத்தகைய விழாக்கள் உலகெங்கும் கொண்டாடப்படும் வேளையிலே நம் நாட்டு நிலையைச் சற்று எண்ணிப் பார்க்கும் போது–

நமக்குத் தாங்கொணு வேதனையே ஏற்படுகின்றது. அதேவேளையில்–

நமது சிங்களச் சகோதரர்களின் நாடக வளர்ச்சியோ அமோகமாக உள்ளது. ஏன் இந்த நிலை நமக்கு–?

நமது நாடகம் இது என்று உரிமையுடனும், மன நிறைவுடனும் சொல்லக்கூடிய நாடகம் இதுவரை நம்மிடம் எது இருக்கின்றது? இதற்கான காரணங்களை இதுவரை நம் நாட்டுக் கலைஞர்கள் எண்ணிப் பார்த்ததாகவும் தெரியவில்லை. அப்படி எண்ணியிருந்தால் இந்த நேரம் ஒரு சில நல்ல நாடகங்களாவது தேறியிருக்கும். நமது நாடகக் கலை வளர்ச்சி பெறுமைக்குரிய முக்கிய காரணங்களில் சில–

1. நாடகத் துறையின் பல்வகை நிலைகளிலும் ஆற்றலும், அனுபவமும் பெற்ற தயாரிப்பாளரோ டைரக்டரோ இல்லை.
2. தயாரிப்பாளருக்கும் – நாடக ஆசிரியருக்குமிடையேயுள்ள குறைவான தொடர்பு.
3. ஆற்றலும், அனுபவமுமிக்க ஆசிரியர்களே நாடகம் எழுதத் தயங்கும்போது, கற்றுக்குட்டிகளே நாடகங்களை எழுதுவதும், நடிப்பதும்
4. எல்லாவற்றிற்கும் மேலாக–நாடகக் கலையில் கவனம் செலுத்து[illegible] பெரியவர்கள் அதில் உண்மையான ஆர்வ அக்கறை [illegible] செ[illegible]மல், தங்களுக்கு விளம்பரம் தேடித்தரும் [illegible]ண்ணுவது.


– இ[illegible] செய்து. நமது நாடகக் கலையை வளர்த்[illegible] என்று கூறிப் பெருமைப்படுவதில் ஏதாவ[illegible]

'ஈழத்து இலக்கிய வளர்ச்சி'யிலே 'ஈழகேசரிக் காலம்' என்று கூறப்படும் காலத்தைத் தோற்றுவித்த நாயகர் நா பொன்னையா அவர்களின் -இம்மாதமிறுதியில் குரும்பசிட்டியில் நடைபெறும்- நினைவு விழாவையொட்டி இக் கட்டுரை வெளியிடப்படுகிறது.

— செம்பியன

# 'ஈழகேசரி' நா. பொன்னையா அவர்கள்

இரசிகமணி கனக. செந்திநாதன்



''பாலர்க்கு வேண்டும் பழமொழிப் பாட்டு
பக்குவமான தமிழிற் கவிதை
சாலச் சிறந்தவர் கட்டுரைக் கோவை
தமிழில் மலர்ந்த சிறுகதைச் செல்வம்
கூலிக்கு மாரடிக் காத முயற்சி
குணம்பல கொண்டு மலர்ந்த அரும்பு
போலிச் சரக்கல்ல; ஆண்மையில் வாழ்ந்த
பொன்னையா வள்ளல் அளித்து மறைந்தான்''

கவிஞர் சோ. தியாகராசாவின் மேற்படி கவிதை ஈழகேசரி நா. பொன்னையா அவர்களைச் சரியானபடி படம் பிடித்துக் காட்டுகிறது. ''போலிச்சரக்கல்ல; ஆண்மையில் வாழ்ந்த பொன்னையா வள்ளல்'' என்ற தொடரைக் கவிஞர் சரியானபடி இடமறிந்து உபயோகித்திருக்கிறார். அந்தத்தொடர் ஆணித்தரமானது; அர்த்தபுஷ்டியுள்ளது.

குரும்பசிட்டி என்னும் சிற்றூரைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. நா. பொன்னையா அவர்கள் இளமையில் வறுமை [illegible]யில் சிக்கித் தவித்தார். சாதாரண தமிழ்ப் பாடசாலை[illegible] ஐந்[illegible]ப்புவரை தான் படித்தார். களுத்துறையில் விய[illegible]டமடைந்தார். பின்பு மலேயா, பர்மா முதலி[illegible] சென்றார். பர்மாவில்தான் அச்சுக்கூடத் தெ[illegible]பின்றார் பின்னர் தமிழ்நாட்டுக்கு வந்து தே[illegible]லக்கி

ரசனை என்பவற்றைப் பெற்றுக்கொண்டார். 1926-27-ம் ஆண்டளவில் ஊர் திரும்பிய பொன்னையா அவர்கள் தெல்லிப்பழை அமரிக்க மிஷன் அச்சுக்கூடத்தில் மாணவரைப் பழக்கும் ஆசிரியராகச் சிறிது காலம் கடமை ஆற்றிவிட்டுச் சொந்தமாக, மிகச் சிறியதாகச் சுன்னுகத்தில் தனலக்குமி புத்தகசாலையையும் திருமகள் அழுத்தகத்தையும் ஆரம்பித்தார்.

ஆங்கில மோகம் தலைவிரித்தாடிய காலத்திலே, 1930 ஆம் ஆண்டளவில் தமிழ்ப் பத்திரிகைகளை வாங்குவோர் மிகச் சுருங்கிய அளவில் இருந்த நேரத்தில் மிகப் பொருள் முட்டுப்பாட்டுடன் ஈழகேசரி என்னும் பத்திரிகையை அவர் தொடங்கினுர். தேசியத்தை வற்புறுத்தி வகுப்புவாதத்தைக் கண்டித்து, காந்திய வழிநின்று, சமாசனம் சமபோசனமாதிய அக்காலப் புரட்சி வழியைப் பிரசாரம் செய்து போலி ஆசாரங்களை மறுத்து பலருடைய எதிர்ப்புக்கிடையேயும் 'துணிவே துணை' என நின்றவர்-பத்திரிகையை நடாத்தியவர் திரு. நா. பொன்னையா அவர்கள். ஈழத்துச் சிறுகதை, நாவல், நாடகம் என்பவற்றுக்கு கால் நூற்றுண்டாகச் சேவைசெய்து 'ஈழகேசரிக் காலம் தான் பொற்காலம்' என இன்றுள்ளோரும் கூறும்படி செய்தவர் அவர். தமிழ்ப் பத்திரிகையோடு 'கேசரி' என்ற ஆங்கில வார இதழையும் நடாத்திக் காண்பித்தவர் பொன்னையா. மின்சார வசதிகளற்ற அந்தக் காலத்திலே கையாலே சுழற்றி அச்சிட்டு ஒரு பிழைகளுமின்றி வாரா வாரம் வெளியிட்ட பொன்னையாவின் பத்திரிகைப்பணி நினைக்க முடியாதது. இன்றும் நினைத்துப் பெருமைப்படக் கூடியது.

ஈழத்து மாணவர்கள் 1939-ஆம் ஆண்டுவரை தமிழ்நாட்டிலிருந்து இறக்குமதியான பாடப்புத்தகங்களையே படித்துவந்தனர். நித்திலவாசகம், பூந்தமிழ்வாசகம், கந்தன் வாசகம், இயற்கை விளக்க வாசகம் என்ற இந்த வாசிப்புப் புத்தகங்கள் நம்மாணவர்க்கு எட்டுணையுட விளங்காதவை. மேட்டூர் அணையையும், தாஜ்மகாலையும், குற்றுல நீர்வீழ்ச்சியையும் அவர்கள் கனவிலே கூடக் கண்டறியார். இந்த அவல நிலையைப் போக்க பொன்னையா அவர்கள் முன்வந்தார்கள். பாலபோதினிப் புத்தகங்கள், இலக்கிய மஞ்சரிகள், தமிழ் இலக்கியத் திரட்டு, உரைநடைமஞ்சரி என அறுபத்துநான்கு புத்தகங்களுக்கு மேல் வெளியிட்டு ஈழத்திலே பாடப்புத்தகத்துறையிலே ஒரு தன்னிறைவையும் விழிப்புணர்ச்சியையும் உண்டாக்கினுர். கீரிமலையும், சிவஞெளிபாதமும், சோமசுந்தரப்புலவரும், ஆடிப்பிறப்பும், கத்தரிவெருளியும் நமது மாணவர் வாயில் இடம் பெற்றன. இது சாதாரண நிகழ்ச்சியல்ல. ஆண்டாண்டாய் நெஞ்சில் நினைக்கக்கூடிய நிகழ்ச்சி இது.

பாடப்புத்தகங்களாலும் பிறவற்றுலும் பொன்னையா அவர்கள் ஓரளவு பணம் சேர்த்துக்கொண்டார். அப்படிப் பெற்ற பணத்தைக் கொண்டு தொல்காப்பியம், இந்திய சிற்பவடிவங்கள், வசந்தன் கவித் திரட்டு, நாவலர் நினைவுமலர் பிள்ளைப்பாட்டு, வைத்தியக் கமுறை, சுத்தபோசனபாக சாஸ்திரம், சிலமலிவுப்பதிப்புகள் ஈழத்தமிழ்ப்புலவர் சரித்திரம் போன்ற பலவகைப்பட்ட நூல்களை அச்சிட்டு வெளியிட்டு தமிழ் வளர்த்த பரம்பரையில் தானும் ஒருவராய் இடம்பெற்றுர்.

திரு [illegible] ன்னையா [illegible] வர்கள் மயிலிட்டிப் பகுதிக்குக் கிராமச் சங்கத் தலை[illegible] ாதுக்கிணறுகள், வைத்தியசாலை வசதி, தெருவசதி[illegible] செய்து கிராமசேவையில் பெரும் புகழீட்டி[illegible] ரை நேசித்துச் சன்மார்க்க சபையை ஸ்தாபி[illegible] ாற்றினர். அதனுல் இன்று தமிழ் மக்களி[illegible] ழ்ந்து கொண்டிருக்கிறுர்.

# திருமணம் சொர்க்கத்தில் நிர்ணயிக்கப்படுகிறது

ஆ. தங்கராசா

எல்லாமே ''நேர்ந்துவிடும்'' விபத்துக்கள்! என் பிறப்பிலிருந்து, மணமாகி இன்று அவள் வயிற்றில் வந்திருக்கிறதே அதையும் சேர்த்து எல்லாமே, என்னையும் மீறி நேர்ந்துவிட்ட விபத்துக்கள் தாம்.

சுமையின் அழுத்தலால் பதியப்பகிய நடந்து, இரண்டடிக்கு ஒரு முறை தூணைப்பிடித்துநின்று உட்காரும்போதும்எழும்போதும் பரிதாபமாக முனகி, லஜ்ஜையினல் கூனிக் குறுகி அவள்படும் வேதனையைக் காணும்போதெல்லாம் என் உள்ளம் துணுக்குறும். ஆனல் அத்தனை வேதனையும் இரவில் படுக்கையில் பெருமூச்சுக்கிடையே ''எப்படி முண்டுது பாருங்களன்'' என்று என்கையை அவள் வயிற்றில் எடுத்து வைத்துக்கொள்ளும்போது எங்கோ பறந்துவிடும்.

''மகன் யார் ஜாடையோ?'' என்று காதைக் கடித்து, தொடையை நிமிண்டி கலகலவெனச் சிரிப்பாள் ''மகன் என்று நிச்சயம் செய்து விட்டாயா'' என்று நான் பதிலுக்கு நிமிண்டினல், ''எங்கள் குடும்பவாகே அப்படித்தான்'' என்று சொல்லி விட்டுத் தலை குனிவாள்.

அப்பொழுதெல்லாம் என்னை யாரோ சவுக்கால்அடிப்பதுபோலிருக்கும். எல்லாவற்றையுமே 'நேர்ந்துவிடும்' விபத்துகளாகக் கொள்ளும் என் கையாலாகாத்தனத்தையும்'இப்படித்தான்நடக்க வேண்டும், நடக்கும்' என்ற பிடிவாதம் கலந்த அவள் நிச்சயத்தையும்ஒப்பிடும்போதுஎன் வயிறு கலங்கும் உள்ளம் பொருமையால் துடித்து விம்மும். ''உனக்கு வேண்டுவதெல்லாம் கிடைத்து விட்டது. கிடைத்து வருகிறது. உன் லட்சியக் கணவனை தேர்ந்து எடுத்துவிட்டாய். லட்சியப் பிள்ளையையும் பெற்றுவிடுவாய். உன் ஆசையெல்லாம் நிறைவேறும். ஆனல் எனக்கு? என் கனவுகள், ஆசாபாசங்கள், இலட்சியங்கள் இவைகளை நீ அறிவாயா? நான் திருமணத்தை ஒரு தவிர்க்க முடியாத கடமையெனச் செய்து கொண்ட விஷயம் உனக்குத் தெரியுமா'' எனக்காகத் துடித்து, வெந்து சாம்பலாகிக் கொண்டிருக்கிற வேறொரு இதயம் இருக்கிறதென்பது உனக்குத் தெரியுமா?' என்னுள் நான் கருகிக் கொண்டிருந்தேன்.

பின்னேர் இரவு

கர்ப்பமேட்டினுள் ''நாலு மூலைத்தாச்சி''விளையாட்டுநடந்து கொண்டிருந்தது. பால் கரண்டியைக் கவிழ்த்தாற்போல் ஒரு பக்கத்தில் விம்மிப் புடைத்து ஒரு துள்ளுத் துள்ளி மறுபக்கத்திற்கு ஓடி. மீண்டும் புடைத்து பிறகு அமுங்கி, மீண்டும், மீண்டும்...

விளையாட்டா? இருட்டில் நிலைகொள்ளாத வேதனையா? அல்லது வெளியே குதிக்கவேண்டுமென்ற அவசரமா?

''கொஞ்சம் கையை வைச்சுப் பாருங்களன் எப்படி முண்டுது தெரியுமா?''

''அப்படியா''

'குதி குதியண்டு குதிக்குது''

''ஏனே?''

''அவசரம் தாங்கமுடியாமல்''

''யாருக்கு?''

''அதுக்குத்தான்''

''அதுக்கென்ன''

''பாவம் [illegible]னப்பாப்பா! ஒன்றுமே தெரியாது''

''அவசரம் அ[illegible]கு மட்டுந் தானு [illegible]ன? [illegible]ந்தான் அவச[illegible]யென் [illegible]ன்னும் [illegible] அதுக் கு[illegible]

"உங்களுக்கு எல்லாமே விளையாட்டாகத்தானிருக்கு. நீங்களே இப்படிக் குத்திக் காட்டினால்... உலகம் எதையும் சொல்லும். இதெல்லாம் நம்மிட கையிலா இருக்கு? இது கூடத் தெரியாமல்......"

முகத்தை வெடுக்கென்று திருப்பிக் கொண்டாள். கழுத்துப் பக்கத்தில் ஓடிய பச்சை நரம்பைச் சுற்றியும், காதோரத்திலும் ஜிவ்வென்று சிவந்தது. என்னை நானே கேட்டுக் கொண்டேன்; எதுதான் நம் கையில் இருக்கிறது? ஏற்கனவே சுவர்க்கத்தில் நிகழ்ந்துவிட்ட ஒரு நிகழ்ச்சியைத்தான் நாம் மீண்டும் நிகழச் செய்து அதற்குத் திருமணம் என்று பெயர் சூட்டி விடுகிறோம். உண்மையில் அது இரண்டாம் கல்யாணம் தான்! இப்பொழுது அவள் வயிற்றில் முளைத்திருக்கிறதே. அதுவும் அந்த ஆண்டவன் செய்த திரிசமன் தான். நான் ஒப்புக்குக் கணவன்; அவள் ஒப்புக்கு மனைவி. உப்புக்குச் சப்பாணி! ஊருக்கு மாங்கொட்டை!

நம் கையில் என்ன இருக்கிறது?

அவளை உற்றுப்பார்க்கிறேன் வந்தபோது இருந்ததற்கு இப்பொழுது கொஞ்சம் ஊதி இருந்தாள் கண்களும், மூக்கும் கொஞ்சம் அகன்று, உதடுகளும் கொஞ்சம்தடித்திருந்தன முன்பு ஒட்டியிருந்த கன்னங்கள் இப்பொழுது பூசினாற்போலிருந்தன. கடைசியாகத் தைத்த சட்டைகளின் அளவுகள் கொஞ்சம் கூடத்தான்.

'குளுக்கோஸின்' தித்திப்பு போல், அவர்கள் சொல்லும் வார்த்தைகளின் அர்த்தம் பிடிபடுவதுகஷ்டம். தெரிந்துவிட்டது என்றுநி[illegible]ம்போதேமறைந்துவிடும். [illegible] ஒரு அலா[illegible]க் காரத்[illegible]

என் மனைவி மட்டும் அதற்கு விதிவிலக்கா? 'நம கையில் என்ன இருக்கிறது' என்ற நம்பிக்கைஉள்ளவரையில் எல்லாமே 'நேர்ந்துவிடும்' நிகழ்ச்சிகள் தாம். நம்மை மீறிய விஷயங்கள்; விபத்துகள்.

"என் கண் மூடுறத்துக்குள்ள உனக்குக் கலியாணம் செய்து பாத்திட வேணும்"

"பொம்புள சின்னவளாகவும், நல்லவளாகவும், நல்ல ஜாதியைச் சேர்ந்தவளாகவும் இருந்தாப் போதும்"

"பரம்பர நல்லா இருக்க வேணும்"

"உன் மனத்தில எவளையாவது விரும்பியிருந்தாச் சொல்லுடா. நீதான் கலியாணம் செய்யப் போற, நாங்களா கலியாணம் செய்யப் போறம் இது ஆயிரம் காலத்துப் பயிருடா. வாழையடிவாழையாக வந்து கொண்டேயிருக்கும்...

இந்த இடத்தில் அம்மா அழுதே விட்டாள். நான் வரித்த பெண்ணுக்கு அம்மா போட்ட கணக்குகள் எதுவுமேஒத்துவராது சமையற்காரியொருத்தியின் கடைசி மகள் அவள். நட்சத்திரத்தில் கோளாறு. காசு தம்படியும் இல்லை. அம்மா அவளை ஒப்புக்கொள்ளுவாளா?

நம் கையில் என்ன இருக்கிறது?

பெண் பார்த்து.
நாள் பார்த்து.
கோள் பார்த்து

ஊரெங்கும் அழைப்பு விடுத்து, கெட்டி மேளம் ஒலிக்க, வந்த மக்கள் மத்தியில் பகிரங்கமாக;

ஆனந்தி என் கைத்தலம் பற்றினாள்.

அன்று நான், "நம் கையில் என்ன இருக்கிறது?" என்ற நெடு நாளையத் தத்துவத்தின் பூரணப் பொருளாய் நிறைந்து நின்றேன்.




**சீன மர்மங்கள்**

◉ யாழ்ப்பாணம் தபால் கந்தோரில் இம்மாதம் 50 இலட்சம் ரூபா பெறுமதியான சீனச் கடத்தல் தங்கம் கைப்பற்றப்பட்டிருப்பதாகவும், அதில் சீனச் சார்புக் கம்யூனிஸ்ட் ஆதரவாளர் தொடர்பு கொண்டிருப்பதாகவும் தெரிகிறது. இந்த 50 இலட்சமும் ய ழ்ப்பாணத்தை நாடிய மர்மம் என்ன?

◉ மாவோ இறந்து விட்டாரா, இருக்கிறாரா? மாவின் அரசியற் பொருளாதாரச் சித்தாந்தங்களே உலக அரங்கின் பெரும் மர்மங்களாக ஒரு காலத்தில் விளங்கின. ஆனல், இன்றோ அவரே உயிருடன் இருக்கிறாரா, இ லேயா என்பது மர்மமாகவுளது பிரபல சீன அரசியற் பெண்மணி ஒருத்தி, சமீபத்தில் மாவோ எப்போதோ இறந்து விட்டதாகவும், தற்போது மக்களுக்குக் காட்டப்படும் மாவோ ஒரு போலித் தயாரிப்பு எனவும் கூறியுள்ளார்.

◉ சீனவில் லஞ்சம் கொடுத்து செத்த எலி வாங்குகிறார்கள், உயர் பீடச் சீன அதிகாரிகள். தானிய அழிவிற்கு எலிகளே காரணமெனவும், தினசரி ஒவ்வொரு சீனப் பிரசையும் ஒவ்வொரு எலியைச் கொன்று அதிகாரிகளுக்குக் காட்ட வேண்டும் என்று பலமான சட்டம் விதிக்கப்பட்டுள்ளது. இதனல் எலி பிடிக்கத் தெரியாத உயர் அதிகாரிகள் தொழிலாளிகளிடம் லஞ்சம் கொடுத்து எலி வாங்குகிறார்கள்.

– தகவல் : சீனவி[illegible]ருந்து[illegible]னன்

◉ பாகிஸ்தானில் இன்று எலிகள் அதிகரித்ததினுல் ஏற்பட்ட தானிய அழிவிற்குச் சீனுவே காரணமென பகிஸ்தானிய மக்கள் அதிருப்திப்படுகின்றனர். சீனுவிற்கு பாம்புகளையும், பல்லிகளையும் பிடித்து உணவிற்காக ஏற்றுமதி செய்ததால் இயற்கை அழிவு சமனற்றுப்போக, எலிகள் இங்கு கூடிவிட்டனவாம். ஏற்றுமதியால் கிடைத்த வருமானம் 10 லட்சம் ரூபா. எலி தானியங்களை அழித்ததால் நட்டம் 10 கோடி ரூபா.

**மிகப் பெரிய கடிகாரம்**

◉ உலகிலேயே மிகப்பெரிய கடிகாரம் எங்கிருக்கிறது தெரியுமா? நியூயோர்க் நகரில் இருக்கிறது. அதன் பெயர் "கால்கேட்" கடிகாரமாகும். அக் கடிகாரத்தின் நேரம் காட்டும் பெரிய ஊசியின் நீளம் 27 அடி 3 அங்குலமாகும். சிறிய ஊசியின் நீளம் 19 அடி 8 அங்குலம்.

தகவல்: அ. கனகசூரியர்

**அட்டைப் பட ஓவியர்**

◉ திரு. எஸ். கே. சௌந்தரராஜன் ஒரு பீ எஸ்சி பட்டதாரி. இவர் தற்போது மட்டக்களப்பில் ஒரு கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றிவருகிருர். இவர் தனது சொந்தப் பெயரிலே கதை கட்டுரைகள் எழுதி வந்தபோதும், இவரை 'சௌ' என்ருல்தான் இலக்கிய உலகுக்கும், பத்திரிகை உலகுக்கும் நன்கு விளங்கும். மகாகவியின் 'லிமரிக், தமிழ் முயற்சி 'குறும்பா'ப் பாடல்களுக்கு இவர் வரைந்த ஓவியங்கள் மிகப் பிரசித்தம், இவரின் ஓவியங்கள் நம் ஈழத் தமிழ் மண்ணின் துடிப்புகளாக மின்னுகின்றன. அவை கூறும் முக பாவங்கள் நம்மைச் சிரிக்கவைத்து, சிந்திக்க வைக்கின்றன.

**யோகம்**

◉ ஒரு பிரபலத் தினசரியின் வார வெளியீட்டிலே சில வாரங்கட்கு முன்னர் பிரபல எழுத்தாளர் எஸ். பொன்னுத்துரை எழுதியயோகம் என்னும், இறை மாட்சிநனவோடை' உத்தியில் எழுதப்பட்ட நாவல் வெளிவந்து கொண்டிருந்தது. அது திடீரெனநிறுத்தப்பட்டுள்ளது காரணம் அந்த நாவலில்பௌத்த மக்களைத் துன்பப்படுத்தக்கூடிய பலசம்பவங்கள் அடங்கியிருக்கிறதாம். இதுபற்றி மேலிடத்தில் எழுந்துள்ள கேள்விகள் மேற்படி தாபனத்திற்குப் பெருத்த தலையிடியாக மாறியுள்ளதாம்.

**மக்கள் பிரதிநிதிகள்**

◉ மக்கள் பிர[illegible]நிதிகள் என்போர் ஆட்சியில் மக்களின் பங்கை ஏ[illegible]பவர்களாக மட்டும் இருப்பதில்லை. மக்களின் உ[illegible]களைப் பாதுகாப்பவர்களாகவும் இருக்கின்ருர்க[illegible]

? ◉ ஒரு பிரேத ஊர்வலம் சென்று கொண்டிருந்தது; நூற்றுக்கணக்கானகார்கள் அந்த ஊர்வலத்தில் கலந்து கொண்டன இந்த ஊர்வலத்தைக் கண்ணுற்ற ஒருத்தி மற்றவளை வினவினள்; "யார் இறந்து போனது?"

"எனக்குத் தெரியவில்லை. நான் நினைக்கின்றேன், முதல்காரில் போகிறவர்களில் ஒருவராகத்தான் இருக்க வேண்டும்"

## தங்கப் பதக்கம் பரிசு

◉ ஈழ கேசரிப்பொன்னையாவின் நினைவு விழாவை யொட்டி குரும்ப சிட்டி சன்மார்க்க சபையினர் நடாத்திய நாடகப் போட்டியில் பாஷையூர் வளர்பிறை நாடகமன்றத்தின் பொறுமைக்குப்பரிசு என்ற வரலாற்றுக் கற்பனை நாடகம் முதலாம் பரிசான தங்கப் பதக்கத்தை ,சுவீகரித்துள்ளது.

## நீ விரும்பும் வண்ணம்

◉ உள்ளுறையான யதார்த்தங்களின் போக்கை நமது குருட்டுத்தனம் எள்ளளவும் மாற்றுவதில்லை. பார்வையுள்ளவர்க்கும் சரி, பார்வையற்றவர்க்கும் சரி, அற்புதமான எழில் நிறைந்த உலகம் கற்பனையின் மூலமாகவே அப்போதும் தோன்றுகிறது. நீ எப்படி இருக்கிருயோ, அப்படி இல்லாமல் வேறு ஒருவனுக- அற்புதமானவனுக, உதாரண குணமும் நற்பண்பும் உடையவனுக, - இருக்க விரும்பினுல், உன் கண்களை மூடிக்கொள்; கணநேரம் கனவில் நீ எப்படி இருக்க விரும்பினுயோ, அப்படியே இருப்பாய்.

- ஹெலன் கெல்லர் -


அடுத்த இதழில்

# கேள்வி பதில்

கலை, இலக்கிய, அறிவியல், அரசியல், சினிமாபற்றிய உங்கள் சந்தேகங்களுக்கு-

கேள்வி பதில்

விவேகி

29, கண்டிவீதி, யாழ்ப்பாணம்

என்ற

விலாசத்திற்கு எழு[illegible]

கையிற் கட்டு...

காலிலும் கட்டு.

உடலெங்கும் பல ஒட்டுகள். இத்தனை தளைகளுக்கிடையிலும் உயிர் தன் மூச்சை வட்டுக் கொண்டு சுதந்திரமாக இயங்குவது விந்தைதான்.

உலகத்தைச் சரிவரக்காண முடியாத மிகப் பரிதாபகரமான நிலையில் கட்டிலிற் கிடத்தப்பட்டுக் கிடக்கின்றேன்.

என் கரம் பற்றியவள் கண்களில், நீர்வரைகட்ட முடியாத ஆறாகப் பெருகிக் கன்னப் பிராந்தியத்தில் அலங்கோலமான கீற்றுக்களை உற்பத்தி செய்கிறது. முந்தானைச் சேலையினால் அதனைத் துடைத்துவிட முயல்கிறாள் முடியவில்லை.

பெற்றவள் தன் பாசத்தை வரைகட்டமுடியாத நிலையில் கட்டிலுக்கு அப்பால் பெருங்குரல் எடுத்து அழ முனைகிறாள்.

''ஏ மனுஷி, சத்தம் போடாதே'' என்று ஓடலி துரத்துகிறான்.

வாயிருந்தும் பேசமுடியாது, உடலிருந்தும் அசைய முடியாது வெறும் மரக்கட்டைபோல் கிடக்கும் என்னைச்சுற்றிடாக்டர்களும், 'நர்சு'களும் துரித கெதியில் இயங்குவது மட்டும் புகையுண்ட சித்திரம்போல் தெரிகிறது...

ஆனால் இ[illegible]த் தெளிவு இன்னும் துலாம்பரமாகி விடவில்லையே. மீண்டும் மயக்கம். மயக்கமும் தெளி[illegible]

# சுயநலம்

**யாழ்வாணன்**

மயக்கத்துக்கும், அற்ப தெளிவுக்கும் இடையில் எத்தனை நாட்கள் கழிந்தனவோ... இப்போது புலன்கள் ஓரளவு தெளிவுப் பாதையை நோக்கி மந்த நடை போடுகின்றன.

அப்பப்பா! இதென்ன இது. பலரகப்பட்டமருந்துகளின் நெடி, இருமல், மூசும் ஒலி ''ஐயோ! அம்மா'' என்னும் அவலக்குரல்... எங்கு கிடக்கின்றேன்? எனக்கே என்னைப் புரிகிறபோது...

எந்த இடமோ என்ற கேள்வி என் நெஞ்சத்தை உளிகொண்டு துளைக்கிறது.

இந்த இடத்தை இப்போது முற்றற உணர்ந்துவிட்டேன்.மனிதன் கைகளில் சௌக்கியமாக உலாவும்போது எத்தகைய வீறுப்புப் பேசுகின்றான். தான் என்ற அகங்காரச் செருக்கில் அவன் செய்யும் செய்கைகளுக்கு எத்தகைய உத்வேகம்!

அந்த மனிதன் உயிருக்கு மன்றாடி, உதவிக்கு இன்னொருவரைக் கெஞ்சி அழைக்கும் பவ்வீனம் எல்லாம் இந்த இடத்துக்குத்தான் ஆகிவிட்டனவோ...

'டாண் டாண்' என்ற மணி ஒலியைத் தொடர்ந்து, சாரி,

சாரியாக மனிதர்கள் கட்டவிழ்த்துவிட்ட மந்தைகளென உள் நுழைகின்றனர்.

அவசரமாக வந்த அவள் என்னருகில் நிற்கிறுள். கையில் சாப்பாட்டுப்பார்சல்.

''அத்தான்''

''கண்ணம்மா''

''என் தாலி பிழைத்துவிட்டது. ஒரு வாரமாக நான் வேண்டாத கோவில் இல்லை. கும்பிடாத கடவுளில்லை...''

''என்ன?''

'நீங்கள் போன திங்கட்கிழமை தொடக்கம் கண்ணே திறக்காத நிலையில் இந்தக் கட்டிலில் செத்த பிணத்துக்குச் சமதையாகக் கிடந்தீர்கள்...''

''இன்றைக்குத்தான் உங்களுக்கு அறிவு தெளியும் என்று கூறினர்கள். கடவுள் காப்பாற்றி விட்டார்.''

''அந்தப் பெடியன் நல்லாய் இருக்கவேணும்''

''யாரது?''

''அவன் தான் தங்கராசா; உங்கள் மருமகன்''

''என்ன, அவனு? அக்காவும் வந்தவவோ?''

''ஓம். பல காயங்களினுல் இரத்தம் எல்லாம் வெளியேறி விட்டதாம். இரத்தம் ஏற்றினுல் தான் நீங்கள் பிழைக்க முடியும் என்றுர்கள். பல பேரைக் கெஞ்சி மன்றுடிக் கூட்டிக்கொண்டு வந்தேன். ஆனுல் பயன் இல்லை. உங்கள் இரத்தத்திற்கும் அவையின்ரை இரத்தத்திற்கும் ஒத்து வரவில்லையாம். என்ன செய்வது என்று தெரியாது திக்குமுக்காடிய நிலையில், எப்படியோ உங்கள் நிலையை அறிந்த தம்பி, இங்கை வந்து நிலைமையைப் புரிந்து கொண்டு, டாக்டரிடம் சென்று தனது இரத்தத்தை எடுத்து ஏற்றும்படி சொன்னதாம். டாக்டர் பரிசோதித்து உங்களுடைய இரத்தமும் அவனுடைய இரத்தமும் ஒரே இனமாக இருந்ததால், அவனது இரத்தத்தை எடுத்துத்தான் உங்களுக்கு ஏற்றினுராம். அதனுல்தான் நீங்கள் பிழைத்துக் கொண்டீர்கள். இல்லாவிட்டால்...?''

முற்றற உணர்வில் தெளிவுண்டாகி விட்டது.

உடல் இங்கே. என் மனவி, ஆஸ்பத்திரி அனைத்தும்... அப்படியே இருக்க நினைவுப் பறவை இறக்கையடித்துப் பறக்கிறது.

இரவு இரண்டு மணி. நிசியின் பேயமைதியில் உலகம் தன்னை மறந்து கட்டுப்பட்டுக் கிடக்கும் வேளை...

''தம்பிராசா! தம்பிராசா!' என்று யாரோ கூப்பிடும் சப்தம் வாசலில் கேட்கிறது.

''யாரது?'' துடித்துப் பதைத்தெழுந்து தூக்கக் கலக்கத்துடன் கேட்கிறேன்.

''அட. அது நான்தான். கதவைத் திறவன்.''

வாசலில் அத்தான் நிற்கிறுர்.

''என்ன அத்தான் இந்த நேரத்திலே வந்தது ?''

''என்னத்தைச் சொல்லுகிறது. இவவிற்குப் பிள்ளை பிறந்திட்டுது. ஆனால் பிரசவத்தின் பின் ஏற்பட்ட இரத்தப் பெருக்கினால் அறிவு இல்லை. இரத்தம் ஏற்ற வேண்டுமாம். ஆஸ்பத்திரியிலே 'பி' 'குரூப்' இரத்தம் இல்லையாம். வெளியிலே காசைக் கொடுத்து யாரிடமாவது எடுக்கலாமென்றால், ஒருவருடைய இரத்தமும் 'பி' 'குரூப்'பாகஇல்லை. எல்லாம் 'ஒ' குரூப்பாகததான் இருக்கு. இறுதியாகத்தான் உன் இரத்தம் சில வேளை சரி வந்தாலும் சரி வருமென்ற எண்ணத்துடன் இங்கை வந்தனான.''

அத்தானின் எண்ணத்தைப் புரிந்து, சகோதரிக்கு உதவத் துடித்துக்கொண்டு, ஆஸ்பத்திரிக்குக் கிளம்ப ஆயத்தமாகின்றேன்.

''இஞ்சேருங்கோ...''

என் மனைவியின் குரல் திரும்பிப் பார்க்கின்றேன்.

''ஒருக்கா வந்திட்டுப் போங்கோ...''

''இப்ப என்ன அவ்வளவு அவசரம். மனிதன் படுகிற அவசரத்துக்குள்ளை...''

''ஒருக்கா வந்திட்டுப் போங்கோவன் எண்டால்—''

அழைப்பைப் புறக்கணிக்க முடியாமல் உள்ளே சென்றேன.

''நீங்கள் ஒன்றையும் யோசிக்காமல் 'டக்' கெனக கிளம்புகிறீர்கள். இரத்தம் கொடுத்து விட்டு நீங்கள் என்ன செய்யிறது. கெட்ட காலத்திற்கு உங்களுக்கு ஏதும் நேர்ந்து விட்டால்...? எங்களுடைய கதி...?''

''சே! என்ன பயித்தியக் கதை பேசுகிறாய். கூடப்பிறந்தவள் இரத்தத்திற்காக உயிருடன் ஊசலாடிக்கொண்டிருக்கிறாள். நீ என்ன எண்டால் ?''

''நீங்கள் இரத்தம் கொடுக்கப் போகப்படாது. எனக்குப் பயமா இருக்கு''

''இரத்தம் கொடுப்பதால் எவ்வித தீமையும் இல்லை. ஒரு உயிரைக் காப்பாற்றிய பெருமை இதை நீ உணரமாட்டாயாம்...''

''நீங்கள் என்ன சொன்னாலும் நான் போகவிடமாட்டேன். எங்களுடைய செல்வத்தானை நீங்கள் போகப்படாது''

பிள்ளைமீது சத்தியம் செய்து விட்டாள். அச் சத்தியத்தை மீறும் சக்தி என்னிடமில்லை. பிள்ளைமேலுள்ள பாசம் என்னை மனைவியின் சொல்லுக்கு என் மனட்சாட்சிக்கு விரோதமாக கீழ்ப்படியும்படி செய்துவிட்டது.

அத்தான் முகத்தில் எப்படி விழிப்பது ? என்ன சொல்லுவது என்ற எண்ணம் அலைமோத, அருகிலிருந்த கதிரையில் உட்கார்ந்துவிட்டேன்

அவளே அத்தானிடம் சென்று ''இவருக்குள் இடைக்கிடை மயக்கம் வாறது. இந்த நிலையில் இரத்தம் கொடுத்தால்...? அதுதான் யோசனையாக இருக்கு...'' என்கிறாள்.

அத்தான் ஒன்றுமே கூருது மௌனமாகச் செல்லுகிருர்.

ஆண்டுகள் இரண்டுக்குமேல் எப்படியோ சென்று மறைந்து விட்டன. மனிதன் எதிர்பாராத சோதனைகளுக்குள் அகப்பட வேண்டுமென்ற நியதி எப்பவுமே பொய்த்து விடுவதில்லை.

கடந்த ஒரு கிழமைக்குள் விபத்தில் சிக்கி, ஆஸ்பத்திரியில் கிடக்க நேரிடும் என்று நான் கனவுகூடக் கண்டிருக்க மாட்டேன். அன்று காலை. கடையில் பத்திரிகை வாங்கிக்கொண்டு, அதன் தலைப்பைக் கண்கள் மேய, வந்து கொண்டிருந்த நான் எப்படி இந்த விடத்திற்குள்ளானேன்?

இதுவும் விதிதானே?

கடுமையான காயங்கள். உதிரம் அத்தனையும் வடிந்து ஓடிவிட, அறிவு மயங்கிய நிலையில் கிடந்த எனக்குப் பலமான கட்டுக்கள்...

தலையில்

கைகளில்...

காலில்...

உடலில் எல்லா இடமுமே பல்வேறு காயத்திற்குப் பொருத்துப் போட்டு அசைய முடியாது கிடக்கும் எனக்கு அறிவு வர வேண்டுமானுல் இரத்தம் உடனடியாகத் தேவையென டாக்டர் தெவித்தாராம்.

எனது இரத்தம் 'பி' 'குரூப்' பாம். பலருடைய இரத்தம் வெவ்வேறு 'குரூப்'பாக இருந்ததாம். என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்து நின்ற நிலையில், எனது மருமகன்-சகோதரியின் மகன். எதிர்பாராத முறையில் தனது இரத்தத்தைக் கொடுத்து என்னைக் காப்பாற்றியுள்ளான்.

எனது மனைவிக்கு இப்போதுதான் ஞானம் உதயமாகியுள்ளது...

கடந்தகால நிகழ்ச்சிகள், மனக்கண்ணில் தோன்ற – நான் அவற்றுடன் ஒன்றிவிடுகின்றேன்!

"நேசம்மா நேசம்மா! இங்கைவந்து பாருங்கோவன் இவ்வளவு நேரமும் பேசிக்கொண்டிருந்தவர் இப்ப கொஞ்ச நேரமாகப் பேசாமல் கிடக்கிருர்'' என அங்கலாய்த்துக்கொண்டு 'நர்ஸ்'சைக் கூப்பிட்ட குரல், என் சிந்தனையைத் துண்டித்தது,

"கண்மணி,ஏன் சத்தம்போடுகிருய். எனக்கொன்றுமில்லை. என் அறிவு தெளிவாகவே இருக்கின்றது. இதுவரை இல்லாத தெளிவு இப்போது... ஏற்பட்டுவிட்டது. நீ ஏன் வீணுகப் பயந்து சப்தம் போடுகிருய்''என்ற எனது சொற்கள் அவளைத்தடுத்து நிறுத்தின.

அக்காவும், அத்தானும் என்னுடன் வருகின்றனர்...

அவர்களைக் கண்ட கண்கள் பனிக்குள் துடிக்கும் மலராகி விடுகின்றன.

அக்காவின் கைகள் எனது பனித்த விழிகளைத் துடைத்து விடுகின்றன...

''மச்சாள்! உங்கடை நல்ல குணத்தை அறியாமல், அன்றைக்கு உங்களுக்கு இரத்தம் கொடுக்கவெனப் புறப்பட்ட உங்கள் தம்பியைச் சுயநலம் காரணமாக நான் மறித்துவிட்டேன். இன்றைக்கு உங்கள் மகன் உதவியிராவிட்டால்.. எங்கள்கதி?..

என்ற கண்மணி கேவிக் கேவி அழுகிருள். ஆனுல் அக்கா மலர்ந்த முகத்துடன் 'ஏன் பைத்தியமே அழுகிருய்? இது என்ன குழந்தைப் பிள்ளைமாதிரி'' என்று சொல்லி அவளை அணைத்துக்கொள்கிருள்.

பற்றிழந்து பிரிந்த இருகுடும்பத்து உறவுகளும இப்போது மலரத் தொடங்கிவிடுகின்றன.

★


## உங்கள் அச்சுவேலைகள்

★ தமிழ்

★ සිංහලම්

★ ENGLISH

★ संस्कृतम्

எந்தமொழியில் செய்யப்பட வேண்டும்?

## ஆசீர்வாதம் அச்சகம்

32, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

அல்லது

61, பெரியகடை ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்

என்ற விலாசத்தில் விசாரியுங்கள்

குழந்தை இலக்கியம்

# நொண்டி ஆட்டுக்குட்டி

ஷிராணி

காலை நேரம்—

சாலையின் ஊடே 'ஒப்பல்' கார் ஓடிக்கொண்டிருந்தது! அதில் ஒய்யாரமாக அமர்ந்திருந்தாள் ஆஞ்சலா. அவளுக்கு அருகில் 'டிரைவர்' ஆசனத்தில் உட்கார்ந்திருந்த டாக்டர் பெஞ்சமின், காரைக் கன வேகமாக ஓட்டிக் கொண்டிருந்தார்.

''அப்பா! .. தலையை வலிக்கிறது'' என்று தலையைப் பிடித்து விட்டுக் கொண்டாள் ஆஞ்சலா.

''ஏனம்மா ?'' என்று பதறிக் கொண்டே கேட்டார் டாக்டர் பெஞ்சமின்.

''ஏனோ தெரியல்லே... காலையிலேயிருந்து ஒரேயடியா தலை வலிக்குது''

''அப்படியா கண்ணு ? கொஞ்சம் நேரம் பொறுத்துக்கம்மா. ரெண்டு நிமிஷத்திலே வீட்டுக்குப் போயிடலாம்'' என்று சொல்லிக் கொண்டே, மகளைத் தன் இடது கையால் அணைத்த வண்ணம் 'அக்ஸிலேட்ட'ரை அமத்தினார் டாக்டர்.

கார் வேகமாக ஓடியது.

அன்று பெரிய வெள்ளிக் கிழமை. மன்னுயிர்க்காய்த் தன்னுயிரைப் பலி கொடுத்த மகான் ஏசுவின் மறைவு தினமாகிய அன்று, கோவிலுக்குச் சென்று, யாவும் வல்லதேவனை வணங்கி விட்டு, ஆஞ்சலாவும், அவள் தந்தை—டாக்டர் பெஞ்சமினும் காரில் வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தனர்.

'கிறீச்...!' என்ற சப்தத்துடன் கார் குலுங்கி நின்றது. அடுத்த கணம் 'அம்மே!' என்ற அவலக் குரல். அலறித் துடித்துக் கொண்டிருந்தது, காரில் அடிபட்ட அந்த ஆட்டுக்குட்டி! ஒரு கணம் அவ்விடத்தில் நின்ற கார், மறுகணம் அங்கிருந்து ஓடியது.

'என்னப்பா அது?' என்றாள் ஆஞ்சலா.

'ஒன்றுமில்லையம்மா... சுத்த 'நியூஸென்ஸ்'... ஆட்டுக்குட்டியை ரோட்டில் அவிழ்த்து விட்டால், அடிபடாமல் என்ன செய்யும் ?' என்று மகளின் கேள்விக்கு அசுவாரஸ்யமாகப் பதில் சொன்னார் தந்தை.

டாக்டர் பெஞ்சமின் ஒரு மனித வைத்தியர் அல்ல. அந்தக் கிராமத்தில் உள்ள ஒரே ஒரு மிருக வைத்தியர் அவர் தான்! அவர் நினைத்திருந்தால், காரில் அடிபட்ட அந்த ஆட்டுக்குட்டி

யைத் தன்னுடன் எடுத்துச் சென்று சிகிச்சையளித்திருக்கலாம். அல்லது அதற்கு நஷ்டஈடாக அதன் சொந்தக்காரரிடம் 'ஏதாவது' கொடுத்துச் சென்றிருக்கலாம். பிறகு ஏன் அவர் நிறுத்தாமல் காரை ஓட்டிக் கொண்டு போனார்?

அவசரம்!-

தன் ஒரே அருமை மகள், 'தலை வலிக்கிறது' என்று சொன்ன அந்த வார்த்தையை விடவா இந்த ஆட்டுச்குட்டியின் உயிர் பெரிது?

கார்வேகமாக ஓடியது!

பின்னால் திரும்பிப் பார்த்தாள் ஆஞ்சலா. வீதியின் ஓரத்திலிருந்த ஒரு குடிசைக்குள்ளிருந்து வெளியில் ஓடியேவந்த சிறுவன ஒருவன், அலறித்துடித்துக் கொண்டிருந்த ஆட்டுக் குட்டியைக் கையில் தூக்கியிருப்பது தெரிந்தது. அதற்குமேல் அவளால் பார்க்க முடியவில்லை. அதற்குள் கார் வேகமாகப் போய்விட்டது!

'சர்...ர்...ர்...' என்ற சப்தத்துடன் 'போர்ட்டிக்கோ' வினுள் வந்து நின்றது கார். மகளை அணைத்துச் கொண்டு வீட்டுக்குள் சென்றார் டாக்டர்.

தலைவலி என்று படுத்த ஆஞ்சலா, இரண்டு நாட்களாக எழுந்திருக்கவே இல்லை. கடுமையான காய்ச்சல், அன்று சாயங்காலந்தான் சற்று விட்டிருந்தது.

கட்டிலில் படுத்திருந்த அவள் அந்தப் படத்தை மிக உன்னிப்பாகப் பார்த்துக்கொண்டிருந்தாள். ஏசு பெருமான் ஒரு அழகான ஆட்டுக்குட்டியைத் தன் மார்போடு அணைத்துக் கொண்டிருந்தார். அந்தப் படத்தையே இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தவள், சற்று நேரத்திற்கெல்லாம் கண்ணயர்ந்தாள்.

மறுநாள் —

பொழுது புலர்ந்தது. ஆலய மணி ஒலித்துக் கொண்டிருந்தது. சிலுவையில் அறையுண்ட ஏசு மகான், மூன்றும் நாள் உயிர்த்தெழுந்த சுபதினத்தைக் கொண்டாடும் 'ஈஸ்டர்' பண்டிகை தினத்தன்று, ஆராதனைக்கான நேரத்தை அறிவிப்பதற்காக மாதா கோவில் மணி மீண்டும் மீண்டும் ஒலித்துக் கொண்டிருந்தது.

கோவிலை நோக்கி ஓடிக் கொண்டிருந்தது கார். அன்னையும் தந்தையும் அருகில் அமர்ந்திருக்க, பட்டாடையுடுத்துப் பக்கத்தில் அமர்ந்திருந்தாள் ஆஞ்சலா.

திடீரென்று—

''நிறுத்துங்கள் அப்பா!'' என்று தன் மகள் கூறியதைக் கேட்ட டாக்டர் மெதுவாகக் காரை நிறுத்திய வண்ணம், ''என்னம்மா அது'' என்று கேட்டார்.

''ஒரு நிமிஷம் இங்கே நில்லுங்கள் அப்பா. நான் இதோ வந்து விடுகிறேன்'' என்று சொல்லிக்கொண்டே காரின் கத

வைத் திறந்தாள். விஷயம் ஒன்றும் புரியாத அன்னையும் தந்தையும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர். காரிலிருந்து இறங்கிய ஆஞ்சலா, வேகமாக அருகிலிருந்த குடிசைக்குள் நுழைந்தாள். டாக்டர் பெஞ்சமினும், அவர் மனைவியும் மகளைப் பின் தொடர்ந்து, குடிசைக்குள் சென்றனர்.

அங்கே—

அழகான ஆட்டுக்குட்டி ஒன்றைத் தன் மார்போடு அணைத்துப் பிடித்துக்கொண்டு நின்றான் ஒரு சிறுவன். அழுக்குச் சட்டையும், பரட்டைத் தலையுமாக நின்று கொண்டிருந்த அந்தச் சிறுவன் வேறு யாருமல்ல. மூன்று நாட்களுக்கு முன்னால் ஆட்டுக்குட்டி காரில் அடிபட்ட போது ஓடிவந்து தூக்கினானே, அதே சிறுவன்தான் இவன். இவன் கண்களிலிருந்து கண்ணீர் மாலை மாலையாக வழிந்தோடிக் கொண்டிருநதது.

பக்கத்தில் ஒரு கிழவர் நின்று கொண்டிருந்தார். அவருக்கு அருகில் மற்றொரு மனிதரும் நின்று கொண்டிருந்தார். அவர் கையில் பத்து ரூபா பச்சை நோட்டு ஒன்று காட்சியளித்தது.

''இந்த நொண்டி ஆட்டுக்குட்டி இனிமேல் நமக்கு எதற்குராதா? இதோ, இந்த மாமா கிட்டே அதைக் கொடுத்து விடு. உனக்குப் பத்துரூபா தருவார்... இன்றைக்கு 'ஈஸ்டர்' இல்லையா? இந்த ஆட்டுக்குட்டி அவர் வீட்டுக் கறிக்கு உதவும். அவர் உனக்குத் தரும் பத்து ரூபா உனக்கு ஈஸ்டர் கொண்டாட்டத்திற்கு உதவும்!...” என்றார் பெரியவர்.

''தாத்தா!... என் உயிர் போனாலும் இந்த ஆட்டுக்குட்டியை மட்டும் யாருக்கும் கொடுக்கவே மாட்டேன்” என்று அழுது கொண்டே சொன்னான் அந்தச் சிறுவன்.

''எந்தப்பாவிப்பயலோதான் அதன் காலை ஒடித்துவிட்டானே! இனிமேல் அது எதற்கு உதவும்?''

''அந்தப் பாவிதான் இதன் காலை ஒடித்தான்.. அதற்காக நாமுமா அதைக் கொலை செய்யுறதுக்காக விற்கணும்?... அடுத்த வீட்டு அருளானந்தத்துக்கும் தான் ஒரு கால் ஒடிஞ்சுபோச்சு. அதுக்காக. அவங்க அம்மா அவனை யாருக்கும் விக்கவா செஞ்'சாங்க?...'' அழுகையின் ஊடே சிறுவன் அவனுக்குத் தெரிந்த தத்துவத்தைப் பேசினான்.

இந்தக் காட்சியை மூன்று ஜோடிக் கண்கள் இமை கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தன. அந்த மூன்று ஜோடிக் கண்களில், ஒரு ஜோடி சின்னஞ் சிறு கண்களிலிருந்து மட்டும் கண்ணீர் கொட்டிக்கொண்டிருந்தது— ஆம், இந்தக் காட்சியைக் கண்ட ஆஞ்சலா அழுது கொண்டிருந்தாள்!

டாக்டரால் அதற்கு மேலும் பொறுத்துக் கொண்டிருக்க முடியவில்லை.அந்தப் பரட்டைத்தலைச் சிறுவனை நெருங்கினார். ''அழாதே

தம்பி. உன் ஆட்டுக்குட்டியின் காலை உடைத்த பாவி நான் தான்!... இந்த ஆட்டுக்குட்டியை நீ யாருக்குமே சொடுக்க வேண்டாம். இதை நீயே வைத்துக் கொள்... ''என்று சொன்ன டாக்டர், பெரியவரை நேக்கி'' இந்தச் சிறுவன் யார் பெரியவரே?''என்று கேட்டார்.

''இவன் என் பேரனுங்க. போன வருஷம் இவன் அம்மா செத்துப் போயிட்டா. இவன் அப்பன்-அவன் தான் சிங்கப்பூருக்குப் போய் நாலு வருஷமாச்சு. இன்னும் திரும்பி வரல்லே. நான் தான் இவனை வளர்க்கின்றேன்'' என்று இரத்தினச் சுருக்கமாகக் கூறி முடித்தார் பெரியவர்.

அவர்கள் பேசிக் கொண்டிருந்த அதே நேரத்தில் ஆட்டுக்குட்டியை விலைக்கு வாங்க வந்திருந்த புண்ணியவான் எங்கே போனாரோ, ஆளையே காணவில்லை!

சற்று நேரத்தில்—

டாக்டர் பெஞ்சமின், அவர் மனைவி, ஆஞ்சலா இவர்களுடன் அந்தப் பெரியவரையும், அவர் பேரனையும் தன்னுள் அடக்கிக் கொண்டு, வீதியில் வேகமாக ஓடிக்கொண்டிருந்தது 'ஓப்பல்' கார். ஆஞ்சலாவின் மடிமீது அமைதியாகப் படுத்திருந்தது அந்த நொண்டி ஆட்டுக்குட்டி.


இவ்வாண்டின் இணையற்ற சிறுகதைத் தொகுதி என அறிஞர்கள் பாராட்டும்

'செம்பியன் செல்வனின்'

# அமைதியின் இறகுகள்

விற்பனையாகின்றது

விவேகி காரியாலயத்திற்கு அன்பர்கள் ரு 3/– போஸ்டல் ஓடர் அனுப்பிப் பெறலாம்.

★ சென்ற இதழ் தொடர்ச்சி

# தேய்பிறை

வ. அ. இராசரெத்தினம்

அது சற்று விசாலமான வீடு. வாத்தியார் முன் மண்டபத்திற் படியேறுகையில், அங்கே எதையோ தீவிரமாகவிவாதித்துக் கொண்டிருந்த, நாலைந்து பெண்கள், அந்த அளவிற் பேச்சை முடித்துக் கொண்டு வாத்தியாரை வரவேற்றார்கள். அம் முதியவர்களின் பேச்சை இரசித்துக்கேட்டுக்கொண்டிருந்தபெண்களும், ஆசிரியரைக் கண்டதும் முன்னால் விரித்திருந்த புத்தகத்தை விட்ட இடத்திலிருந்து மீண்டும் படிக்கத் தொடங்கினார்கள். வாத்தியாரின் தங்கை ''இருங்க அண்ணை கோப்பி கொண்டிற்று வாறன்'' என்று சொல்லிக்கொண்டே அடுக்களைக்குள் போனாள்.

குருஸ் வாத்தியார் மண்டபத்துட் கிடந்த கதிரை ஒன்றிலே அமர்ந்து கொண்டார். மண்டபத்திற் கூடியிருந்த அயல்வீட்டுப் பெண்கள் மூவர் தீயை மிதித்தவர்கள் போலச் சற்று நேரம் வெலவெலத்துப் போனார்கள். ஆயினும் இப்போது ஆசிரியரைப் பார்த்து புன் முறுவல் பூத்தார்கள்.

வாத்தியாருக்கு அவர்கள் என்ன கதைத்திருப்பார்கள் என்பது விளங்கிவிட்டது. அவர்களால் என்னதான் கதைத்திருக்க முடியும். ஊரிலே மூன்று நான்கு பெண்கள் எங்காவது கூடிக் கொண்டால் ஒரே ஊரளப்புத் தான். முக்கியமாகக் கல்யாணக் கதைதான். இந்த வீட்டிலும் ஒரு பையன் இருக்கிறான். வாத்தியாரின் பேரன். அவனுக்கு கல்யாணத்திற்கேற்ற வயதும் வசதியும் வந்து விடாவிட்டாலும் உத்தியோகம் வந்துவிட்டது. ஆகவே அவனுடைய கல்யாணக் கதையைத்தான் கதைத்துக் கொண்டிருப்பார்கள். அதைப்பாடம் படிக்கும் சிறுவர்களும் வாயைப் பிளந்து கேட்டுக்கொண்டிருப்பார்கள்.

அவருடைய மகன் ஜஸ்ரின் தலயிலடித்துச் சொல்வான் 'பெரியப்பா! நீங்கள் வாத்தியார். உங்களுக்கு 'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்' என்றவரிகட்கு அர்த்தம் தெரியும் ஆனால் நீங்களுங்கூட என்னிடம் பேச என்று தொடங்கினால் கல்யாணத்தைப் பற்றியே பேசுகிறீர்கள். இதைவிட மேலானதாக ஏதாவது ஒன்று நமக்கிடையே. நம் வீடு

களிற் பேசிக்கொள்வதற்கு கிடையாதா?"

"ஏண்டா கல்யாணம் உயர் வானதில்லையாடா? நம் சமயத்திலே மெய்விவாகம் மிகப் புனிதமான தேவதிரவிய அனுமானமல்லவா?

"யார் இல்லை என்று சொன்னது? ஆனால் வளர்ந்தவர்கள் நம் குழந்தைகளின் மத்தியில் ஒரே கல்யாணத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருப்பது எந்தப் புனிதத்திற்கும் வழிகாட்டாது. இதைப் பற்றியே சதா பேசிக் கொண்டிருப்பதால், நம் குழந்தைகள் விவாகத்தின் முழு அர்த்தத்தையும் தத்துவத்தையும் விளங்கிக் கொள்ளமாட்டாமல் ஆனால் அதை விளங்கிக் கொள்ளும் முயற்சியில் விபரீதமான வழிகளிற் கவர்ச்சிக்கப்படுகிறார்கள். இதன் பலன் ஒழுக்கக்குறைவாக இருக்கமுடியுமே தவிர உயர்வானதாக இருக்க முடியாது"

"சரிதான். நீ மெத்தப் படித்துவிட்டாய்"

மேலே இரை மீட்பதைத் தொடர முடியாதபடி அவர் தங்கை, கோப்பிக் கோப்பையுடன் வந்து நின்றாள். கை நீட்டி வாங்கி இரசித்துக் குடிக்கையிற் தங்கை கேட்டாள்.

"பென்ஷன் வந்திற்றா அண்ணா?

"இந்த மாதந்தான் வரும்",

'நீங்க அவன்பொடியனை நம்பி நம்பிக் கொண்டிருந்தா, இந்த மாதம் என்ன; இந்த யுகத்திலேயே வராது. நம்ம வேலையை நாமதான் அண்ணா பாக்க வேணும் நீங்க ஒருதரம் கொழும்புக் கந்தோருக்குப் போய்வாங்களன்"

அவளுக்கு ஜஸ்ரின் மேல் ஒரு வெறுப்பு. அவன் உத்தியோகமாகி ஒன்றரை வருடங்கள் ஆகி விட்டன. அதன் பின்னர் கொழும்பிலிருந்து ஒரு நத்தாருக்கும். ஒரு அந்தோனியார் திருநாளுக்கும் வந்து போய்விட்டான், அந்த இரண்டு தடவைகளிலும் தன் இளைய மகளுக்கு அவனைக் கல்யாணம் முடித்துவிடலாம் என்று முயன்றபோது அவன் தட்டிக் கழித்துவிட்டான். பயல் பெரிய ஆள்! அவனை எவராலும் விளங்கிக் கொள்ள முடியவில்லை. என்ற ஆத்திரம் அவள் பேச்சிற் குமிழியிட்டது.

"நான் போய்ப் பார்த்தென்ன? அவன் பார்த்தென்ன? நேற்றும் ஜஸ்ரின் கடிதம் எழுதியிருந்தான். இந்த மாதம் நிச்சயமாக வந்துவிடும் என்றுதான் எழுதியிருக்கிறா .

அவர் தங்கை அதற்குமேல் பேச்சை வளர்க்க விரும்பவில்லை. ஏனென்றால் இன்னமும் அவள் ஜஸ்ரினை நம்பிக் கொண்டிருந்தாள். அதற்குள் ஏதும் இடக்குமடக்காகப் பேசிப் பெரியண்ணனையும் பகைத்துக் கொள்ள அவள் விரும்பவில்லை.

கோப்பியை முடித்ததும் வாத்தியார் மேசையிற் கிடந்த

தினசரியை எடுத்துப் படிக்கத் தொடங்கினார். வழக்கம் போல எந்தச் செய்தியுமே சுவாரஸ்யமானதாக அவருக்குப்படவில்லை. பேப்பரை மூடிவைத்துவிட்டு வீட்டுப் பாடஞ் செய்துகொண்டிருந்த பையனின் கொப்பியைப் பார்வையிட்டார். கொடுக்கப்பட்ட சில சொற்களைப் பெயராவும் வினையாகவும் பிரயோகித்து அனர்த்தமாக எழுதுவதை அவதானித்த போது வாத்தியார் வாய் விட்டே சொன்னார்.

"இந்தக் காலத்தில் தமிழ் அறிவு எவ்வளவுகுன்றிப்போச்சு. இப்பத்தே மாணவனுக்குக்கிட்ட நன்னூல் என்று சொன்னால் அது எந்தத் தியேட்டரில ஓடுற படம்? என்று கேட்பான். ஆனால் தமிழ் தமிழ் என்று கத்திறதில மட்டும் குறைச்சல் இல்ல. எட்டாம் வகுப்புப் படிக்கிற இவனுக்கு விளக்கு என்ற சொல்லைவினையாகவைத்து எழுதத் தெரியல்லை. அந்தக் காலத்தில நாங்கள் ஏழாம் வகுப்புப் படிக்கையிலேயே நன்னூல் முழுவதையும் கரைச்சுக் குடிச்சிடுவோம். ஒவ்வொரு நாளும் ஒவ்வொருசூத்திரம் பாடங்கொடுக்காட்டிச் சுண்டிக்குளி வாத்தியார் முதுகுத் தோலை உரிச்சுப்போடுவார். புணர்ச்சி, போலி, விகாரம், ஆகுபெயர் ஒரு மண்ணுமே ஒருதனுக்கும், இப்போ புதுசா வாற வாத்திமாருக்கும் கூடத் தெரியாது. என்ன இழவைத்தான் படிப்பிக்கிறாங்களோ?

"நீங்க இப்ப சும்மாதானே இருக்கீங்க அண்ணா. இந்தப் பிள்ளைகளுக்குக் கொஞ்ச நேரம்படிப்பியுங்களேன்"

"பாப்பம்" என்று சொல்லிக் கொண்டே "நீ எழுதினது பிழையடா தம்பி. 'கமலா செம்பு குடத்தைப் புளி தேய்த்து விளக்கினாள்' என்று எழுது, விளக்கு என்ற வினையடி, உயர்திணை, பெண்பால், ஒருமை, படர்க்கை இறந்தகால வினை முற்றாக வந்திருக்கிறது" என்று பையனுக்குப் படிப்பிக்கத் தொடங்கினார்.

பையனுக்கு அவர் விளக்கிய திணை, பால், எண் ஏதுமே விளங்கவில்லை. ஆனால் விளக்கினாள் என்ற சொல்லுக்கு மினுக்கினாள் என்ற அர்த்தம் மட்டும் எப்படியோ விளங்கிவிட்டது. அவசர அவசரமாகக் 'கமலா செப்புக் குடத்தைப் புளிதேய்த்து விளக்கினாள்'என்று எழுதிக்கொண்டான். மேலே அவர் தொண தொணப்பைச் சகிக்கப் பையனுக்கு விருப்பமாக இல்லை. இந்நிலையிற் பையன் டக்கென்று கொப்பியை மூடிவைத்து விட்டு இந்தக் கிழவருக்குத் தெரியாது' என்று எண்ணிக் கொண்ட பொதுவிஞ்ஞானப் பாடப் புத்தகத்தை எடுத்து ஒளி ஊடுருவுதல் என்ற பாடத்தைப் படிக்கத் தொடங்கினான்.

வாத்தியார் மீண்டும் பேசத் தொடங்கினார். இந்த நாளையில என்னத்தைப்படிப்பிக்கிறானுகள். ஒரு பிள்ளைக்கெண்டான்ன பதினாறுவரை வாய்பாடு தெரியுமா? ஒன்பதாம் வாய்பாடு மட்டும், பத்து அலகுகள் வரை தெரிந்தாற் போதும் என்றுபுதிய கல்வித்திட்டம் சொல்லுதாம். பன்னிரண்டாலபெருக்கச்சொன்

ஞானும் இரண்டாலயும் நெடும் பெருக்கலாத்தான் கணக்குச் செய்ருன் ஐஞ்சாம் வகுப்புப் படிக்கிறவன். இவனுகளின்ர புதுமுறையில படிப்பிச்சுத்தான் எஸ். எஸ். சிக்கு வந்த உடன எல்லாரும் 'கணக்கில றிபேட்', 'கணக்கில றிபேட்' என்று கத்திக் கொண்டு திரியிருங்கள். இப்ப எஸ் எஸ்சிக்குக்கொடுக்கிறகணக்குப் பேப்பரிலமுதலாம்பாகத்தை நாங்கள்ஏழாம் வகுப்புப் படிக்கக்குள்ள மனக் கணிதமாச் செய்திடுவம். இப்பதான் மனக்கணக்கு இல்லியே. அந்த நாளேயில மனக் கணக்குக்கு டக் டக் கென்று மறுமொழி சொல்லாட்டித் தலையில் 'நக்' கென்று குட்டு விழும்''

வாத்தியார் உணர்ச்சிவசப்பட்டவராய்த் தன் கை முஷ்டியால் நக்கென்று குட்டியபோது, பொது விஞ்ஞானம் படித்துக் கொண்டிருந்த பையன், குறும்பாக. ஆனல் அமுத்தலாகச் சிரித்துக்கொண்டான்.

''இந்த நாளேயில படிச்சித்தான் என்னசெய்யிறுது அண்ணு. என்னமோ எல்லாரும் பள்ளிக்குப் போருப்போல போகட்டும் என்றுதான் அவனேயும் அனுப்புறன். இன்னமும் ரெண்டு வருஷத்தில அப்பாவோட மண்வெட்டியைப் பிடிச்சிற்றுப் போறவன் தானே''

தன் தங்கை தன்னைத்தான் குத்துகிருளோ என்று ஆசிரியர் கணம் யோசித்தார். ஐஸ்ரின் சொன்னது அவர் ஞாபகத்திற்கு வந்தது. 'நம்ம பிள்ளைகளை அரைகுறையாகப் படிக்க வைப்பதுதான் நாம் செய்யும் மிகப்

---

## சுருக்! நறுக்!

சர்ச்சிலின் அரசியற் கொள்கையைப் பிடிக்காத ஒரு சீமாட்டி ஒருமுறை அவரைப் பார்த்துக் கோபத்துடன்–

''மிஸ்டர் சர்ச்சில்... நீங்கள் மட்டும் என் கணவராக இருந்திருந்தால் உங்கள் கோப்பியில் விஷத்தைக் கலந்து தருவேன்!''–என்று கூறினுள்.

நானும் உங்கள் கணவராக இருந்திருந்தால் அந்தக் கோப்பியைத் தயங்காமல் குடித்து விடுவேன்!'' – என்ருர் அமைதியாக.

பெரிய முட்டாள்த்தனம். அதிலும் நம் பெண்கள் நாவல் வாசிக்கும் அளவுக்குப் படித்து விட்டார்களானால், அவர் இந்த மண்ணிலே நிலை கொள்வதில்லை. அவர்களின் கனவுகளும் எண்ணங்களும் நம்மால் எட்ட முடியாத உயரத்திற்குப் போய்விடுகின்றன. எஸ். எஸ். சி. படித்து விட்ட ஒருபெண் தன் வாழ்வை ஒரு சாதாரணத் தொழிலாளியோடு பிணைத்துக் கொள்வதை அவமானம் என்றே கருதுகிறாள். அப்பெண்களின் கனவை நனவாக்கிக்கொள்ளும் அளவுக்கு நம் ஆண்கள் சமுதாயம் வளரவில்லை. சமூக அரசியற் காரணங்களால், இனி உத்தியோகம் என்ற இலட்சியத்தை நோக்கி வளரவும் முடியாது. இந்நிலையிற் துணிச்சலோடு, போலியாகவும் அசட்டுத்தனமாகவும், நாம் நம்மைப் பிணைத்துக்கொண்டுள்ள கட்டுக்களையும் பந்தங்களையும் அறுத்தெறிந்து சற்று அகலக் கால் வைத்து நம் பெண்களின் கனவை உத்தியோகத்தன் வேண்டும் என்ற எம் பெண்களின் இலட்சியத்தை நனவாக்குவதற்கு நம்மிடம் பொருளாதார வசதியும் இல்லை. அரசாங்க உத்தியோகத்தை நம்பிக் கொண்டு, அவ் உத்தியோகப் பெருமையில் எழுந்த போலிக் கௌரவத்தில், பொருளாதார அந்தஸ்தில் மூன்றும் படியிலுள்ள நம் நடுத்தர வகுப்பினர் என்று கற்பிதம் பண்ணிக்கொண்டு சீலைப்பேன் வாழ்வு வாழும்வரை நம் பொருளாதார நிலை உயரப் போவதுமில்லை. இந்த நிலையில் நம்மிடையே உள்ள ஒவ்வொரு உத்தியோகத்தனும், பழைய ஏற்பாடு காலத்தைப் போல இரண்டு மூன்று பெண்களைக் கல்யாணம் முடிப்பதைத் தவிர வேறு வழியுமில்லை. இந்த ஒழுக்கக் கேடு என்ற அமாவாசையை நோக்கித்தான், நாம் தேய்ந்து கொண்டு வருகிறோம்!

நேற்றுப் பிறந்த பயல் இத்தனை வக்கணையாகப் பேச எங்குதான் கற்றுக் கொண்டானோ தெரியாது. அவன் பேசுவதை ஒதுக்கித் தள்ளவும் முடியவில்லை.

அவர் மனதிலே நினைவுகள் சரக் கூடம் போடுகையிற் தங்கை கேட்டாள். "கல்யாண வீட்டுக்குப் போறதில்லியா அண்ணை?"

பேச்சுத்திசை திரும்பியது நல்லதாகவே போய் விட்டது என்று திருப்திப்பட்டவராக போகத்தான்வேண்டும்..." என்று இழுத்தார் குரூஸ் வாத்தியார்.

அவர் இழுப்பின் அர்த்தத்தைத் தெரிந்து கொண்டுவிட்டாள் தங்கை. என்னதான் மனத்துள் இருப்பினும் பெரியண்ணன் மேல் அவளுக்குமிதமிஞ்சிய பாசம் தன் வீட்டிலே சுபமாகவோ, அசுபமாகவோ எது நடந்தாலும். எல்லாவற்றிற்கும் ஈடுகொடுத்து நிற்பவர் அவர்தான். அவர் 'வாழ்ந்த' காலத்தில் மனைவிக்குத் தெரிந்தும் தெரியாமலும் அவளுக்கு எவ்வளவோ செய்திருக்கிறார். என்றைக்குமே அவர் கை ஓட்டைக் கை!

வீட்டுக்குட் சென்றவள், மீண்டு வந்து "இதை வைத்துக் கொள்ளுங்கள் அண்ணை" என்று சொல்லிக்கொண்டே பத்து ரூபாய்த்தாளை நீட்டினாள், தூரத்தில் ஒலிபெருக்கியின் அலறல் கேட்டுக்கொண்டே இருந்தது.

தொடரும்

தீபம் நவம்பர் இதழில் திரு. கு. அழகிரிசாமி தனது பேட்டியில் பாரதிக்குப் பின் பரடாத கவியே நல்லகவி எனத் தெரிவித்த கருத்துக்கு நம் கவிகளில் ஒருவரின் குரல் மறுப்பாக ஒலிக்கிறது.

செ. செ

# பாரதிக்குப் பின் தமிழ்க் கவிதை

எம். ஏ. நுஃமான்

தமிழ் இலக்கிய வரலாற்றில் பாரதியின் ஸ்தானம் ஒரு காலத்தில் எவ்வளவு தூரம் புறக்கணிக்கப்பட்டதோ; இன்று அதைவிட அதிகளவு பாராட்டுதல்களுடன் தூக்கி நிறுத்தப்படுகின்றது. தமிழ்ப் பேசுவோர் வாழும் எல்லா இடங்களிலும் ஆண்டுதோறும் விமரிசையாக விழாக்கள் எடுக்கப்படுகின்றன. பாரதியைப் பற்றிப் பலகோணங்களிலும் விமர்சிக்கப்படுகின்றது.

விழாக்களினதும் விமர்சனங்களினதும் அவசியத்தைப் பற்றி யாரும் ஆட்சேபிப்பதற்கில்லை. "இன்றும் இனியும் இனி என்றும் எங்கள் மொழி என்று வரையும் உளதோ அதுவரையும்– எந்த இடத்தில் இளந்தமிழர் கூடுவது நன்றே அங்கெல்லாம் விழா நாட்டுவதே அன்றே நம தலுவல்" என்று கூறுவதிலும் அபிப்பிராயபேதம் இல்லை. அந்த அளவுக்கு தமிழ் இலக்கியத்தில் ஒரு மகத்தான சாதனையைப் புரிந்தவன் பாரதி.

ஒட்டைக் கவிதை உடைசற் கவிதைகளே
ஏட்டிற் பெரிதாக ஏறி அரசாண்ட
காலத்தில் அந்தக் கலைஞன் புதிதாக
வாலைக் கவிதைசில செய்வு வழங்கினான்
கோயிற் புராணம் குளத்துப் புராணங்கள்
ஆய மலிந்திருந்த அக்காலம் எக்காலம்
மீழாத வண்ணம் விரட்டிப் புதுக்கவிதை
வாழ வழிகள் வகுத்தான்;
அவன் வாழ்க!

ஆனால் தமிழ் இலக்கியத்தில் பாரதியின் ஸ்தானம் என்ன? என்று நிர்ணயிப்பதில், அன்று தவறிழைக்கப்பட்டதேபோல் இன்றும் தவறிழைக்கப் படுகின்றது. பாரதி என்ன கவிதை எழுதினான்? என்ற நிலைமாறி, பாரதிக்குப்பின் என்ன கவிதை எழுதுகிறார்கள்; அவனைப் போல் யாரால் எழுத முடியும்? என்ற நிலைக்கு நாம் முன்னேறிவிட்டோம். இந்த முன்னேற்றத்தை வெகுவாக மெச்சிப் பாராட்டக் கூடிய பலவீனம் தமிழ் வளர்ச்சியில் நம்பிக்கைகொண்ட யாருக்கும் இருக்க முடியாது.

## தொடர் கதை

'என்னப்பா, போர்மன். இந்த வாரத் தொடர்கதையில் இறுதி வசனத்தை முடிக்காமல் - தொடரும் போட்டு பாரத்தை முடித்துவிட்டாயே' என்றார் ஆசிரியர்.

"இதுதான் தொடர்கதையாச்சே, சேர்!"- என்று பதில் வந்தது.

உண்மையில் பாரதியின் ஸ்தானம்தான் என்ன? பாரதி ஒரு புதிய சகாப்தத்தின் தோற்றுவாயே தவிர அந்தச் சகாப்தம் முழுவதுமே பாரதி அல்ல.

பாரதி தனக்கு முந்திய காலத்தில் ஒளி மங்கிப் போன கவிதை விளக்கிற்கு கவித்துவ நெய் ஊற்றினான். வரையறுப்புக் குட் சிக்கிக்கிடந்த கவிப்பொருளை விடுவித்து எதைப் பற்றியும் பாட முடியும் என்ற நிலையை ஏற்படுத்தினான். கவிதை மண்டபத்தின் பாதைகளை விஸ்தரிக்க முயன்றான். பழைய சங்க இலக்கியத்தின் செழுமையை காலத்தின் தேவைக்கேற்ப நவீனப் படுத்த விரும்பினான். ஆனால் சொற்ப ஆயுளிலேயே மரணித்து விட்டான்.

பாரதி வாழ்ந்த சொற்ப காலத்துக்குள்ளேயே பாரதியைத் தாக்கியவை அனந்தம். தேசவிடுதலை, சமூக சீர்திருத்தத்தின் தேவை என்பன பாரதியின் கவித்துவத்தின் கணிசமான பகுதியை அபகரித்துக்கொண்டன. சொந்தவீட்டுப் பஞ்சத்தை அவர் எவ்வளவுதான் அலட்சியப்படுத்த முனைந்தாலும், அது அவரின் கவித்துவத்தில் பாதிப்பை ஏற்படுத்தியே இருக்கின்றது. இக்காரணங்களினாற்றான் பாரதியிடம் தேங்கிக் கிடந்த ஆற்றல் கவித்துவம் ஆகியவற்றின் அளவுடன் ஒப்பிடும்போது பாரதிசெய்தவை சொற்பமாகவேதோன்றுகின்றது

ஆயினும் பாரதி தோற்றுவித்த பாதைஒருசகாப்தமாகவே விரிந்துவிட்டது ஆனால் பாரதி ஒரு சகாப்தத்தின் தோற்றுவாய் என்பதனாலேயே மட்டும் அவனுடைய எல்லா எழுத்துக்களும் அமர சிருஷ்டிகள் ஆகமாட்டா. சில புற நடையாகவும் அமையலாம்.

"பாரதி ஒரு புதிய இலக்கிய அஞ்சலோட்டத்தை ஆரம்பித்து வைத்தவன்" என்று கவிஞர் நீலவாணன் ஒரு சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டார். அவன் ஓடி வந்த பாதையின் எதிரே அவனைவிட வேகமாக ஓடக்கூடிய எத்தனையோபேர்காத்துக்கொண்டிருப்பார்கள்—இருக்கிறார்கள் என்பதை மறந்துவிடக்கூடாது.

ஆதலினாற்றான் பாரதிக்குப் பின்னர் கவிதைகளே தோன்றவில்லை என்பதும், பாரதிக்குப் பின் பாடாத கவியே நல்லகவி என்று சொல்லி பாரதியுடையதே போதும்இனிப்பாடவே தேவை இல்லை என்று வரையறுத்து விடுவதும் பொறுப்புள்ளவர்கள் கூறும் பொறுப்புள்ள கருத்துக்களாகமாட்டா. போது

மென்ற பெரிய மனசு எல்லாத் துறைகளுக்கும் பொருந்தி விடுவதில்லை. இப்படி எல்லோரும் கருதி இருந்தால் எந்த நாட்டிலும் இலக்கியங்களே தோன்றி இருக்க மாட்டா. வள்ளுவனைப் பார்த்து விட்டு இளங்கோவும், இளங்கோவைப் பார்த்து விட்டுக் கம்பனும் கம்பனைப் பார்த்துவிட்டு பாரதியும் பாடாமல் இருந்ததில்லை. பாரதியைப் பார்த்து விட்டு இனிப்பாடாதீர் என்பது ஆரோக்கியமற்றகருத்தேயாகும். தமிழ்நாடு தன் கவித்துவத்தைச்சினிமாவிடப் பறிகொடுத்து விட்டு நிற்கும் இந் நேரத்தில் பலரிடம் இருந்து இவ்வாறான கருத்துக்கள் வெளிவருகின்றன. ஆனால் தமிழ்நாட்டுக்கு வெளியிலேயும் தமிழ் உயிர் வாழ்கின்றது என்பதை அவர்கள் மறந்து விடுகின்றார்கள்.

பாரதிக்குப் பிறகு தமிழ் நாடு கவிதைக்காக என்ன செய்தது ? பாரதியின் வழியைப் பின்பற்றுவதாகச்சொல்லிக்கொண்டு கவித்துவத்தின் காம்பீர்யத்தைப் புலப்படுத்தச் சக்தியற்ற எளிய சிந்து உருவங்கள் தமிழ்நாட்டில் பல்கிப் பெருகின. பாரதிக்குப் பின் வசனத்தின் எளிமை கவிதைக்கு வந்து விட்டதாகக் கூறி உடைத்து நீட்டிய வசனங்கள் கவிதை என்ற பெயரில் குவிந்து விட்டன.

இற்றைவரை நூற்றுக்கணக்கான கவிதைநூல்கள் தமிழ் நாட்டில் இருந்து வெளிவந்துள்ளன. அவற்றின் பொருள்பற்றிய பொதுப் பண்புகள் அநேகமாக ஒரே வட்டத்துக்குட்தான் சுற்றுகின்றன. தமிழ், பெண்மை, இயற்கை இன்பம், காதல், சமூகச் சீர்திருத்தங்கள் இவைகளே அவற்றின் பொருள்கள். பாரதிதாசனும்சரி அவரின் பரம்பரையினரும் சரி பாரதியைப் பின்பற்றுவதாகச் சொல்லிக் கொண்டுசெய்ததெல்லாம் இவ்வளவுதான். சில இடங்களிலே ஈர்க்கும் கவிதையின் கவர்ச்சியைத் தவிர மற்ற எல்லா இடங்களிலும் கவித்துவத்தின் ஆழமும், உருக்கமும் மங்கியும் மரத்தும் தான் காணப்படுகின்றன. தமிழ் நாட்டைப் பொறுத்தவரை பாரதிக்குப் பின் தமிழ்க்கவிதை பற்றிய அவர்களின் கூற்று உண்மையானதே.

ஆனால்

கவிதை என்பது இவைகளுக்கு அப்பாலும் பரந்து கிடக்கின்றது. கவிதை என்ற சமுத்திரத்தின் சில துளிகளே இவை. முதிர்ச்சி அடைந்த ஆத்மாவின் இனிய கானமே கவிதை; மனிதத் தன்மையின் சாரம் கவிதை. புனிதமிக்க மனிதத் தன்மையையே நாம் மனிதம் என்கின்றோம். அது அளவற்றுப் பரந்தது. அந்த மனிதமே கவித்துவத்தின் உள்ளீடாகிய கவிதம். இயற்கை வர்ணனைகளும் கற்பனா அலங்காரங்களும் கவிதையின் ஒரு சிறிய கூறேயாகும். புதியதாய் மலர்ந்த பூ ஒன்லைப் பார்த்து விட்டு ''ஆஷா தேவதைஒருத்தி பூவாய் மாறி தென்றலில் சிலிர்த்து நடனமாடுகிறாள்'' என்பது

வெறும் கற்பனை. 'என்னரும் நெஞ்சே நீயும் ஒரு பூவாய்மாறி தூய்மைமிக்க வாசனை வீசுவது எப்போது ?' என்று இரங்குவது சீரிய மனித உணர்ச்சி.

அந்த உணர்ச்சியைப் பிரதிபலிக்கும் கவித்துவம் தமிழ் நாட்டில் இருந்து நழுவி குமரி முனைக்குத் தெற்கே குடி புகுந்து விட்டது. தற்காலக் கவிதை, தமிழ் நாட்டில் இருந்து தனக்குப் பெரிதாக ஒன்றும் கிடைக்காது என்று உணர்ந்து கடல் கடந்து ஈழத்துக்குட் புகுந்து விட்டது. பாரதிக்குப் பிறகு தமிழ்க்கவிதை பற்றிக் கருத்துத் தெரிவிக்க முனைபவர்கள் குமரி முனைக்குத் தெற்கே தம் பார்வையைச் செலுத்தி விட்டே தெரிவிக்க வேண்டும்.

பிரசுர வசதிகளைக் கொண்டு புற்றீசல்கள் போல் வெளிவரும் போலிகளுக்கு மத்தியில் வெளிவரக் கூடாது என்றுதானோ என்னவோ இங்கு அற்புதமான கவிதைச் சிருஷ்டிகள் கவிஞர்களின் பைல்களுக்குள் சுகமாகத் தூங்குகின்றன. தமிழ் இலக்கியத்துக்கு வழக்கமாக உள்ள துரதிஷ்டங்களுள் ஒன்றுதான் இதுவும்.

புள்ளி அளவில் ஒரு பூச்சியை அறியாமல் கொன்றுவிட்டு இதயம் கலங்கி இரங்கும் கவிதைகள் இங்குதான்தோன்றுகின்றன. கல்லடுக்கிமேலேகனத்த உருளைகளைச் செல்லவிட்டுச் செல்லவிட்டுச் செய்தபெரும் வீதியில் ஒரு சிறிய இடுக்கில் தனித்து முளைத்திருந்த ஒருசிறு புல்லில்கூட ஆழப்பதிந்த அறத்தைக் கண்டு வாழ்த்தும் கவிஞர்கள் இங்குதான் வாழ்கிறார்கள். ஒரு சாதாரண மனிதனின் சரித்திரத்தை ஒப்பற்ற காவியமாக்கும் கவிஞர்கள் இங்குதான் வாழ்கிறார்கள் இன்றைய விஞ்ஞானப் புதுமைகளின் முடிவு என்ன ? என்பதற்கு அற்புதமான காவியத்தில் பதில் சொல்கிறார்கள் அவர்கள் அவர்கள் மனித மனத்தின் ஆழத்தில் நுழைந்து பார்க்கிறார்கள். பரந்துபட்ட பொருள்களும் கவித்துவ உணர்வும் இங்குதான் சங்கமிக்கின்றன. 'பாட்டுக்கொருவன் எனப் பாரதியைச் சொன்னாலும் பாட்டுக்கு நாங்கள் பலம்பர் அவன் வழியை நீட்டி வளர்க்க நினைந்து பிறந்துள்ளோம், என்று நெஞ்சு நிமிர்த்திச் சொல்லும் கவிஞர்கள் இங்கு கணிசமான அளவில் இருக்கின்றார்கள். இவர்கள் பாரதியைக் கண்டு பயப்படுவதும் இல்லை; மலைத்துப் போவதும் இல்லை. பாரதியின் ஸ்தானம் என்ன என்று இவர்களுக்குத் தெரிகிறது. அவன் தொடங்கி வைத்ததை வெற்றிகரமாகக் கொண்டு செல்வதுதான் நாம் அவனுக்குச் செய்யக் கூடிய நன்றி என்பது இவர்களுக்குப் புரிகிறது. அவர்கள் பாரதியின் மீது அன்பு செறிந்த அநுதாபம் கொண்டுள்ளார்கள். பாரதிக்காக இப்போது நாங்கள் செய்வதைப் போல பாரதி வாழ்ந்த பொழுது இப் பரப்பில் ஓர் சிறிது கூடத் தமிழர்கள் உற்றிருந்தால் பஞ்சியிலே செய்த குயிற்பாட்டைப் போலன் மிஞ்சும் கவிதை

வெறியை நெறிப்படுத்தி இப்போது நாங்கள் எழுதும் கவிதைகள் போல் அப்போதே தந்திருத்தல் ஆகும். எனில் ஐயகோ... அப்போது நாங்கள் அவனையல்ல கம்பனையோ எப்போதோ செத்த எவனையோ போற்றி நின்றோம்.'' என்று தங்கள் நிலையோடு அவனை ஒப்பிட்டுப் பார்த்து அவனுக்காக வருந்துகிறார்கள்.

பாரதிக்கு வந்த நிலை இன்றையக் கவிஞர்களுக்கும் வரக்கூடாது. பாரதியை ஒதுக்கித் தள்ளிய பண்டித மனப்பான்மையைப் போல்; பாரதிக்குப் பின் உள்ள கவிஞர்களை ஒதுக்கித் தள்ளும் அளவுக்குப் பாரதி வழிபாடு வேரூன்றுவதை நாம் அனுமதிக்கக் கூடாது. அதனால் பாரதி நன்மையடையப் போவதும் இல்லை; தமிழ் மொழி நன்மை அடையப்போவதும் இல்லை. தங்களைச் சுற்றி உள்ள சூழலுக்கு வெளியே தமிழ்க் கவிதைப் பயிர் செழித்து வளர்கின்றது என்பதை அலட்சியப்படுத்துவோர் வளரும் தமிழுக்குப் பெரிய துரோகம் செய்கிறார்கள்.

''வாழுங் கவிஞர் வலியைப் புறக்கணிக்கும்
கோழைத் தனமும் மடிந்த குறுங்கவிஞர்
ஏழ்மைக் கவியை எடுப்பென்று தூக்குகிற
கீழ்மைத் தனமும் ஒழிக! கிறுகிறென்(று) அப்
பாரதிதான் செய்த பணியால் பலர்பலராய்
ஊரில் உதிக்கும் உயர்ந்த கவிஞர்களின்
பேரை அறிக பெரிதும் அவர் முயன்று
செய்து தரும் நூலைத் தேடிச் சிறப்புணர்ந்து
கையில் எடுத்துக் கவனித்து அவைகளை நாம்
கொஞ்சம் படித்தால் கொழும்பும் தமிழ் வளர்க்கும்
பிஞ்சிலே வெம்பி விழாமல் பெரிதாகி
முற்றிக் கனிந்து முழுமைப் பழமாகி
இற்றைக் கவிதை இனிக்கட்டும் எங்களுக்கு

(பாடல்கள் மஹாகவி)

## யதார்த்தம்

எமிலி ஜோலா ஒரு மதுபானக் கடையிலிருந்து உணவருந்திக் கொண்டிருந்தான். திடீரென அருகிருந்த வீட்டை பொலீசார் முற்றுகையிட்டனர். அது ஒரு விபசாரவிடுதி. அங்கிருந்து ஒரு பெண் தப்பி ஓடிவந்து அவனிடம் அடைக்கலம் தேடினாள். இரக்க சிந்தை கொண்ட அவன் அவளுக்கு உணவுமளித்து, பொலிசாரிடமிருந்தும் காப்பாற்றினான். அவள் அவன் பரிவுக்குட்பட்டு தன் சோகமிக்க உணர்ச்சிமிக்க வரலாற்றைக் கூறினாள். போயும் விட்டாள். இளைஞன் அவள் வரலாற்றைக் கலைமிளிர ஒரு நாவலாக வடித்தான். உலகம் புகழும் எழுத்தாளனான். பிரெஞ்சு இலக்கியத்தின் பிதாமகனுமானான். அவன் மதுபானக் கடையில் சந்தித்த பெண்ணின் கதைதான்.--நா நா

# தண்டலை

கவிஞர். க. வே. பஞ்சாட்சரம்

பூமாலைப்பதிப்பகம்.28 பாலாவிவீதி யாழ்ப்பாணம் ரூ.1-50

கவியரங்கக் கவிதைகள் பதினெட்டை இணைத்துத் ‘தண்டலை’ என்னும் அழகுப் பெயரில் கவிஞர் ச. வே. அவர்கள் வெளியிட்டுள்ளார்கள். கவிதை என்பது உள்ளத்தூறும் உணர்ச்சிகளை பொருத்தமான சொற்கள், சொற்ருெடர்கள் மூலம் வெளிக்கொணர்ந்து, படிப்போரையும் கவிஞன் கொண்ட உணர்ச்சிக்கு ஆட்படச் செய்யும் கலையாகும். கவிஞன் பாடல்கள் ஒவ்வொன்றிலும் ஏதாவது ஒரு படிப்பினை இருக்க வேண்டும் என்பது மேனுட்டு விமர்சகர்களின் கூற்று

கவிஞர் ச. வே. அவர்கள் நாடறிந்த, ஸ்ரீ லங்கா சாஹித்திய மண்டலப் பரிசு பெற்ற ஆற்றல் மிக்க கவிஞர். அவரின் பாடல்கள் மரபு வழி நின்று புதுமையை நோக்கும் தன்மையின. இதனுல் இவரது கவிதைகள் ஒரு போதும் கவிதை நிலையினின்றும் பிறழாதன. சொற்செறிவிலும், பொருட் செறிவிலும் உன்னத உணர்ச்சிகளை வாசகனுக்கு அளிப்பவை. இவரது கவித்திறனை காவியம், குழந்தைப் பாடல்கள் முதலியவற்ருல் ஏற்கனவே இரசித்த வாசகர்களுக்கு- ‘தண்டலை’ கவியரங்கக் கவிதைகள் ஓர் உன்னத பரிசாகும். ஆனுல்-

‘கவிதைத் தொகுப்பு’ என்ற நிலையில் ஒரு கவிஞனின் பல்வகை நிலைகளிலும் அவனது நோக்கு, கருத்து, போதம் என்பன இத்தொகுப்பில் வெளியாகவில்லை என்றே கூறல்வேண்டும். அதாவது ஒரு முழுமையான கவிதைஉணர்வினை இத்தொகுப்பால் பெற்றுவிட முடியாது.- காரணம் இது கவியரங்கக் கவிதைகளாக-குறிப்பிட்ட வரம்பிற்குள் இயங்கியவையாக இருப்பதனுலாகும். அதாவது-

கவியரங்கங்கள் நடாத்துங்கால் நிலவிய இலக்கிய சமூக சமயப் பிரச்சனைகளே இக் கவிக் கோவையின் பொருளாக அமைகின்றது. எனவே, அப்பிரச்சனைகள் நீக்கப்பட்டுவிட்ட காலத்தில் அவை வெற்றுக் கவிகளாக மாறிவிடுகின்றன மேலும், இக் கவிதைகள் மக்களுடன் நேருக்கு நேர் நின்று உரையாடும் தன்மையினைக் கொண்டு விளங்குவதால், கவிதையின் இயல்பான அனுபவ உணர்வினைப் பெறமுடியாது போய்விடுகின்றன. கவிஞரின் பல்வகைப் பாடல்களும் இணைந்த தலைப்பாக இது இருந்திருப்பின் இக்குறைபாடு இருந்திராது. ஆயினும்-

காரேறிப் பூத்துக் கனநீர் பொழிந்தேரி
நீரேறிப் பூத்து நின்ருட நெற்கதிர்கள்
போரேறிப் பூத்துப் பொலியட்டும். திருமங்கை
தேரேறிப் பூத்துச் செழும்பவனி கொள்ளட்டும்
கூரேறிப் பூத்த கொங்கையரின் கற்போங்கி
வேரோடிப் பூத்து விளங்கட்டும் நல்லறங்கள்

—போன்ற பாடல்களில் கவிஞரின் தனித்தன்மையைக் கண்டு, இலக்கிய இன்பத்தை அனுபவிக்கவும் முடிகிறது. ஈழத்து இலக்கியப் பிரியர்கள் கட்டாயம் வாங்கவேண்டிய நூல்.

சித்தா : இவ்வாறு நீங்கள் செய்வது மகாதவறு. பாவமும் கூட. துறவியான ஒருவனை பூர்வாசிரமத்தொடர்பு காட்டித் தடுப்பது மகாத்தவறு. பச்சைக்கிளிக்கு பொற் கூண்டைக் காட்டினாலும், அது வானத்தில் சுதந்திரமாகப் பறக்கவே இச்சை கொள்ளும். நீங்கள் தொடர்ந்தும் இப்படி நடந்து கொள்வீர்களாயின் நான் இந்த எல்லையை விட்டுப் போய்விடுவேன்... என்னைப் பாசத்தளைபிட்டு சிறைப்பிடிப்பீர்களாயின் அது எனக்கு நீங்கள்செய்யும் மகாத்துரோகமாகும்... என் மனம் தறியிலடங்காத யானையாக விளங்குகின்றது... அதற்கு ஞானம் என்கின்ற அங்குசத்தைத் தவிர வேறு எதுவுமே வேண்டியதில்லை... நீங்கள் போய் வரலாம்.

சுத்தோ : மகனே உன் முடிவே முடிவானதா... நான் திரும்பினால் எங்கே நம் இளவரசன் என்று கேட்கும் மக்களுக்கு என்ன பதில் சொல்வது?...

சித்தார் : என் உறுதியான அன்பை அவர்களுக்கு விளக்கிக் கூறுங்கள்... உங்கள்மீதுள்ள அன்பால் மூப்பு, பிணி இறப்பு என்கின்ற மூன்றையும் வெற்றிகாணச் சென்றுள்ளார். திரும்பினால் வெற்றியுடனேயே திரும்புவார். இல்லாவிட்டால் தம் முயற்சிக்கே பலியாகி விடுவார் என்று சொல்லுங்கள். போய் வாருங்கள்.

திரை

## காட்சி 6

[தேவதத்தன் அரண்மனை அந்தப்புரம். எங்கும் சிருங்கார ரசக் கோலம். சிலைகளில், சித்திரங்களில் இன்பக் கலைகளே மின்னுகின்றன. நாடியில் உள்ளங்கையை வைத்து நீண்ட சிந்தனையில் தேவதத்தன் ஆழ்ந்துள்ளான். சுந்தரி வருகின்றாள். பதினாறு வயதுப் பிராயமும் நிரம்பாத எழிற் கன்னி பனித்துளி தாங்கி நிற்கும் புதுமலர்.)

சுந்தரி : (வந்து)பிரபு

தேவதத்தன் : ......

சுந்தரி பிரபூ!

தேவன் : .........

சுந்தரி : (அவன் காதருகே தன் கைகளைக் கொண்டு சென்று கை வளையல்களைக் குலுக்குகின்றாள்) பிரபூ!

தேவன் : (சிந்தனை கலைந்த கோபத்துடன்) இதென்ன விளையாட்டு சுந்தரி! ஒரு கணம் அமைதியாக இருக்கவிடமாட்டாயா?

சுந்தரி : (திடுக்கிட்டு) பிரபூ! என்ன பேசுகிறீர்கள்... நீங்கள்தான் பேசுகிறீர்களா?

தேவன் : (ஆதுரத்துடன் திரும்பி) என்னை மன்னித்துவிடு சுந்தரி. என மனக் கவலையில் உன்னைக் கடிந்துகொண்டுவிட்டேன்.

சுந்தரி : (வியப்புடன்) என்ன மனக்கவலையா? என் அந்தப்புரம் வந்த பின்பும் உங்கட்கு மனக்கவலையா? அப்படி என்ன கவலை வந்து விட்டது தங்களுக்கு இப்போது?

தேவன் : ஒன்றுமில்லை சுந்தரி. உ...ம் (பெருமூச்சு விடுகிறான்)

சுந்தரி : ஒன்றுமில்லாமற்றான் பெருமூச்சு விடுவார்களா? எனக்குக் கூடச் சொல்லக்கூடாதா... என்ன இருந்தாலும் நான் மாற்றாள் தானே. தாசிகுலப் பெண்தானே? (பாசாங்குடன் விம்முகிறாள்)

தேவன் : (எழுந்து வந்து) அடடா! என் கவலையில் இது வேறு- சுந்தரி இப்போது ஏன் அழுகிறாய்

சுந்தரி : (விம்மியபடி) உங்கள் கவலையை நான் அறியக் கூடாதா?

தேவன் : எனக்கு கவலை என்றும் சொல்லமுடியாது... ஒரு நினைவு. வரும் வழியில் அந்தச் செய்தியைக் கேட்டதிலிருந்து அது தான்...

சுந்தரி : (ஆவலுடன்) அப்படித் தங்களை சிந்திக்க வைத்த செய்தி தான் என்ன பிரபு. நான் அறியக்கூடாதா?

தேவன் : அதனைக் கேட்டதிலிருந்து அழுவதா, சிரிப்பதா என்றே எனக்குத் தெரியவில்லை... சுந்தரி...

சுந்தரி : (பிணங்கி) எனக்கும் கூறுங்கள் என்றால் என்னைத் தவிக்க விடுவதுதான் உங்கள் அன்பா?

தேவன் : அதற்குள் அவசரமா...... சித்தார்த்தன் துறவுபூண்டு நாட்டை விட்டே போய்விட்டானாம்.

சுந்தரி : (ஆச்சரியத்துடன்) என்ன! உண்மையாகவா?

தேவன் : ஆமாம் சுந்தரி அதனை நினைத்ததால்தான்...

சுந்தரி : அதற்காகவா தாங்கள் இவ்வளவு கவலைப்பட்டீர்கள். உங்களுக்கும் அவருக்கும்தான் ஜன்மப் பகையாச்சே.

தேவன் : உண்மைதான் சுந்தரி .. என்ன இருந்தாலும் என் சகோதரன் அல்லவா?...

சுந்தரி : (ஆச்சரியத்துடன்) என்ன! சித்தார்த்தர் உங்கள்சகோதரரா? எனக்கு இவ்வளவு காலமும் தெரியாதே!

தேவன் : என் தந்தை சுப்பிரபுத்தனும், சித்தார்த்தன் தாய் மாயா தேவியும் உடன் பிறந்த சகோதரர்களல்லவா?

சுந்தரி : அப்படி இருந்துமா... தங்களுக்கும் சித்தார்த்தருக்குமிடையில் இவ்வளவு பகைமை ஏற்பட்டது?

தேவன் : ஆமாம் சுந்தரி... அவன் என் சகோதரனுக இருந்தும் என் வாழ்வில் எனக்கு நியாயமாகக் கிடைக்கவேண்டிய ஒவ்வொன்றையும் கிடைக்க வொட்டாமலே செய்து வந்திருக்கிறன்... அதனை மறக்கமுடியுமா; நெஞ்சம்தான் மன்னிக்குமா?

சுந்தரி : (வியப்புடன்) அப்படியா?

தேவன் : வேறென்ன? சின்னஞ்சிறுவயதிலே நான் வேட்டையாடும் பறவைகளை சப்தமிட்டுக் கலைப்பான். இல்லாவிட்டால் காயப்பட்ட பறவைகளை எடுத்துச் சென்று வைத்தியம் பார்ப்பான். என்னிடம் தரவேமாட்டான். என் செயல்கள் ஒவ்வொன்றும் மறச் செயல்கள் எனக் கண்டிப்பான். இதனுல் எல்லாரும் என்னைக் கொடியவன் என்றே கருதத் தொடங்கிவிட்டார்கள்... ஆனுல் அது எல்லாவற்றையும் நான் மறந்துவிடுவேன்... அதனை மட்டும் மறப்பேனு?

சுந்தரி : என்ன அது...?

தேவன் : (சமாளித்து) ஒன்றுமில்லை...

சுந்தரி : (சிணுங்கி) எனக்குக் கூறக்கூடாதா?

தேவன் : கூறுவதைக் கேட்டுக்கோபப்படமாட்டாய் என்றுல் கூறுவேன்

சுந்தரி : சரி... கூறுங்கள்...

தேவன் : யசோதையின் சுயம்வரதினத்தன்று அவளது அழகைக்கண்டு என்னையே மறந்துவிட்டேன். மணந்தால் அவளையே மணப்பது என்றும் தீர்மானித்துக் கொண்டேன். அதற்கு ஏற்றவிதமாக சுத்தோதன மகாராஜாவும் வீரப் போட்டியை நடாத்துவதாக அறிவித்தபோது எவ்வளவு மகிழ்ந்தேன் தெரியுமா, சுந்தரி. சித்தார்த்தனை எல்லாப் போட்டிகளிலும் வெற்றி கொண்டுவிடலாம் என எண்ணினேன்... போட்டிகளில் சமனுகவே வந்தோம். ஆனுல் இறுதியில்...

சுந்தரி : என்ன இறுதியில் நடந்தது?

தேவன் : எமதுபாட்டனுர் சிம்மஹனுவின் வில்லினை யார் எடுத்து எய்கிருர்களோ, அவர்களே வென்றவர்களாவர்கள் என்ற தீர்மானத்தைக் கொண்டுவந்தேன். ஏனெனில் அந்த வில்லை நாணேற்றுவதற்கு நாலைந்துபேர்கள் வேண்டும். அதில் நிச்சயம் அவன் தோற்றுவிடுவான் என எண்ணினேன். ஆனுல்—

சுந்தரி : என்ன நடந்தது பிறகு ?...

தேவன் : அவன் வில்லை வளைத்து நாணேற்றி விட்டான். என் கண் முன்னுலேயே நான் விரும்பிய யசோதா அவனுக்கு மாலையிட்டுவிட்டாள்... அப்போது ஏற்பட்ட நெஞ்சக்காயம் இன்னமும் ஆறவில்லைச் சுந்தரி...

சுந்தரி : அப்படியென்றுல் தாங்கள் சித்தார்த்தனின் துறவுக்காக ஏன் கலங்க வேண்டும் ?

தேவன் : நான் சித்தார்த்தனுக்காக கலங்கவில்லை சுந்தரி. யசோவை எண்ணியே கலங்குகிறேன். அவளின் இளமை, அழகு, செல்வம் எல்லாம் மண்ணுகிப் போய்விட்டனவே... இனி அவள் காட்டிலெறித்த நிலவு. மண்ணிற் கலந்த பால், கடலில் பெய்த மழை... சுந்தரி இதை எண்ணினுலே என்னுல் தாங்கவே முடியவில்லை...

சுந்தரி : அதற்காகத் தாங்கள் என்ன செய்ய முடியும்...

தேவன் : நான் யசோதரா மீது கொண்ட காதலுக்காக அவனுக்கு உதவப் போகிறேன்... துறவு பூண்ட சித்தார்த்தனை சாம, பேத, தான தண்டங்களைப் பயன்படுத்தித் திரும்பச் செய்யப் போகிறேன்.

சுந்தரி : இதனுல் உங்களுக்கு என்ன நன்மை ?

தேவன் : யசோதையின் நல் வாழ்வுதான்...

சுந்தரி : (சிணுங்கி) அப்படியானுல் என்மீது கொண்டுள்ள அன்பு...?

தேவன் : குறையாதது என்றும்உன் அன்பிற்குரியவனே,

சுந்தரி : அதுதான் யசோதையை எண்ணி வாடுகிறீர்களா ?

தேவன் : இல்லை... இல்லை... அது ஒரு துன்பமான கனவு...என் முதல் காதல் விளைத்த பேரன்பு. அதற்காக நான் செய்யும் உதவி... கடமை... தவருக என்னை எடை போடாதே சுந்தரி...

[தூரத்தே மணியோசை கேட்கிறது]

வா! சுந்தரி... நடுச்சாமம் தாண்டிவிட்டது. இனியும் விழித்திருந்தால் உன் உடம்புக்கு ஆகாது...

[அணைத்தபடியே படுக்கை நோக்கிச் செல்கிருன்]

திரை




## காட்சி 1

[ஏழாண்டுகளின் பின்னர், மகத நாட்டின் நைரஞ்சனை நதிக் கரையிலுள்ள உருவேலா வனத்தில், அஜபால ஆலமரத்தினடியில், சித்தார்த்தன் பத்மாசன கோலத்தில் அமர்ந்திருக்கின்றான். தொடர்ச்சியான [1] ஆறு வருடக் கடுந்தவத்தினால் அவன் உடல் மிகவும் மெலிந்து காலவல்லிக் கொடியின் கணுக்களாக மூட்டுகள் வெளியே தெரிகின்றன இடுப்பு ஒட்டகத்தின் காலடியாக ஒடுங்கியுள்ளது. கண்கள் குழிவிழுந்து, வாடிய பூசணியின் சுருங்கிய சருமமாய், வயிறும் முதுகும் ஒட்டிக் காணப்படுகின்றது. இரு துறவிகள் அவர் முன்னாலிருந்து பேசிக் கொண்டிருக்கின்றார்கள்]

**துறவி 1 :** ஆஹா!... இவரல்லவோ துறவி... இவரிங்கு வந்த ஆறு வருடங்களாகப் பார்க்கிறோம். சமாதி நிலைகுலையாமல் அப்படியே இருக்கிறாரே!...

**துறவி 2 :** அது மட்டுமா... இவரது தவநிலையே இதுவரையாரும் மேற்கொள்ளாததாகவல்லவா இருக்கின்றது!... இந்த உயர் நிலை எய்த எவ்வளவு மனத்திண்மம் வேண்டும்.

**துறவி 1 :** நம் தவங்களை விட மேலானதாகவல்லவா இருக்கின்றது. எத்தனை எத்தனை விதமான முறைகளில் தனது தவத்தை இவர் மேற்கொள்கிறார்...

**துறவி 2 :** இது எல்லாருக்கும் சித்தியாகும் முறையாக இல்லையே!

---

[1] புத்தசரிதம்-பகவான் வாக்கு.

**துறவி 1 :** அதுதான் இவரது தவத்தின் சிறப்பு. முதலில் தவத்தை ஆரம்பிக்கும் போது மனதை மட்டும் அடக்கினர். பின்பு மூச்சை அடக்கினர். மூச்சு கண் வழியே வெளிவந்தது. கண்களையும் அடக்கினர். காது வழியாகவே வெளியாயிற்று. தற்போது அதனையும் அடக்கி விட்டார் போலிருக்கிறதே.

**துறவி 2 :** ஆமாம்... அதுதான் எந்தவித சலனத்தையுமே காண வில்லையே. எனக்கும் சந்தேகமாகத்தானிருக்கிறது...... ஒரு வேளை...

**துறவி 1 :** சீ! அப்படிச் சொல்லாதே! உண்மையொளி காணும் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் அவருக்கு புறச் சிந்தனையே அற்றுவிட்டது. உயிர் போய் விட்டால் சடலம் இவ்விதம் இருக்கமாட்டாது.

**துறவி 2 :** ஆமாம்... அதனை நான் மறந்தே போனேன். உயிர் போயிருந்தால் உயிர்க் கூடு குருவிகளற்ற தூங்கணாங் கூடாக விழுந்திருக்குமே.. அப்பப்பா... என்ன தபஸ்.. என்ன தபஸ்... புயலடிக்கவும் - மழை பொழியவும்.. வெயில் காயவும் கொஞ்சமும் சலனமுமில்லாமல் இப்படிஆழ்ந்திருக்கிறரே.

**துறவி 1 :** அவர் மகான் அப்பா... மகான்... நம் போன்ற வலுவற்ற துறவியல்ல அவர். அதோ... அவரருகே சென்று கேள் - அவரின் உடலிலே ஏற்படுகின்ற புரட்சிகரமான மாற்றங்கள் ஏற்படுத்தும் சப்தங்களை... உடல் அசையாதிருக்க... காய்ந்து விட்ட சுரைக்காய் கடகடப்பது போன்ற சப்தஜாலங்களை...

**துறவி 2 :** அதுமட்டுமா... இவரது உடல் காய்ந்து விட்ட காலவல்லிக் கொடிகளாக, மூட்டுக்கள்தெரியவல்லவா விளங்குகிறது... ஒருவேளை இந்த முயற்சியில் உயிரே பலியாகிவிட்டால் முயற்சி என்னுவது...?

**துறவி 1 :** ஒருபோதும் இவரது புனித முயற்சி வீண் போகாது. இல்லாவிட்டால் நம் குருநாதர் இவ்வளவு காலம் இப்படியிருக்க மாட்டார்...?

[சித்தார்த்தர் அசைந்து கண் விழித்துப் பார்க்கிறர்]

**துறவி 2 :** (பரபரப்புடன்) அதோ!... அவர்விழித்துப் பார்க்கிறர்...

**துறவி 1 :** (பயத்துடன்) ஒருவேளை நம் பேச்சுக்கள் அவரது தவத்தினைக் குலைத்திருக்குமோ... அபசாரம்...அபசாரம்...

**சித்தார்த்தர் :** (தணிந்த, கனிவானகுரலில்) நீங்கள் பயப்பட வேண்டாம். நீங்கள் எனக்கு உதவிதான் செய்திருக்கிறீர்கள்... நீங்கள் சொல்வதுபோல்... என் உயிர்க் கூட்டிலிருந்து, உயிர்ப் பறவை பறந்துவிட்டால் என் முயற்சிகள்... நான் தொடங்கிய புனிதயாத்திரை என்னுகிவிடும் என்பதனை நான் சிந்திக்கவேயில்லை...

துறவி 2 ; (பயத்துடன்) சுவாமி... மன்னிக்கவேண்டும்... நாங்கள் உங்கள் சீடர்கள்...

சித்தார் : சீடர்கள்... (சிரித்து) அப்படியானுல் நான் குருவா? நல்ல வேடிக்கைதான். குருடன் குருடனுக்கு வழிகாட்டிடும் விேேனாதம் தான்... எனக்கே திசைபுரியவில்லை.

துறவி 1 : என்ன சொல்கிறீர்கள் சுவாமி ?...

சித்தா : ஆமாம்... நான் உடலை வருத்தினேன்... பயனில்லை... என் மனதை அடக்கி உண்மையொளியை உபாசித்தேன். முயற்சி பலனளிக்கவில்லை... அதனுல்... உடலை... உள் மூச்சை எல்லாம் உள்ளடக்கி மோனப் பெருவெளியில் ஆறு ஆண்டுகளாகச் சஞ்சரித்தேன்... பலனே கிட்டவில்லை... ஆனுல் என உடலின் ஜீவ ஒளி கொஞ்சம் கொஞ்சமாக குறைறுவதைக் கண்டேன்... உடல் என்னும் நெய் விளக்கின் தீபச்சுடர் நெய்வற்றி அணைந்து விட்டால்... நான் வெறும் பிணமாவேன்... என் முயற்சி பாழாகும்... இந்த உண்மையை உங்கள் உரையாடல் உணர்த்திவிட்டது...

துறவி 2 : என்ன சுவாமி... இப்படிக் கூறுகிறீர்கள் ? உங்கள் முயற்சியில் குறைபாடா ?

சித்தா : ஆமாம். எங்கோ தவறு இருக்கிறது. என் உடல் என்னும் யாழில் உண்மையான நாதம் இன்னும் எழவில்லை. எங்கோ தவறு நேர்ந்து இருக்கிறது. பிருகுகள் ஒழுங்கில்லையோ... நாத நரம்புகள் தளர்ந்துள்ளதோ... குடம்தான் விரிசல் கண்டிருக்கிறதோ... எனக்கே புரியவில்லையே... ம்... உண்மையைப்பெற எவ்வளவு காலம் காத்திருக்க வேண்டுமோ?...

எங்கிருந்தோ இன்னிசை எழுந்து அதிகரிக்கிறது.

சித்தா : அங்கே என்ன சப்தம்?... யார் பாடுவது?...

துறவி 1 : யாரோ வழிப்போக்கர்கள்... நதியைக் கடக்கிறுர்கள் போலிருக்கிறது. வழிக்களைப்புத் தெரியாமலிருக்கப் பாடிக்கொண்டு செல்கிறுர்கள்...

[பாட்டு தெளிவாகக் கேட்கிறது]

சித்தா : (பரபரப்புடன்) கொஞ்சம் பொறு... அமைதி... அமைதி... அந்தப் பாடலைக் கொஞ்சம் கேட்போம்.

[மூவரும் அமைதியாக உன்னிப்பாகக் கேட்கப் பாட்டு எங்கும் நிறைகிறது.]

யாழின ரம்பை வலிந்து கட்டாதே
நரம்பிற்று விட்டா லிசை யற்றுவிடும்
யாழின ரம்பை மெலிந்து கட்டாதே
நரம் பியங்கா விட்டா லிசை யற்றுவிடும்
தோழி! சமன்செய்து சுருதி யமைந்திட
யாழினை வாங்கி நரம் பணைவாய்

சித்தா : ஆஹா எனக்குப் புலனாகிவிட்டது... உண்மை புலனாகிவிட்டது என் தவத்தின் தவறு புலனாகிவிட்டது. உடலை வருத்துவதால் மட்டும் தவத்தின்நோக்கம் வெற்றிபெற்று விடாது... உண்மையைத் தேடி நீண்ட காலம் அலைய நேரிடும். அதற்கு உடல் அவசியம். சுவரின்றிச் சித்திரமில்லை. சுவர் வளவளப்பாக இல்லாவிடினும், உறுதியாக இருக்கவேண்டும். ஆமாம் இனி என் உடலைப் பாதுகாக்கக் கொஞ்சமேனும் உண்ண வேண்டியதவசியம்...

[அப்போது மெட்டி ஒலி அரங்கில் எழுகின்றது.]

சித்தா : அது என்ன ஒலி!

துறவி 1 : ஓ!... மெட்டியின் ஒலி .. யாரோ பெண்கள் வருகிறார்கள் போலிருக்கிறது சுவாமி.

சித்தார் : பெண்களா?... ஆச்சரியமாக இருக்கிறதே... இந்த வனாந்தரக் காட்டில் ஆடு மாடு மேய்க்கும் இடையர்களன்றி வேறு எவரும் வருவதில்லையே... யாரவர்கள்...? எதற்காக இங்கு வருகிறார்கள்?

[சுஜாதை அலங்கார பூஷிதையாகத் தோழியுடன்வருகின்றாள். கையிலே செம்பொற்கிண்ணம்; பாலன்ன தூவிகைத் துணியினால் மூடப்பட்டுள்ளது. பயபக்தியுடன் வருகின்றனர்.]

சுஜாதை : (பயபக்தியுடன்) சுவாமி... (அவரை வணங்குகின்றாள்)

சித்தா : யாரம்மா நீ? எங்குவந்தாய்?

சுஜாதா : உங்களருள் பெறத்தான் இந்த அடியாள் வந்தேன். நான் தங்கள் பக்தை சுவாமி...

சித்தா : (வியப்புடன்) பக்தையா ?

சுஜாதை : ஆமாம் சுவாமி. நான் வணங்கும் இந்த அஜபால மரத்தின் தெய்வமல்லவா தாங்கள் ?

சித்தா : தெய்வமா ?... என்னம்மா சொல்கிறாய் நீ... நீ யார் ?

சுஜாதை : நான் உருவேலா கிராமத்து ஆயர் குலப் பெண். என் பெயர் சுஜாதை ?

துறவி 1 : (அலட்சியக் குரலில்) ப்பூ!... இடைச்சியா ?

சித்தா : அது சரி... இங்கு வந்த காரணம் ?

**சுஜாதை :** நீண்ட காலமாக எனக்கு குழந்தைப் பேறில்லாமலிருந்தது சுவாமி. இந்த அஜபால மரக் கடவுளிடம் குழந்தை வரம் கேட்டேன். கடவுள் கண் திறந்தது. அழகான ஆண் குழந்தை பிறந்தது அதனுல் இந்தக் கடவுளுக்கு நிவேதனம் படைக்க வந்தேன். நான் தேடிவந்த கடவுளாகத் தாங்கள் நிற்கிறீர்கள்.

**சித்தா :** அம்மா... நான் நீ தேடிவந்த தெய்வமல்ல. நான் ஒரு துறவி.

**சுஜாதை :** மன்னிக்கவேண்டும் அடிகளே! இல்லறத்தாருக்கு துறவிகளும் கடவுளே. மனித நிலைக்கு மேலுயர்ந்து நிற்கும் தாங்கள் எங்களைப் போன்றோருக்குத் தெய்வமே!

**சித்தா :** (சிரித்து) நான் எங்கு உயர்ந்தேன். உண்மையைத் தேடி அலையும் ஒரு வழிப்போக்கன் அம்மா நான்.

**சுஜாதை :** ஆனுல் வழிப்போக்கில் வாடி விட்டீர்களே!... இந்த எளிய பக்தையின் உணவு தங்கட்கு நிவேதனமாகக் கூடாதா?

**சித்தார் :** (மகிழ்ந்து) இதுவும் ஒரு வேடிக்கைதான் அம்மா. நீண்ட நாள் விரதத்தின் பின்னர் இன்று விரத பங்கம் செய்ய நினைத்தேன். நீயே உணவு கொணர்ந்துவிட்டாய். உன் உணவு எனக்கு அமுதமம்மா... அன்புடன் இட்ட உணவு அல்லவா... கொடு... கொடு... உன் அன்பு என்னைச் சிலிர்க்க வைத்து விட்டதே...

**சுஜாதை :** (மெய்மறந்து) கடவுள் இரங்கிவிட்டது. இந்த ஏழையின் பாலன்னத்தைப் புசிக்க இரங்கிவிட்டது... நான் பாக்கியசாலி. சுவாமி என்னை ஆசீர்வதிக்க வேண்டும்.

**சித்தார் :** அப்படியே அம்மா!... என் நீண்ட பயணத்திற்கு உன் பாலன்னம் துணைபுரியட்டும்.

[கைகளில் வாங்கி உண்ணச் செல்கிறுர்]

**துறவி 1 :** (தடுத்து) நில்லுங்கள் சுவாமி. உண்ணுதீர்கள்.

**சித்தார் :** (வியப்புடன்) என்ன!...

**துறவி 2 :** ஆமாம். உண்ணக்கூடாது. நீங்களோ புனிதர். அவளோ இடைச்சி.

**சித்தார் :** அதனுல்... ?

**துறவி 1 :** உங்கள் துறவின் தூய்மை கெட்டுவிடும். அனுசாரமாகி விடும்.

**சித்தார் :** மனித குலத்திலே உயர்வு தாழ்வா?... அவளுக்கும் நமக்கும் என்ன வித்தியாசம்.

**துறவி 1 :** அவள் பிறப்பால் இடைச்சி.

**சித்தா :** இல்லை தொழிலால் இடைச்சி.

**துறவி 2 :** புனிதம் குன்றியவள்...

சித்தார் : இல்லை புனிதமான இந்தப் பாலைத்தருபவள்.

துறவி 1 : அப்படியானால் நமது சம்பிரதாயங்கள்...?

சித்தார் : இடையில் வந்த வினை. பாதியில் வந்த சாதிப்பேயால் மனிதகுலம்ம மனிதத்தன்மையை இழந்துவிட்டது. சாதிவெறி பிடித்தவர்கள் மனிதர்களேயல்ல. அவர்கள் துறவிகளாயினும் சரி.

துறவி 2 : அப்படியாயின் எங்களை விட அவள் உயர்ந்தவளோ? எங்களுக்கும் அவளுக்கும் வித்தியாசமில்லையா?

சித்தார் : உங்கள் உடம்பில் என்ன பச்சை இரத்தமா ஓடுகிறது. மனிதர்களில் உயர்வு தாழ்வு கற்பிப்பது பேதமை. எல்லாரும் அன்னை பெற்ற பிள்ளைகளே?

துறவி 1 : இதனைத் தாங்கள் உண்டால் உங்களை மதிக்கமாட்டோம்.

சித்தா : ஒரு மனித ஜீவனை நேருக்கு நேர் நின்று அவமதிக்கும் அன்பே இல்லாத உங்களிடம் எப்படியப்பா மதிப்பை எதிர்பார்க்க முடியும்? மலரிலும் மென்மையானதும், தூய்மையானதுமான ஒரு பக்கதையின் மனம் புண்பட்டு விட்டதே. பிற உயிரை வருத்தல்கூடாது என்பதனைத் தாங்கள் அறியாததா? அது மனமாயினும், உடலாயினும் ஒன்றே... உலகில் அனைவரும் பூமாவின் குழந்தைகளே! வானம் என்ற கூரைக்குள் வாழும் நாம் அனைவரும் சம்கோதரர்களே!... நீ கவலையுறுதே அம்மா உன் அமுததனை நான் உண்கின்றேன்.

துறவிகள் : (இருவரும்) அனுச்சாரவாதியை குருவாக எண்ணினேமே... நாங்கள் வருகிறோம்.

[கோபத்துடன் போகின்றார்கள்]

சித்தார்: (உண்டபடி) ஆஹா... என்ன சுவையாக உள்ளது.

சுஜாதா : (வணங்கி) சுவாமி என்னையும் என் குழந்தையையும் ஆசீர்வதிக்க வேண்டும்.

சித்தா : (கைகளை உயர்த்தி ஆசீர்வதித்து) நீயும் உன் மைந்தனும், குடும்ப சுற்றமும் நீடு வாழ்ந்து உயர் நிலை அடைய வேண்டும தாயே

சுஜாதா : விடை பெறுகிறேன் சுவாமி.

சித்தா : அப்படியே அம்மா.

[சுஜாதா போகிறாள்]

சித்தார் : (தனித்து) இனியும் இங்கிருக்கக்கூடாது. இருந்தால் தடைகள் ஏற்பட்டவண்ணமிருக்கும். நான் வேறிடம் செல்ல வேண்டியதுதான். அதோ அந்த வெள்ளரச மரத்தினடியில் என் தவத்தை ஆரம்பிக்கலாம். — (செல்கிறார்)

திரை

# காட்சி 2

*[சித்தார்த்தர் தவத்திலாழ்ந்துள்ளார். கீழ் வானில் விசாக பூர்ணிமை எழுந்து, அவர் முகத்தில் தண்ணொளி பரப்புகிறது தென்றல்வீசுகிறது. மலர்களின் மணங்கள் எங்கும் பரவுகிறது. முழுநிலவு பிரகாசித்துக்கொண்டிருக்கிறது ]*

**சித்தார் :** (தனக்குள்) ஏழு ஆண்டுகள் கழிந்துவிட்டன. இன்னும் எனக்கு விடை கிடைக்கவில்லை... ஆனால் ஏனோ இன்று என் மனம் பரவசமடைகின்றது. வெற்றிக் கோட்டை நெருங்கிக் கொண்டிருப்பதாக உள் மனம் கூறுகிறது .. ஓ!... இன்று விசாக பூர்ணிமையா!... இந்த ஒளியினிலே எனக்கு ஞானம் கிட்டுமா?

[தவத்தைக் குலைக்க [1] மாரன் ஒரு வாலிபனாக வருகின்றான்.]

**மாரன் :** ஓ!... இதுவென்ன விசித்திர உருவம்!... யாருமற்ற கானகத்தே... மரத்தின் மரமாகி... கல்லின் கல்லாகி நிற்கும் நீ யார் ?...

**சித்தா :** நான் ஒரு துறவி.

**மாரன் :** நீ எங்கிருந்து இங்கு வந்தாய்! அதுவும் என்னிடத்துக்கு என் அனுமதியில்லாமல்...

**சித்தா :** [2] நான் இமயமலையின் அடி வாரத்தில் செல்வமும், வீரமும் கொழிக்கும் நாடாக விளங்கும் கோசல இராச்சியத்திற்குள் அடங்கிய, ஆதித்திய கோத்திரத்தைச் சார்ந்த சாக்கியர்கள் வாழும் நாட்டைச் சேர்ந்தவன். அக் குலத்திலிருந்தே பரிவிராஜகன் ஆகியவன்.

**மாரன் :** எவ்வளவு ஆண்டுகளாக நீ இவ்வாறு துறவியானாய் ?

**சித்தா :** ஏழு ஆண்டுகள்...

**மாரன் :** நீ துறவு கொண்டதன் பலனைப் பெற்று விட்டாயா ?

**சித்தா :** முடியவில்லையே.

**மாரன் :** ஏழு ஆண்டுகளாக முடியாதது. இனியா கிட்டப் போகின்றது. உனக்கு மூளை என்பதே கிடையாதா ? உனக்கு உன் துறவில் வெறுப்பே ஏற்படவில்லையா ? வாழவேண்டும் என்ற துடிப்பு நிகழவில்லையா ?

**சித்தா :** (அமைதியாக) இன்னும் தான் காத்திருக்க வேண்டும். காத்திருந்தே பலனை அனுபவிக்க வேண்டும். பொறுமையே எனது துறவு. ஏழு வருடமல்ல. எண்ணூறு வருடங்கள் கூடக் காத்திருக்கவும் நான் தயங்கேன்.

---

[1] இவனையே கிறித்தவர் சாத்தான் என அழைப்பர். இந்துக்களின் மன்மதன் அல்லன்.

[2] புத்தர் வாக்கு. ஸுத்த நிபாதத்தில், பப்பஜ்ஜாஸுத்தத்தில் உளது.

மாரன் : எதற்காக காத்திருக்க வேண்டும்· இப்போதே உன்னுடல் மெலிந்து இற்றுவிட்டதே... இனியும் தாமதிக்காதே... எழுந்திரு... என்னுடன் வா!... உனக்கு ஜீவனளிக்கக் கூடிய உணவுகளினைத் தருவேன்... தேஜஸ் அளிக்கக் கூடிய பழரசங்களைத் தருவேன். பஞ்சணை மெத்தை தருவேன்... உந்தக் குசைப் புல் பரவியமேடையைவிட்டு எழுந்திரு!...எழுந்திரு!...

சித்தா : மாரனே!... உன் வஞ்சம் எனக்குப் புரியும். இந்த இடத்தை விட்டு என்னை எழுப்பவா பார்க்கிறாய். உன் ஆற்றல் என்னிடம் செல்லாது? உன் வருகையே எனது வெற்றிப்பாதையை விளக்குகின்றது.

மாரன் : மாரனா?... நானா?... [சமாளித்து] என்னை நீ அறிவாயா?

சித்தா : பாவி நீ!... உன்னை நன்கறிவேன். உலகமக்களை மாயவலையில் விழுத்தி கொஞ்சம் கொஞ்சமாக அவர்களின் ஆத்மாவை பாழடிப்பவன் நீ!... உலகின் மயக்கத்திற்கே காரணன் நீ!...

மாரன் போதும் நிறுத்து. நீ தான் என்னைத் தவறாகப் புரிந்து கொண்டாய். என்னுடன் வந்தால் இகலோக இன்பங்களை யெல்லாம் அனுபவிக்கலாம்·

சிந்தா : மாரனே! நீ முதலில் என்னைப் புரிந்துகொள். நான் துறவியானதே இகலோக இன்பங்களின் அநித்தியத்தை அறிந்தே... காம நுகர்வுகளை வெறுத்தே என்பதனை அறிந்து கொள்-

மாரன் : (சாகச நடிப்புடன்) [3]பார்!... பார்!... உனதுநன்மைக்காகவே சொல்கிறேன்!... உன் உடல் ஜீவன் எங்கோ ஒரு மூலையிலல்லவா ஒளித்திருக்கின்றது... ஜீவன் நிலைத்தால்தானே நீ துறவினை மேலும் மேற்கொள்ளலாம். எழுந்திரு... எழுந்திரு...

சித்தா : ஏய்... பாவி!... நீ என்னை என் தியானத்திலிருந்து குலைத்துவிட முடியாது. உணவை நான் அறியாதவனல்ல.. நான் உண்ட உணவை நீ கனவு கண்டிருக்க முடியாது. அவற்றையே வெறுத்துத் துறவு பூண்ட நான் என்ன என்ன உணவுகளை உண்டேன் தெரியுமா... உணவே அகங்காரத்தை வளர்க்கிறது என அறிந்த நான் உண்ட உணவுகள் என்னவென்று கேள். [4] கீரை, புல்லரிசி... சக்கிலியன் எறிந்த தோல் துணுக்குகள்... வேலட்பாசி... தவிடு... காந்தற் சோறு... பிண்ணாக்கு... இலந்தப்பழம் முதலியனவேதான்... இவற்றை எப்படி உண்டேன் என்று கேள்... ஒன்று விட்டு ஒரு நாள் உண்பேன்... பின்னர் இரு நர்ட்களுக்கொருமுறை, மூன்றுநாட்களுக்கு ஒரு முறை என்று அதிகரித்துச் சென்று வாரத்திற்கு ஒரு முறை உண்பேன். இப்படி வருத்தி உறுதியாக்கிய மனத்தை நீ மயக்கிவிட முடியாது மாரனே!

---

[3] ஸுத்த நிபாதம்பதான ஸுத்தம் [4] ஸாரி புத்தனுக்கு அருளும்வாக்கு

# களையும் மலரும்

செல்வி இரா. சரசுவதி

இளவேனிற் காலம். இதனை அறிவிக்கின்றது குயிலின் இனிய குரல் சித்திரைத் திங்கள் வந்து விட்டால் குயிலுக்கு மட்டுமா கொண்டாட்டம்? இல்லை! இயற்கை அன்னையின் அரவணைப்பில் இன்புற்று வாழும் எல்லாவுயிர்களுக்கும் சித்திரையாள் இன்பம் அளித்திடுவாள்.

மலைதனைக் கொண்ட-இயற்கைக் காட்சிகள் செறிந்த குறிஞ்சி நிலம். ஆங்கே, இனிய மணம் முகிழ்க்கும் அழகிய சோலை, ஒன்று. இளந்தென்றல் இதமாக வீசியது. அளிகள் இளந்தென்றலின் இன்பநுகர்ச்சியால் இசை பாடின. மகரந்தப் பொடியைச் சிந்துகின்ற அம்மரச் சோலையில் உரோசாச் செடியொன்று காலையின் செழிப்பில் நிமிர்ந்து நின்றது. தன் வாரிசாக விரிந்தும் விரியாத மலரொன்றையும், சில மொட்டுக்களையும் பெற்றிருந்த, உரோசாவின் உள்ளம்உவகையில் ஆழ்ந்து கிடக்கிறது.

அப்பொழுது...!

"மலரே... மலரே!"

தென்றலின் தழுவலில் மெய் மறந்திருந்த மலர் விழித்து நோக்கியது.

"என்னை அழைத்தது யார்?" மலரின் மென்மைக்கேற்ற வண்ணம், அதன் குரலில் இதம் நிறைந்திருந்தது. ஆனால் மலருடைய மென்மைக்குக் கிடைத்த பதிலோ கடினமிகு ஏளன மொழிகள்.

களை பேசுகிறது: "மலரே, இன்று சித்திரை நாள் என்றபடியால், மனம் மகிழ்ந்திருக்கிறாய் போலும்! ஆனால் உனக்கு மட்டுந்தான் மகிழ்வு சொந்தமென்று எண்ணிவிடாதே! அதிலே எனக்கும் பங்கிருக்கிறது." என்று தன் ஆற்றாமையைவெளிப்படுத்தியது.

மலர் மந்தகாசச் சிரிப்பொன்றைச் சிந்தியது. "அறிமுகமற்ற குரலே, நீ யார் என்பதை எனக்குச் சொல்ல மாட்டாயா?" என்றது.

களை கல,கலவென்று நகைத்தது. "என்னைத் தெரியவில்லையா உனக்கு. உன்னருகிலேயே இணைந்து வாழும் என் திருநாமம் களை" என்று இறுமாப்புடன் இயம்பியது.

"ஓகோ! உன் அர்த்தமற்ற பேச்சிலிருந்தே ஓரளவு முன்னரே புரிந்துகொண்டேன், நீயொரு வம்பாளன் என்று. உன்னைப் போன்றவர்களுக்கு வீண் வாய்ப்

பிரதாபங்கள்தான் பேசத் தெரியும் வேறென்ன சாதிக்க முடியும்?" என்று சற்று விறைப்பாகவே பேசியது மலர்.

களைக்கு ஆத்திரம் பொங்கி வந்தது. "மலரே, உனக்கோ அற்ப வாழ்வு. நாளையோ, அல்லது இன்றோ செடியை விட்டு உதிரும நிலையிலுள்ளாய். இந்த இலக்கணத்தில் (இலட்சணம) உன் அகம்பாவத்தை – உயர் வாழ்வை என்னிடம் காட்டாதே!" களையின் வார்த்தைகளில் ஆற்றாமை எதிரொலித்தது.

மலர் மீண்டும் மென்மைக் குரலில் மொழிந்தது. 'களையே, என்ன ஆற்றாமை – உனக்கு? யான் உன்னிடம் என் அகம்பாவத்தையோ, உயர் வாழ்வையோ காட்டிக்கொள்ளவில்லையே? நீ தானே என்னுடன் வலிய வம்புச் சண்டை இழுத்தாய். உன்னைப் போன்றவர்களை எங்களோடு வாழவிட்டால், எங்களையும் வாழவிட மாட்டீர்கள்; நீங்களும் வாழ வழி தேட மாட்டீர்கள். 'வாழு; அல்லது வாழவிடு' என்பதே எங்களின் நன்னோக்கம். சற்று முன் எனக்கு அற்ப வாழ்வு எனக் கூறினாய். ஆனால் நீ ஒன்றை மறந்து விட்டாய். அதாவது யான வாழும் கொஞ்சக் காலத்திலாவது மனிதனுக்கு நன்மை செய்து விட்டுத்தான் மறைகிறேன. இதிலிருந்து நீ ஒரு உண்மையைத் தெரிந்து கொள். 'வாழும் காலம் எவ்வளவு என்று சிந்திப்பதைத் தவிர்த்து, வாழ்வது சிறிது காலமென்றாலும் நல்ல செயல்கள் செய்வதிலேயே சிந்தையைச் செலுத்த வேண்டும். என் வாழ்வின் இலக்கணத்தைப் புரிந்து கொண்டாயா இப்போழ்து? ஆனால் உன் வாழ்வின் தன்மையோ......?

மலர் தன் பேச்சை இடையில் நிறுத்தியது. களை தன் வாழ்வின்மீது சிந்தனையைப்படர விடு முன், சோலையின் சொந்தக்காரி, ஆங்கு பூக்குடலை (பூக்கூடை) சகிதம் வந்தாள். தன் தளிர்க்கரத்தால் உரோசா மலரை ஆய்ந்தாள். அடுத்த கணம்...! களையைப் பிடுங்கி இரண்டாக முறித்துக் கீழே போட்டுவிட்டு நடந்தாள். தன் வாழ்வின் இழிநிலையை உணர்ந்த களை மனம் வெம்பிச் சோர்ந்தது.

★

## நவீன ரோமியோ

அவர்கள் இருவரும் காதலர்கள். ஒருநாள் பெற்றோருக்குத் தெரியாமல் ஓடிவிட இருவரும் தீர்மானித்தார்கள். நள்ளிரவில் ஏணியைக காதலியின் யன்னற் சுவரில் சாத்திவிட்டு ஏறிவந்த காதலன் காதலியை விரைவாகப் புறப்படும்படி அவசரப்படுத்தினான்.

'உஷ்! சத்தம் போடாதீர்கள். அப்பா எழுந்து வந்து விடப் போகிறார்"— என்றாள் காதலி.

"அப்பாவைப் பற்றிப் பயப்படாதே; கீழே அவர் தான் ஏணியை விழுந்துவிடாமல் பிடித்துக் கொண்டிருக்கின்றார்" –என்றான் காதலன்

# ஒலிவர் டுவிஸ்ட்

ஏ. ரி. பொன்னுத்துரை. B.A.



திரு சோபெறியின் கடையிலே, அன்றிரவு ஏகாந்தமாக விடப்பட்டிருந்த ஒலிவர், தன் கையில் இருந்த விளக்கை, வாங்கு ஒ றின் மேல் வைத்தபடி சுற்று முற்றும் பார்க்கின்றான். முடிவு பெறாத நிலையில், கடையின் மத்தியில் இருந்த இருள் மண்டிய சவப்பெட்டியை அவன் கண்கள் நோக்குகின்றன. ஏதோ ஒரு உருவம் தனது தலையை அந்தச் சவப்பெட்டியில் இருந்தும் தூக்குவது போன்ற உணர்வு அவனைப் பெரும் பீதிக்குள் ஆளாக்குகிறது. உச்சி முதல் உள்ளங்கால் வரை ஒரே நடுக்கம்! கடையின் வெளியே கதவில் யாரோ உதைத்த சத்தம் அவனை நித்திரை விட்டு எழச் செய்கிறது.

''கதவைத் திற. திறக்கிறாயா? இல்லையா?"

''உடனடியாகத் திறக்கிறேன் ஐயா ?''

''நீ தானா இங்கே வேலைக்கு வந்திருக்கும் புதிய பையன்.''

''ஆம் ஐயா'' தலையை அசைக்கிறான் ஒலிவர்.

''உனக்கு வயதென்ன ?''

''பத்து வயதையா!''

''அப்படியானால், உள்ளே வந்ததும் நான் உன்னை சாட்டையினால் நன்றாகப் புடைக்கவேண்டும்'' இந்த அன்பு கலந்த சொற்களை உதிர்த்த அன்பின உறைவிடம் விசில் அடிக்கிறது. கைகள் நடுங்க ஒலிவர் கதவைத் திறக்கிறான்; தெருவிலே

நோட்டம் விடுகிருன் ஒருதுண்டு பாணை பட்டரு டன் சாப்பிடும் ஒருவரைத் தவிர வேறு யாரையுமே காணவில்லை.

''ஐயா! தயவு செய்து மன்னியுங்கள். நீங்கள் தாஞ கதவில் தட்டியது?'' ஒலிவர் பணிவுடன் வினுவுகின்ருன்.

நான் தட்டவில்லை. கதவை உதைத்தேன்' அவன் பதிலில் கர்வம் தலை தூக்கியது.

''உங்களுக்கு சவப்பெட்டி வேணுமா ஐயா?'' கள்ளங் கபடமற்ற ஒலிவரின் கேள்வி இது.

''நான் யாரென்பது உனக்குத் தெரியவில்லைப் போலும்''

''தெரியாதையா''

''நான் தான் நோவா கிளே போல் (Noah Claypole) எனக்குக் கீழ் வேலை செய்ய வந்திருப்பவன் தான் நீ. சோம்பேறிப் பயலே! திற கதவை''

ஒலிவரை உதைத்தபடி கடைக்குள் கால்வைக் கிருன் கிளேபோல். ஒலிவர் நொவா கிளே போலைப் பின் தொடர்கிருன்.

இன்னல்கள்மத்தியில் இம்சையுற்ற ஒலிவர் பொறுமையின் பெட்டகமாக அனைத்தையும் ஏற்கிருன். பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டல்லவா? எத்தனை மாதங்கள்தான் தவிப்பது? அவனது வாழ்வில் ஒரு திடீர் திருப்பம். ஆமாம். ஒரு தினம் நடந்த சம்பவம் அவன் வாழ்வையே முற்ருக மாற்றியது.

போசன வேளை. ஒலிவரும் நோவாவும் சமையலறைக்குள் செல்கின்றனர். தனது பாதத்தை மேசைச் சீலைமேல் வைத்தபடி நோவா, ஒலிவரின் தலை மயிரை இழுத்தும், காதுகளைத் திருகியும் அவனைத் துன்புறுத்துகிருன். அழாத நிலையில் ஒலிவர் இருப்பதைக் கண்ட அவன் ஒலிவரைப் பார்த்து ''உனது தாயின்பாடு எப்படி?'! என வினுவுகிருன்.

''அவள் இறந்து விட்டாள். எனது தாய் பற்றித் தயவுசெய்து எனக்கு ஒன்றும் கூருதீர்கள்'' பெருமூச்செறிந்த வண்ணம் ஒலிவர் பதில் கூறுகிருன்.

''என்ன காரணமாக அவள் பிணமானுள்?''

''உடைந்த உள்ளந்தான் அவளது மரணத்துக்கு காரணமென ஒரு முதிர்ந்த நேர்ஸ் கூறினுள்'' கண்ணீர்த் துளிகள் கன்னத்தில் புரள பதிலிறுத்தான்.

''இப்போ நீ கண்ணீர்விடக் காரணம்?''

''நீங்களல்ல அதற்கு காரணம்'' கண்ணீரை விரல்களால் துடைக்கிருன் ஒலிவர்.

''என்ன? நானல்லவா? உம் ..''

''ஆமாம். நீங்களல்ல காரணம். எனது தாய்பற்றி மறுபடியும் பேசாதீர்கள்'' அவனது பேச்சில் ஆத்திரம் பீறிட்டது.

''என்னையா பேச வேண்டாமென்று நீ சொல்கிறாய்'' கத்துகிறான் நோவா கிளேபோல்.

''உனது தாய்... உனது தாய்... ஒரு நடத்தை கெட்டவள். நடத்தை கெட்டவள்''

"என்ன கூறினாய்?'' பார்வையை மேலே பாய்ச்சி சட்டெனக் கேட்கிறான் ஒலிவர்.

"உனது தாய் நடத்தை கெட்டவள் என்கிறேன். அவள் இறக்காதிருந்தால் இப்போது சிறைச்சாலையிற்றான் சித்திரவதைப்பட்டிருப்பாள். அல்லது மரணக் கயிறுக்குத்தான் பலியாய் இருப்பாள்''

முகம் சிவக்க, வெஞ்சினம் கட்டுமீற கதிரையையும், மேசையையும் வீசி எறிகிறான் ஒலிவர். நோவாவின் குரல்வளையை கரங்களால் இறுகப் பற்றிய வண்ணம், அவனை ஒரு குலுக்கு குலுக்கி விட்டு ஒரு இடியுடன் 'தொப்' பென்று நிலத்தில் வீழச் செய்கிறான்.

''ஐயோ உதவி! உதவி!! சாளெற்! இந்தப் புதிய பையன் என்னைக் கொல்ல எத்தனிக்கிறான். என்னைக் கொன்றே விடுவான். உதவி! உதவி!!'' நோவாவின் அபயக் குரல் எங்கும் எதிரொலிக்கிறது. சாளெற்றும், திருமதி சோபெறியும் பெரிய சத்தம் வைத்தபடி அவசரம் அவசரமாக சமையலறைக்கு விரைந்து செல்கிறார்கள்.

''அற்பப்பயலே! நீயா'' என்று கூறியபடி சாளெற் ஒலிவரை நையப் புடைக்கிறாள். திருமதி சோபெறி ஒரு கையால் ஒலிவரைப் பிடித்துக்கொண்டு மற்றக் கை விரல்களால் அவன் முகத்தில் விறுண்டுகிறாள். நிலத்தில் இருந்தும் மெல்லென எழுந்த நோவா, ஒலிவரின் பின்புறத்தில் நின்றபடி சாட்டையினால் அடிக்கிறான். ஆத்திரம் தீருமட்டும் அடித்தும் காயங்கள் உண்டாக்கியும் களைத்துவிட்ட அவர்கள், ஒலிவரை ஒரு அறையில் இழுத்துப்போட்டு அடைக்கிறார்கள்.

திருமதி சோபெறி கதிரை ஒன்றினுள் சாய்ந்தபடி கண்ணீர் விட்டாள். பொலிஸ் காரரை வரவழைக்க வேண்டுமென்றாள் சாளெற். மிஸ்டர் பம்பிளைத்தான் உடனடியாக அழைக்க வேண்டும் என்றாள் திருமதி சோபெறி.

நோவா உடனடியாக வேலைத்தலத்திற்கு விரைந்தான். திரு பம்பிளுக்கு ஒலிவரின் போக்கை கூறினான். உடனே பம்பிள் திரு சோபெறியின் கடைக்குள் வந்து சேர்ந்தார். பம்பிளின் அதிகார தோரணையான கேள்விகளுக்கு அச்சமின்றிப் பதிலுரைத்த ஒலிவரை, திருமதி சோபெறி பைத்தியக்காரன் என்று எள்ளி நகையாடுகிறாள்.

''நீங்கள் இவனுக்கு இறைச்சி கொடுத்தீர்களே இறைச்சி. அதன் பலன்தான் இது. தடிப்பில்லாத சூப் கொடுத்திருந்தால் தம்பி தட்டிப்பேசுவானு'' படபடத்தபடி பேசுகிருர் மிஸ்டர் பம்பிள்.

''இப்போதுசெய்யத்தக்க ஒரே ஒரு காரியம் இவனை இந்த அறையில், உணர்வு கெடும்வரையில் பட்டினி போடவேண்டியதுதான். இவன் ஒரு கெட்ட குடும்பத்தைச் சேர்ந்தவன். இவனது தாய் ஒரு கெட்ட பெண்''

தாயின் பேச்சு பின்னரும் எடுக்கப்பட்டதால், குமுறும் உள்ளத்துடன் கால்களால் உதைகிருன் ஒலிவர்.

திரு. சோபெறியும் அங்கே வருகிருர். ஒலிவரின் குற்றம் அபரிமிதமாக கூட்டிவர்ணிக்கப்பட்டதால் மிஸ்டர் சோபெறி கோபக்கனல் தெறிக்க அவனை அறையில் நின்றும் இழுக்கிருர்.

''நீ ஒரு நல்ல பையன். இல்லையா?" பதில் கூறுமுன்னரே கன்னத்தில் 'பளார்!' என்று அறைகிருர்.

''என் தாயாரைப் பற்றிப் பேசினுர்கள். அது தான்...'' ஒலிவர் விடைபகர்ந்தான்.

''நன்றி கெட்ட நாயே! உன் தாயைப் பற்றி அவர்கள் கூறியது அத்தனையும் தகும். உனது தாய் அதற்கு லாயக்கானவள்.''

''இல்லை என் தாய் அப்படிப்பட்டவள் அல்லள்!''

''அப்படிப்பட்டவள் தான்''

''இது அபாண்டப் பொய்'' ஆத்திரமாக ஒலிவர் கூறுகிருன்.

திருமதி சோபெறியின் முதலைக் கண்ணீர் திரு. சோபெறியை ஆட்டிவைக்கிறது. தாறுமாருக ஒலிவரை நையப் புடைக்கிருர் திரு சோபெறி. திருமதி சோபெறிக்கு திருப்தியளிக்கும் வரை அவனை அடிக்கிருர். அன்று பகல் முழுவதும் சமயறையின் பிற்பகுதியில் அடைக்கப்பட்ட ஒலிவர், இரவு திருமதி சோபெறியின் கட்டளைப்படி தனது வழமையான துன்பம் நிறைந்த படுக்கைக்கு செல்கிருன்.

குமுறும் உள்ளத்தில் பல்வேறு உணர்ச்சி அலைகள். அவர்களின் அவமதிப்பான வார்த்தைகளை ஆத்திரத்துடன்கேட்டும் சாட்டை அடிகளை அழுதரல் இன்றியும் சகித்துவந்த, ஒலிவர் சனசந்தடி அற்ற அந்த இரவில். முட்டுக்காலில்நிற்கிருன். முகத்தைக்கைகளுக்கிடையில் புதைத்த வண்ணம் கண்ணீர் சொரிகிருன். நீண்ட நேரமாக ஆட்டம் அசைவின்றி இந்த நிலையில் நிற்கிருன் ஒலிவர். அவன் எழுந்த வேளை மெழுகுவர்த்தி எரிந்து

இறுதி நிலையை அடைந்துவிட்டது. சுற்று முற்றும் நன்ருகப் பார்த்தபடி மெல்லக் கதவைத் திறந்து அறையின் வெளியே பார்க்கிறுன்.

அது ஒரு குளிரும் இருளும் சூழ்ந்தவேளை. சலனம் சிறிதுமே அற்ற இரவு. பெரு மரங்களின் கரு நிழல்கள் நிலத்தில் படர்ந்து பயங்கர உணர்வை எழுப்பும் வேளை. அவன் அறைக் கதவுகளை மூடுகிருன். சில துணிகளை முடிச்சாகக் கட்டி விட்டு, காலை வேளையை எதிர்பார்த்த வண்ணம் ஒரு வாங்கின்மேல் காத்துக் கிடக்கிருன்.

காலை வேளைக்கு கட்டியங் கூறும் முதல் ஒளியைக் கண்டதுதான் தாமதம் மெல்லென எழுகிருன். அரவமின்றி கதவுகளைத் திறக்கிருன். ஒரு கோழைத்தனமான பார்வை-ஒரு நிமிட அங்கலாய்ப்பு- அடுத்த கணம் - கதவுகள் சாத்தப்படுகின்றன. அவன் அந்த நீண்ட அகன்ற வீதிக்கு இப்போது வந்துவிட்டான்.

## 4

எட்டு மணியளவில் ஒலிவர் பட்டினத்தில் இருந்து ஐந்து மைல்களுக்கப்பால் சென்று விட்டான். ஆனுல் சிலர் தன்னை பின் தொடரக்கூடும் தன்னை முந்தவும் கூடும் என்ற பீதியால் செடிகளுக்கிடையே மறைந்தும் மறையாமலும் ஓடுகின்ருன். பின்னர் ஒரு மைல் கல்லருகே இருந்து இளைப்பாறுகிருன்.

எங்கே செல்வது ? என்ற சிந்தனை அவன் சிந்தையில் இடம் பெற்றது. லண்டனில் இருந்தும் அவன் எழுபது மைல்கள் ஓடி விட்டான் என்பதை மைல் கல்லில் பொறிக்கப்பட்ட எழுத்துக்கள் காட்டின. தன் போன்ற துடியாட்டமுள்ள வாலிபன் லண்டனில் ஒரு தொழில் தேடுவது பிரச்சனைக்குரிய விஷயமல்ல என்ற எண்ணம் அவன் மனதில் பளிச்சிட்டது. இந்த எண்ணம் அவனைத் தொடர்ந்து தள்ளித் துள்ளி ஓட வைத்தது. இரவு வந்ததும் ஒரு புல் வெளியில் படுத்தான்; நிம்மதியாக நித்திரை செய்தான்.

காலையில் எழுந்ததும் அவன் குளிரில் விறைத்திருந்தான். பசி வயிற்றைக் குடைந்ததால் எஞ்சி இருந்த ஒரு பென்னிக்கும் பாண் வாங்கினுன். அடுத்த நாள் இரவையும் அவன் கடும் குளிரிலும் வீசும் காற்றிலும் கழித்ததால் அவன் நிலை மிக மோசமாகி விட்டது. விடிந்ததும் அவனுல் தவழ்ந்து செல்லக் கூட முடியவில்லை. இவ் விதமாக ஆறு நாள் வாழ்க்கை ஓடியது.

ஏழாவது நாள் தாண்டியும் தள்ளாடியும் நோவையும் பொருட்படுத்தாது பாணெற் (Barnet) என்ற சிறு பட்டினத்தை அடைந்தான். அங்கே யாக் டொக்கின்ஸ் (Jack Dawkins) என்ற பெயருடைய விசித்திர பேர்வழி இவனைச் சந்தித்தான்.

''ஹலோ! என்ன சங்கதி ?''

''எனக்கு நல்ல பசி. மிகவும் களைத்து விட்டேன். நியாயமான அளவு தூரத்தை நான் ஏழு நாட்களாக

நடந்து விட்டேன்'' பேசும்போது அவன் கண்களை கண்ணீர் துளிகள் மறைத்தன.

"ஏழு நாட்களாய் நடந்து விட்டாய். உனக்கு சாப்பாடு வேண்டுமா ? என்னுல் தர முடியும். பயப்படாதே. நானும் உன்னைப்போல் ஒரு ஏழைதான். என்னிடம் இருக்கும் ஒரு சிலிங்குக்கு ஏதாவது வாங்கலாம். என்னுடன் வா?''

ஒலிவர் எழும்புவதற்கு உதவியதுடன் அவனைப் பக்கத்தே உள்ள ஒரு கடைக்கே கூட்டிச் சென்ருன். வயிறு குளிர உண்ணவும், அருந்தவும் கொடுத்தான். ஒலிவர் சாப்பிட்டு முடிந்ததும் அவனைப் பார்த்து

''அப்போ நீ லண்டனுக்குத்தான் செல்கிருயா?'' என்று கேட்டான்.

''ஆமாம்''

''அங்கே தங்குவதற்கு இடமுண்டா ?''

''இல்லை''

''செலவுக்கு பணம்''

''இல்லை''

அந்த விசித்திரப் பேர்வழி விசில் அடித்தபடி தனது பொக்கற்றைத் துளாவினுன்.

''நீர் லண்டனில் தான் வசிக்கிறீரா?'' ஆவலுடன் ஒலிவர் கேட்டான்.


''ஆமாம். இன்றிரவு நித்திரை செய்ய உமக்கு ஒரு இடம் தேவைப்படலாம் என்று நினைக்கிறேன்''

''உண்மையாகத் தேவைதான்''

''அழவேண்டாம். இன்றிரவு நான் லண்டனுக்குச் செல்ல வேண்டும். அங்கே இருக்கும் ஒரு கண்ணியமான முதிர்ந்த மனிதனை எனக்கு நன்கு தெரியும். எவ்வித செலவுமின்றி அவருடன் தங்கலாம். இந்த வார்த்தைகள் ஒலிவருக்கு இன்பத்தை அளித்தன. ஒலிவருக்கு விரைவிலே அந்த முதியவர் ஒரு உத்தியோகமும் தேடித் தருவார் என்று உறுதி கூறப்பட்டதும் இருவரும் மனந்திறந்து உரையாடத் தொடங்கினர். அவனது பெயர் யாக்டொக்கின்ஸ் என்பதையும் ஒலிவர் அப்போதுதான் அறிந்துகொண்டான்.

இரவு பதினெரு மணியளவில் இருவரும் லண்டனின் எல்லையை அடைகிருர்கள். அழகற்றதும் அழுக்கானதுமான பிராந்தியத்துக்கூடாகச் சென்று இறுதியில் ஒரு குன்றின் அடிவாரத்தை அடைந்தனர். அந்த இடத்தை விட்டு ஓடி விடலாமோ என்று ஒலிவர் எண்ணுகிருன். அவ்வேளை அவனது கரங்களை இறுகப் பிடித்தபடி அவனை திறந்த கதவு௯ளுக்குள் தள்ளுகிருன் யாக் டொக்கின்ஸ். மேல் வீட்டுக்கு கொண்டு செல்லப்பட்ட ஒலிவர், அங்கே அடர்ந்த சிவப்பு மயிர்களால் அரைவாசி முகம் மறைக்கப்பட்ட குரூபியும் முதிர்ந்தவனுமான ஒரு யூதனைக் காண்கிருன் டொக்கின்ஸ் ஒலிவரை அந்த யூதக் கிழவனுக்கு அறிமுகம் செய்தான். பிற்பொக்கற் அடிப்பவர்கள் வரிசையில் ஒலிவருக்கும் இடம் அளிக்கப்படுகிறது.

வளரும்






4

## மருத்து மாமலை வனம்

நல்லூர் அரண்மனையின் முன் வாயிலோடு, வடக்கு நோக்கிச் செல்கின்ற அரசப் பெருவீதி, கள்ளியங்காடு எனும் இடத்தைக் கடந்து வடக்கே செல்கின்றது. கள்ளியங்காட்டிற்கும் அரண்மனைக்கும் இடையில், அரசப் பெருவீதியை அடுத்துக் காணப்பட்ட மாளிகைகளின் செல்வப் பெருக்கில் இருந்து அவை அரச குடும்பத்தினருக்கும், மந்திரிகளுக்கும் சொந்தமானவை என்பதனை உணரலாம். விலையுயர்ந்த பளிங்குகளைச் சுவர்களில் பதித்தும், மேன் மாடங்களோடும் எழிலுற அம்மாளிகைகள் கட்டப்பட்டிருந்தன. வெண் சுதையினால் பால் தோய நிழற்றியிருந்தமை, பார்ப்போர் கண்களை ஒரு கணம் கவரும் தன்மையனவாய் இருந்தன.

புரவியொன்றின் வாளிப்பான முதுகுக்கன அளவில், வளைவின்றி, ஒவ்வொரு மாளிகைகளையும் சுற்றிக் கட்டப்பட்டிருந்த மதிற் சுவர்கள், ஒன்றரை ஆள் உயரத்தில் உயர்ந்து நின்ற போதிலும் மாளிகைகளின் எழிற் கோலத்தை மட்டுப்படுத்தும் திறனற்றிருந்தன.

இம் மாளிகைகள் யாவும் செல்வத்தின் செழிப்பையும், அழகின் ஒளிர்ப்பையும் ஒருங்கே பறை சாற்றிக் கொண்டிருந்த வேளை, அவற்றில் ஒரு மாளிகை மட்டும், பெரிய ஒரு மலர் வனத்தின் மத்தியில் யாவற்றினின்றும் விலகி அமைந்திருப்பது போன்று காட்சி தந்தது. பல ஆண்டுகள் வெண்சுதை காணாததால் அம் மாளிகைச் சுவர்கள்

ஓரளவு ஒளி இழந்திருந்தன. வெளி மதில்கள் பாசி படர்ந்து கருமை போர்த்திருந்ததோடு, பட்சிகளின் எச்சத்தால் முளைவிட்ட இளம் அரசுகளையும் தம்மிடையே வேர்விட விட்டிருந்தன.

எனினும் அம் மாளிகையின் கம்பீரமும், முதிர்ச்சியின் அழகும் குன்றிவிடவில்லை.

அம் மாளிகையின் உரிமையாளரான அப்பா முதலி என்பார், யாழ்ப்பாண இராச்சியத்தின் முதன்மை வாய்ந்த மந்திரிகளுள் ஒருவர். அப்பா முதலி ஒரு தொண்டை மண்டலப் பிரபுவாதலால், மிகுந்த செல்வாக்குடையவர். முதன் மந்திரி அடியார்க்கு நல்லாருக்கு அடுத்து மிகுந்த அதிகாரமுடையவராக விளங்கினார்.

அப்பா முதலியின் மாளிகையின் பின்புற எல்லையிலிருந்து ஏறத்தாழ முப்பது பரப்பில் அமைந்திருந்தது மருத்து மாமலை வனம்.

மன்னர் பரராசசேகரின் தம்பியான செகராசசேகரரின் வைத்திய அறிவு நிரம்பப் பெற்றவன். மன்னரைக் கொண்டு யாழ்ப்பாண அரசின் கிராமங்கள் தோறும் வைத்தியசாலைகளை அமைத்திருந்ததோடு அவ வைததியசாலைகளுககு வேண்டும் மருந்துகள், மூலிகைகள் எல்லாவற்றையும் அரண்மனையில் இருந்தே காலந்தோறும் அனுப்பி வந்தான். வைத்தியத்துறைக்குத் தேவையான மூலிகைகளை வளர்த்துப் பாதுகாக்கும் பொருட்டு அருப்பாடுபட்டு, இமயத்தில் இருந்தும் அநேக மூலிகைகளை வரவழைத்து, பெரியதொரு தோட்டத்தை நிறுவினான். அத்தோட்டமே முதலியின் மாளிகையை அடுத்துக் காணப்பட்ட மருத்து மாமலைவனமாகும்.

செகராசசேகரன் இறந்தபின், இத்தோட்டம் ஓரளவு சீர்குலைந்த போதிலும், சங்கிலிகுமாரனின் தமையனார் பரநிருபசிங்கனால் பாதுகாக்கப்பட்டு வந்தது. பரநிருபசிங்கனது வைத்தியத் தொழிலிற்கு இத் தோட்டம் மிகவும் உதவியாக இருந்தது. இதனை மருந்து மூலிகைகள் வளர்க்கப்படும் வனம் என்பதிலும், ஒரு அழகிய ஒரு பூந்தோட்டம் எனலாம்.

மருத்து மாமலை வனத்தில் வீசிய ஆரோக்கியமான காற்றைச் சுவாசித்தபடி பெரிய ஓர் ஒதிமரத்தின் அடியில், தன் கை விரலால் நிலத்தில் கோலங்கள் இட்டபடி, அங்குமிங்கும் ஆவலோடு கண்களைச் சுழல விட்டு விட்டு, அமர்ந்திருந்த சங்கிலிகுமாரன் அடிக்கடி அப்பா முதலியின் மாளிகையைக் கவனித்தபடி, எதையோ எதிர்பார்த்துக் காத்திருந்தான்.

நல்லூர் கந்தனாலயத்தின் சாமப் பூசை மணி ஒலித்து ஓலியடங்கிப் பல நாழிகைகள் கழிந்ததோடு, சட்டநாதர் கோயிலைச் சாத்திப் பூட்டிக் கொண்டு குருக்கள் வீடு செல்வதையும் சங்கிலிகுமாரன் கவனித்ததால், அவனது மனம் அலைபாய்ந்ததோடு, ஏக்கத்தின் பிடியினுள்

ளும் ஆழ்ந்தது. மருத்து மாமலை வனத்தைப் பாதுகாக்கும் தோட்டக்காரர்களும் தங்களது இல்லங்களுக்கு ஏகி விட்டனர். காத்திருந்து காத்திருந்த அலுப் பற்பட்டதால், 'போவோம், அவள் இனி எங்கே வரப்போகிறாள்' என எண்ணி, அடக்கமுடியாத ஆத்திரத்தோடு எழுந்த சங்கிலி அப்பாமுதலியின் மாளிகைப் பின் கதவை மெதுவாகத் திறந்து விட்டுவிட்டு, வேகமாக நடந்து தான் நின்ற ஓதிமரத்தை நாடி ஓர் உருவம் வருவதை நிலவொளியிற் கண்டான்.

இடை மெலிந்து, உடுக்காக மேலும் கீழும் அகன்றுநெளிவுற, தன்னை நாடி விரைந்து வந்த உருவத்தை நோக்கி, காலடி பெயர்த்த அவன், ஆவலோடும் ஓரளவு போய்க் கோபத்தோடும் கேட்பான்;

''உதயவல்லி! உனக்காக எவ்வளவு நேரந்தான் காத்திருப்பது?...''

நிலவிலிருந்து இறங்கி வந்த மோகினியென, அப்பா முதலியின் திருமகள் உதயவல்லி நின்றதோடு, வாய்திறந்து பேசவுஞ் செய்தாள்:

''வெகு நேரம் காத்திருந்து விட்டீர்களா?''

பனிச்சையாகக் கட்டிய அவளது குழல் கற்றையிலிருந்து வெளிப்பட்டுச் சிலிம்பி நின்ற மயிர்க்கீற்றை, தண் நிலவில் தோய்ந்த குளிர் தென்றல் வருடிவிட அவள், ஒருபுறம் இடை சாய்த்து, கண்சிமிட்டி, மழலை மொழிந்தாள். அவளின் மயக்கந்தரும் அழகை அள்ளிப் பருகிய சங்கிலிகுமாரன் மெதுவாக அவள் கரங்களைப் பற்றினான். தண்ணென்று குளிர்ந்த அவள் கரங்கள் தாமரை மொக்குகளாக அவன் கைகளுள் சிறைப்பட்டன. வலிமையும், முரட்டுத் தன்மையும் வாய்ந்த அவன் கைகளினிடையே அழகும் மென்மையும் வாய்ந்த அவளது கரங்கள் துவண்டன.

''எங்கே உதயம் மட்டும் காக்க வைத்துவிடுவாயோ எனப் பயந்து விட்டேன்'' என்றான் இளவரசன்.

இதைக்கேட்ட உதயவல்லி யமுனை ஏரிபோன்ற கண்களால் அவனை ஏறிட்டுப் பார்த்துவிட்டு, பொற்காசுகள் குலுங்கியது போன்று, 'கல கல'வென நகைத்தாள்.

தேனினைப் பழிக்கும் பேச்சும், இன்பம்தரும் ஸ்பரிசமும், மின்னலை நிகர்த்த நகைப்பும் சங்கிலிகுமாரனை சுயமிழக்க வைக்கப் போதுமானவையாக இருந்தன. மெதுவாக அவள் இடைப்பரப்பில் தன் கரத்தைப் படரவிட்ட அவன், அவளை இழுத்துத் தன்னருகில் இருத்திக் கொண்டதோடு, தன் முகத்திலே அவள் காதோரச் சிலிர் மயிர்கள் வருடத் தக்கவாறு குனிந்து கேட்பான்:

''உதயவல்லி, இவ்வளவு நேரமேன் ?''

''நானென்ன செய்வதாம். மாளிகையில் எல்லோரும் துயில் கொள்ளாதிருந்தனர். காக்க வைத்ததற்குக் கோபமா ? மன்னித்துக் கொள்ளுங்கள்.''

''நீயல்லவா உதயா, என்னை மன்னிக்க வேண்டும்?"

உதயவல்லி அவனை நோக்கித் திரும்பினுள்.

''நான் உங்களை மன்னிப்பதா? ஓர் அடிமை தலைவனை எப்படிச் சுவாமி மன்னிக்க முடியும்?''

"உதயவல்லி, உன் பேச்சும் உன்னைப்போலவே அழகாக இருக்கின்றது. உதயா, கடந்த ஒரு திங்களாக உன்னைச் சந்திக்க வராது காத்திருக்க வைத்து விட்டேனல்லவா?''

"காலமெல்லாம் உங்களுக்காகக் காத்திருக்கத் தயாராக இருக்கும் நான் ஒரு திங்கள் பொறுத்திருக்க மாட்டேனு? நாடே சோகத்தில் ஆழ்ந்திருக்கும் போது நான் மட்டும் ஆனந்தமாக இருக்க முடியுமா?"

சங்கிலிகுமாரன் சிறிது மௌனமானுன். அவன் உள்ளத்தில் சோகத்தின் தீ கொழுந்துவிட்டெரியவே செய்தது. அவன் இதய அரங்கிலே சம்பந்தா சம்பந்தமில்லாமல் ஓராயிரம் நிகழ்ச்சிகள் சில கணப் பொழுதுள் தோன்றி மறைந்தன.

பட்டத்து இளவரசன் வீரபண்டாரமும், இராஜலக்குமிதேவியாரும் மறைந்து ஒரு திங்கள் கழிந்தும் நாட்டில் பழைய மகிழ்ச்சி நிலவவில்லை. நாடே துக்கம் கொண்டாடிக்கொண்டிருந்தது. அரண்மனையில் கடந்த திங்களிலிருந்து ஒரே சோக அமைதி நிலவி வந்ததோடு, அரண்மனையிலுள்ளோர் கடமைக்காக இயங்கினரேயன்றி, அவர்களுடைய மனதில் எள்ளளவும் மகிழ்ச்சி இல்லை. தனயனையும் மனைவியையும் ஒரே சமயத்தில் இழந்த பெருந்துயரால் பரராசசேகரர் நடைப்பிணமாகக் காணப்பட்டார். அவருடைய இரண்டாவது மனைவியும், பரநிருபசிங்கனின் தாயாருமான வள்ளியம்மை தேவியார் அரசருடன் என்றும் காணப்பட்டார். கண்டி அரசியின் நோய் தீர்க்கச் சென்ற பரநிருபசிங்கன் இன்னுந் திரும்பி வராமையினுல், அவனை அழைத்து வரத் தூதுவர்களை அனுப்பி வைத்திருந்தார் முதன் மந்திரி அடியார்க்கு நல்லார்.

சங்கிலிகுமாரன் மனதை வேறெதிலோ செலுத்திவிட்டு, அமைதியாக எதுவும் பேசாது இருப்பதைக் கண்ட உதயவல்லி, அவன் தோளைப்பற்றி, 'பிரபு' என அழைத்தாள்; 'உங்கள் மனம் நோகும்படி நான் ஏதாவது தவறுகக் கூறி விட்டேனு?'

சங்கிலிகுமாரன் நீண்ட பெருமூச்சொன்றினை விட்டபடி, அவளுக்காகத் திரும்பினுன்:

''அப்படி எதுவுமில்லை, உதயவல்லி! என் பெரிய தாயாரையும் அண்ணரையும் நினைத்துக் கொண்டேன்.''

''இனி நடக்க வேண்டியவற்றைக் கவனிக்காது இறந்தவர்களைப் பற்றி எண்ணுவதில் என்ன பயன், சுவாமி ?''

''உண்மைதான்...''

இருவரும் நீண்ட நேரம் கண்களிமைக்காது ஒருவரையொருவர் பார்த்தபடி இருந்தனர். அவள் இடையில் படர்ந்த அவன கரம் செய்த குறும்பால் அவள் சிலிர்த்தாள்.

'பொல்லாத பிள்ளை .. இந்தக் கையைக் கட்டித்தான் வைக்க வேண்டும்.'' என்று கூறியபடி அவன் கரத்தைப் பற்றித் தன் மடி மீது வைத்து, விரல்களோடு விளையாடினுள்.

''கட்டித்தான் வையேன், உதயா ?''

''காலம் வரட்டுமே...''

''காலம் வந்தால் கட்டுபவன் நானல்லவா ?''

''கட்டுவது நீங்கள்தான். எங்களுக்குக் கட்டும்போது உங்களையே நீங்கள் கட்டிக் கொள்கிறீர்கள்......''

உதயவல்லி மீண்டும் சிரித்தாள்.

இரவின் அமைதியைக் குலைப்பது போல, மருத்து மாயலை வனத்தின் தென் மேற்கு மூலையில் நாய் ஒன்று நிலவைப் பார்த்துப் பெருங் குரலில் ஊளையிட்டது. நிலவைச் சுற்றிப் படர்ந்திருந்தது பரிவட்டம்.

உதயவல்லி அவனோடு நெருக்கமாக இணைந்தாள். ''பிரபு' என்று அழைத்த அவள் குரலில் மெல்லியதொரு நடுக்கம் இழையோடியது.

''என்ன உதயவல்லி ?''

''அரச குடும்பத்தாரை எண்ணிப் பார்க்க எனக்குப் பயமாக இருக்கிறது...... உங்களை நான் இழந்து விடுவேனோ எனப் பயமாகவும் இருக்கின்றது......''

உதயவல்லியின் கரங்களில் இருந்து தன் கையை விடுவித்து, அவளது மதி முகத்தை நிமிர்த்தியவன், அவள் கண்களில் முத்துக்கள் பனித்திருப்பதைக் கண்டான்.

''உதயா, இது என்ன ? ஏன் கண் கலங்குகின்றாய் ? அரச குடும்பத்தாரை எண்ணி நீயேன் கண் கலங்க வேண்டும் ?'' என ஆதரவோடு கேட்டான்.

''பிரபு யாழ்ப்பாண அரச குடும்பத்தாருக்கு மாறாத சாபக்கேடு போலிருக்கிறது அடுத்து மன்னராகப் போகின்ற இளவரசர்கள் கயவர்களால் கொல்லப்படுகின்றார்கள்... அல்லது இளமையிலேயே இறந்து விடுகின்றார்கள்......''

''நீ எதைக் கூறுகிறாய் என்பது எனக்குப் புரிகிறது, உதயவல்லி! என் சிறிய தந்தை செகராசசேகரர் மருத்து மாமலை வனத்திலே நாகந் தீண்டி இறந்தார். என் மூத்த சகோதரர் சிங்கபாகு வன்னியர்களால் நஞ்சூட்டிக் கொல்லப்பட்டார்.! கடந்த திங்களில் பட்டத்துஇளவல் வீரபண்டாரம் கொல்லப்பட்டார். தான் பெற்ற இருசெல்வங்களையும். இழந்ததால் யமுனை ஏரியில் மூழ்கி உயிர் துறந்தார் என் பெரிய அன்னை''

சங்கிலிகுமாரன் அமைதியாகப் பேசிய போதிலும், அவனது குரலில் தொனித்த ஆவேசவுணர்வினை அவள் உணர்ந்தாள்.

‘‘வன்னியர்களா பட்டத்து இளவரசர்களைக் கொன்றார்கள்?...’’

‘‘நாடே முடிவு செய்த முடிவிது, உதயா? அடுத்த பட்டத்திளவரசர் என் அண்ணர் பரநிருபசிங்கர். அவருக்கும் ஏதாவது நடந்துவிடுமோ என அஞ்சுகின்றேன்...’’

உதயவல்லி தன் அகன்ற விழிகளால் அவனை ஏறிட்டுப் பார்த்தாள்;

‘என்ன உதயா, அதிசயமாகப் பார்க்கிறாய்?’’ என அவன் வினவினான்.

‘‘பிரபு, ஒளி வீசும் உங்கள் கண்களை என்றும் பார்த்தபடி இருக்கவே நான் அவாவுகின்றேன்! ஆதலால்...’’

‘‘ஆதலால்...?’’

‘‘மௌனமாக இருங்கள்.. நீங்களும் இளவரசர்தானே...?’’ என்ற உதயவல்லியின் கன்னத்தை கிள்ளியவன் கலகலவென நகைத்தான்.

‘இதைக் கூறத்தானா, இவ்வளவு பீடிகை போட்டாய்...?’’ என்று கேட்டதோடு, தன் கைகளிடையே அவளது முகக் கமலத்தை ஏந்தி, ‘‘உதயா, என்று உன்னை முதன் முதல் கண்டேனோ அன்றே என்னை இழந்துவிட்டேன்’’ என்றான்.

‘‘பழையகதை...’’

‘‘இனிக்கின்றதே, உதயா?’’

அவன் மார்பிலே ஆசையோடு முகம்புதைத்த உதயவல்லி, ‘‘பிரபு’ என முணுமுணுத்தாள்.

காலம் நில்லாது கரைந்தது.

மீண்டும் பழைய நாயின் ஊளை எழுந்தது.

சுயநினைவு பெற்ற உதயவல்லி, ‘‘நேரமாகி விட்டது, பிரபு!’’ என எழுந்தவள் விக்கித்து நின்றதைக் கண்ட சங்கிலிகுமாரன் அவள் பார்த்த திசையை நோக்கினான். தூரத்தில் ஆஜானுபாகுவான நெடிய ஓர் உருவம் தாங்கள் இருந்த இடத்தை நோக்கி வேகமாக வருவதைக் கண்டான்.

வந்தவன், கனகராயன்.



## 5

## ஏழூரதிபன்

அரண்மனை மீண்டும் ஒரு தடவை சோகத்துள் ஆழ்ந்தது அச்சோகத்தினூடே மெல்லிய இழையாக மகிழ்ச்சியும் இருக்கவே செய்தது. கண்டி அரசியின் நோய் தீர்த்துவிட்டு பரநிருபசிங்கர் நாடு திரும்பியுள்ளார். பரநிருபசிங்கரின் வருகை அரண்மனையிலுள்ளோரின் இதயங்களில் கடந்த திங்கள் நிகழ்ச்சிகளை மீட்டு விட்டது.

மன்னர் பரராசசேகரர் மைந்தனை எதிர் கொண்டார்; கூடவே வள்ளியம்மை தேவியார், சங்கிலிகுமாரனின் தாயார் மங்கத்தம்மாள் தங்கை பரவை ஆகியோரும் எதிர் கொண்டனர்.

தந்தையைக் கண்ணுற்ற பரநிருபசிங்கரின் விழிகள் நீரால் தோய்ந்தன; மன்னரின் கண்களும் நீரைப் பொழிந்தன. சில நாழிகைப் பொழுது அரண்மனையே மௌனமாகக் கண்ணீர் விட்டது.

கனகராயன் தொடர்வான்:

''பின் தந்தையைக் கட்டி அணைத்துக்கொண்டு சிறு குழந்தையைப் போல பரநிருபசிங்கர் அழுதார்...! அடுத்து அவர் கண்கள் தன்னைச் சுற்றி நின்றவர்களைத் துயரத்தோடு நோக்கிச் சுழன்றன. அவர் தேடிய ஒரு உருவத்தை அங்கு காணவில்லை......''

''நான் எங்கே என்று உடனே கேட்டாரா?'' எனச் சங்கிலிகுமாரன் குறுக்கிட்டான்.

''ஆமாம்...''

''அதற்குக் கிடைத்த பதில்... ?''

''வெளியிற் சென்றுள்ளதாக உங்கள் தாயார் கூறினார். அதற்குள் உங்கள் தங்கையார் பரவை...''

''என்ன சொன்னாள்... ?''

''அண்ணா, அவர் மருத்து மாமலை வனத்திற்குச் சென்றுள்ளார்'' எனக் கூறிவிட்டு உதட்டைக் கடித்துக் கொண்டார். உடனே நான் புரிந்து கொண்டேன் நீங்கள் இங்கு வந்த காரணத்தை...''

''பரவைக்கு எப்படித் தெரியும், நான் இங்கு வந்தது... ?''

சங்கிலிகுமாரன் குரலிலே வியப்புத் தோன்றக் கனகராயனைக் கேட்டான்.

''வந்தது மட்டுமல்ல, இளவரசே! வருவதுந் தெரியும்? என்னத்திற்காக வருகிறீர்கள் என்றுந் தெரியும்!'' என உதயவல்லி குறுக்கிட்டாள்

சங்கிலிகுமாரன் உதயவல்லியை நோக்கித் திரும்பினான். அவள் நிலத்தைப் பெருவிரலால் கீறியபடி, கன்னங்கள் குழிவிழச் சிறு நகை புரிந்தாள்.

''அடிகள்ளி, உன் தோழி பரவையிடம் எல்லாவற்றையும் கூறிவிட்டாயா? அதுதானே பார்த்தேன். பரவை பல தடவைகள் 'மருத்து மாமலை வனத்திற்குச் செல்லவில்லையா, அண்ணா' என்று கேட்டதன் காரணத்தை! பரவை அரண்மனை முழுவதும் இந்தக் கதையைக் கொட்டியிருப்பாளே... அது சரி, இன்று உன்னைச் சந்திக்கும்படி நீ ஓலை அனுப்பியது கூடப் பரவைக்குத் தெரியுமா?'' என இளவரசன் கேட்டதற்கு, வெட்கத்தோடு தலையசைத்த அப்பா முதலி மகள் பார்வையை வேறெங்கோ நிலைக்க வைத்தாள்.

பரிவட்டம் படர்ந்த தேயாமதியோன், தன் பரிவட்ட பரப்பை விரிவாக்கி, அப்பரிவட்டத்துள் சில தாரகைப் பெண்களையும் உட்படுத்திக் கொண்டு, உறக்கமற்ற மனிதர்கள் தன்னைப் பார்த்துக் கொண்டு இருப்பதைக் கவனியாது கொஞ்சி மகிழ்ந்தான்.

''இளவரசே, நேரமாகிறது புறப்படுவோமா?'' என கனகராயன் அழைக்கவே, உதயவல்லியும் நேரக்கழிவை உணர்ந்து கொண்டாள்.

''நேரமாகிவிட்டது, பிரபு! நானும் வருகின்றேன்'' என்று புறப்பட்டவள், சிறிதூரம் சென்று பின் திரும்பி வந்து, ''இளவரசே, ஒரு விடயம்!'' என்ருள்.

''அப்படியானுல் நான் வெளியே சென்று இருக்கின்றேனே...'' என்று கூறத் தொடங்கிய கனகராயனை இடையில் மறித்தான், சங்கிலி.

''ஏன் அவசரப்படுகிருய்...?''

''இல்லை. தேவியார் தங்களோடு தனிமையில் ஏதோ பேச விரும்புகிருர் போலிருக்கிறது...'' என்ற கனகராயன் மருத்து மாமலை வனத்து வாயிலை நோக்கி நடந்தான்.

''என்ன விடயம். உதயா?''

''வந்து...''

''வந்து தான் சொல்லேன்?''

''நாளை காலை நான் அரண்மனைக்கு வருவேன்...''

''நீயா, ஏன்?''

''பரவையைச் சந்திக்க. அப்போது தாங்களும் அரண்மனையில் இருக்க வேண்டும்... இருப்பீர்களா?''

''தேவியாரின் கட்டளைக்கு மாறுண்டா?'' என்று கூறிய சங்கிலி குமாரன் அவளின் மாம்பழக் கன்னத்தை பலமாகக் கிள்ளவே, அவள் 'ஆ' என்று நெளிந்தாள். அடுத்து நிகழ்ந்த கண நிகழ்ச்சியை வெட்கம் கெட்ட நிலவோன், தாரகைப் பெண்களைக் கொஞ்ச மறந்து, கண்ணிமைக்காது பார்த்துக் கொண்டிருந்தான்.

**ஊ**ரே அமைதியாகத் துயிலிலாழ்ந்து கிடந்த அந்த நிசி வேளையில், அரசப் பெருவீதியின் அருகுகளில் வளர்ந்து வானை அளாவி, பந்தர்கள் போலக் குளிர்மையை வீதிக்கு அளித்துக்கொண்டிருந்த நிழல் மரங்களில் உறங்கும் புள்ளினங்கள் கூட அமைதியாகத் துயின்றன. அவற்றினது தூக்கத்தைக் கலைக்க விரும்பாதவர்களைப் போல அரண்மனையை நோக்கித் தங்களதுகுதிரைகளை மென் நடைபயில விட்டு விட்டு அவற்றின் மேல் அமர்ந்து சங்கிலிகுமாரனும் கனகராயனும் வந்து கொண்டிருந்தார்கள்.

சற்றுநேர அமைதியின் பின் கனகராயன் சங்கிலி குமாரனை விளித்தான்.

''இளவரசே, நீங்கள் இப்போது 'ஏழூரதிபர் பரநிருபசிங்க வைத்திய ராசேந்திரரை' உடனடியாகச் சந்திக்கப் போகிறீர்களா?'

ஏதோ சிந்தனையில் சற்று நேரம் திளைத்தபடி வந்த இளவரசன், நண்பனின் பேச்சால் சிந்தனை கலைந்து திரும்பினுன்.

''என்ன, கனகராயா, அதிசயமாக இருக்கிறதே! நீ ஒரு பெயரைக் கூறுகிருயே? யார் அந்த வைத்திய ராசேநதிரர்?...''

(தொடரும்)

# குயிலோசை

## பங்குனி பிறந்தது

சேந்தன்

பங்குனி மாசம் பிறக்கவே
பனையும் பாளை விரியுமே
பருவ நுங்கு குடிக்கவே
பாலர் உள்ளந் துடிக்குமே

தட்டித் தட்டிப் பாளையில்
முட்டி கட்டித் தொங்குமே
சொட்டுச்சொட்டாய் கருப்பநீர்
முட்டி முட்ட வழியுமே

கெத்திக் கெத்தி மாம்பிஞ்சை
வைத்துக் கருப்ப நீரிலே
பித்து நீக்கிக் குடிக்கவே
மெத்தத் தாகந் தணியுமே

கருப்ப நீரைக் காய்ச்சியே
காணும் பனங் கட்டியில்
விருப்ப மோடும் ஆடிக் கூழ்
வேண்டு மட்டுங் குடிப்பமே

உழுத்தங் கஞ்சி காய்ச்சியே
ஓடிப் பணிலில் உடைத்துமே
ஊதி உறிஞ்சிக் குடிக்கவே
உண்டு தனியோர் இன்பமே.

'விவேகி கவிதை ஏடு'

# காரணம் ஏன்?

விண்வழி ஏகி விரைந்த னர் எம்மவர்
வெண்ணி லவின் இடை யே
எண்ணருங் கீர்த்தி சமைத்தனர் இங்கவை
எண்ணில் அடங்கிடு மோ ?
தண்ணெனும் தன்மை மறந்தவர் தம்மவர்
தன்னலம் பேணிய தால்
உண்மை துறந்தனர் ஊழல்வ ளர்த்தனர்
ஊருல கத்திடை யே.

துன்பம் அடைந்திடு தோழனின் சூழலைக்
கண்டு மனங்குளிர் வார்
இன்பம் அவன்இருந் தெய்துதல் காணிலோ
ஏங்கித் தினம்அலை வார்
பண்ணரும் சீர்த்தியைப் போற்ற மறந்திடும்
பான்மை வளர்ந்தத னால்
இன்னல் நிறைந்துள வாழ்வு மலிந்த புற்
றீசற் படையென வே

சட்டையும் பட்டையும் கட்டிவிட் டாலுயர்
சால்புடை யோமென ்வ
பட்டையும் பொன்னையும் பேணினர் பண்பென
பாசத்தை அன்பைவிட் டார்
தட்டிக்க ழித்தனர் தார்மிகத் தன்மையைத்
தண்ணளி கொன்றனர் எம்
மட்டினில் நின்றிடும் என்ப தறிகிலம்
எந்நிலை எய்திடு மோ ?

காதலும் வீரமும் காவிய மாகவே
கண்டனர் எம்மவர் என்
ஓதினர் மேடையில் உண்மையிற் தன்மகன்
ஒப்பிலாக் காதலின் கண்
சீதனஞ் சாதியென் றேசிறை ஆக்கினர்
சிந்தனை வித்தகர் கள்
போதனை செய்வதிற் பூரணர்; செய்கையில்
பொய்யர் களாகிய தென் ?

– வே. குமாரசுவாமி

‘மஹாகவி’யின்

# கலட்டி

## கழகம்

உயனே எனும் புலத்தினிலே மனதை ஊன்றி
உலவுகிறான் செல்லையன் அதிலே பொல்லா
வெயிலடிக்கும் நடுப்பகலில், விடியும் வேளை,
மெல்லிய காற்றசைகின்ற மாலை வேளை,
துயிலினில் அவ்வூரெல்லாம் அயரப் பேய்கள்
துணிந்துலவும் நள்ளிரவுவேளை பாழிற்
“பயனெதனைக் காண்கின்றான் பொடியன்?” என்றூர்
பகரவிட்டுத் திரிகின்றான், தனியனாகி.

“முகத்தார் என்பவருக்கே அக் கலட்டி
முழுதும் உரித்து!” என மாவை முழுதும் கூறும்.
தகப்பன் அன்று காணி எழுத்தெழுதி வந்த
காலத்தில் பிறர் நிலத்தை அவ்வவ்வேளை
அகப்படுத்தித் தம் பெயரில் எழுதிக் கொண்டார்.
அதன் பின்னால் ஆறடியுள் அடங்கிப் போனார்
மிகப் படித்த மகன் அதனை விற்றுவிட்டு
மேல் நாட்டில் குடி ஏற விருப்புக் கொண்டான்.

மாவை இளைஞர்களினை ஒரு நாள் மாலை
வைரவர் கோயில் வீதிதனிலே கூட்டித்,
“தேவை உண்டு நம்பணி நம் ஊருக்கு!” என்று
செல்லையன் விளம்பியதால், சங்கமொன்றை
ஆவலுடன் ஆரம்பம் செய்தார். கேட்ட
அக்கணமே முகத்தார் தம் கலட்டை ஈந்து,
“சேவை பெரிது!” என்றதொரு செய்தி தந்து
சிலோன் விட்டே சில நாளிற் சென்றுவிட்டார்!

## தொடக்கம்

காணி கிடைத்ததனால் அவ் விளைஞர்
கழகம் மகிழ்ந்து குதித்ததையா —
வீணிற் கிடந்த நிலத்தை விதைத்து
விளைப்பது நோக்கமாய்க் கொண்டதையா —
தூணிலும் உண்டு துரும்பிலும் உண்டெனச்
சொல்வர் கடவுளை! நல்விளைவு
காணுதல் உண்டு கலட்டிலும் என்றொரு
கங்கணம் கொண்டு துடித்ததையா.

ஊரிற் பெரியவர் ஓர் சிலர் வேண்டிய
உற்சாகம் தந்தனர். ''வீடு வந்தே
சேருவதில்லை, நும் வேளாண்மை தான்!'' என்று
செப்பவும் வேறு சிலர் இருந்தார் –
ஆரும் எதனை மொழிந்திடி னும், தங்கள்
ஆண்மையில் நம்பிக்கை வைத்தவராய்,
ஏரினைக் கொண்டோர் புதுவர லாற்றை
எழுத இளைஞர் எழுந்து வந்தார்.

வேண்டிய தோர் கிண றென்று தெரிந்தது
வேறெதன் முன்னரும்; ஆதலினால்
தோண்டத் தொடங்கினர், தாமே; அதற்குத்
துணைதரு தற்கென, அத்தொழிலை
ஆண்டவர் மாதக லார்கள் அமைந்தனர்;
ஆறுதல் இன்றி அவர் தொடர்ந்தார்.
ஈண்டிது வே ஒரு காப்பியமாதல்
இயலும் எனும்படி ஒத்துழைத்தார்.

## கிணறு

ஆழ நீர் கொண்டு வாழ இளைஞர்
அகழ்கின்றார் தம் நிலத்தினைத்தானே–

''பிக்கான் மண்வெட்டி கொர்தாலி?– யொடு
பிள்ளைகளுக் கென்ன சோலி?'' – என
தக்கார் சிலர்; சிலர் கேலி–செய்ய,
நாளும் உழைத்தனர் வேலை முழுவதும்–
தக்கார் புகழவும், தாயர் மகிழவும்–
தந்தையர் கண்டு தம் நெஞ்சு நெகிழவும்,
மிக்க அறிவுடை யார்கள் ''உது சரி!
வெல்லுக நும்பணி!'' என்று புகழவும்–

ஆழ நீர் கொண்டு வாழ இளைஞர்
அகழ்கின்றார் தம் நிலத்தினைத்தானே–

பாறை எதிர்ப்பட வேட்டுப்–பல
பற்பல வைத்தது கேட்டு– மிகத்
தூர இருக்கும் கல் வீட்டுத்–துரை
தூசண மாகவே ஏசத் தொடங்கினர்!
' கூரையிலே சில ஓடு வெடித்தது!
'கொம்பிள யின்று' கொடுப்பன்'' ! என்ச் சொல்லி
நேரே பொலிசுக்குச் செல்ல, அவர்கள் ''நெய்!
நெய்!'' என்று காட்டித் திரும்பி அனுப்பவும்–

ஆழ நீர் கொண்டு வாழ இளைஞர்
அகழ்கின்றார் தம் நிலத்தினைத்தானே-

ஒன்றிரண்டோ மூன்று நாலோ-அல்ல
ஓடின மாதங்கள் ஏழே! - "இனி
என்றெம் வியர்வையைப் போலே-வரும்
எங்கள் வினைப்பயன்!" என்று நித நிதம்
நின்று நெடுக முயன்றனர் ஆதலின்,
நேத்தியாக்த் தொழில் பார்த்தனர் ஆதலின்,
கன்று வாய் வைக்கவும் கற்று சுரக்கும்
கணக்கில் பாதாளத்திலே நீர் சுரந்தது!

## தெரிவு

செல்லையனை அவன் தந்தை ஒருநாள்
"நில்லையா!" என்றிவை நிகழ்த்தச்
சொல்லாடல் ஒன்று தொடர்ந்து நடந்ததே.

உளறித் திரிவதனால் உண்டாகும் நன்மை என்ன?
ஊருக்கு உழைத்ததினிப் போதும் தம்பி!
"கிளறிக்கல்' என்று சொன்னான் கிட்டிண பிள்ளை; நீ 'அப்
பிளிக்கேசன்' போட்டிடுவாய்!" என்றார் தந்தை,
"கிளறிக்கல் எடுப்பதே எண்ணம் எனக்கெனினும்,
கிட்டிணபிள்ளை சொன்ன வண்ணம் அல்ல!
உளதைப் பயன் படுத்தா தோடி நகர்ப்புறத்தில்
உட்காரல் தக்கதுவோ?" என்றான் பிள்ளை.

"மண்ணைக் கிளறி அது மலரப் பணிபுரிதல்
மட்டற்ற இன்பம்!" என்று சொன்னான் பிள்ளை.
"பண்ணத் தகுந்ததுவோ படித்தவர் இத்தொழிலைப்?
பார்த்தார் சிரிப்பார்!" என்று சொன்னான் தந்தை.
"கண்ணைத் திறப்பதற்கே கல்வி கண்டோம்; இதனைக்
கலட்டிற் செலுத்தலும் நன்று!" என்றான் பிள்ளை.
"உண்ணக் கிடைத்திடலாம்; உலகிற் பெரியவராய்
உலவக் கிடைத்திடுமோ?" என்றான் தந்தை.

"உலகிற் பெரியவராய் ஊர்ந்து திரிபவர்கள்
உண்மையி லே பெரியர் தாமோ?" என்றும்,
பலகற்ற தன்படியே பண்பட்டு நிற்பவர்கள்,
பணமற்ற தால் சிறியர் அன்றோ!" என்றும்.
"நிலையற்ற இந்நிலத்திற் பிறருக் குதவுவதே
நிற்கத் தகுந்தது!" என்றும் சொன்னான் பிள்ளை.
"கலகத்தை வீட்டினிலே கண்டேன்!" எனச் சிரித்துக்
"கதை மெத்தச் சரி!" என்று சொன்னான் தந்தை.

## முன்னேற்றம்

கழகத் திளைஞரது கைவலிமையால்
கலடாய்க் கிடந்த அந்த உயனே வெளி
பழகத் தொடங்கியது கிணறிருந்த
பகுதிச் சில பரப்புப் பக்குவப்பட்டே
இளகத் தொடங்கியன! வாழைகள் குலை
ஈனத் தொடங்கியன. தென்னை இனங்கள்
அழகுச் சிறைவிரித்துத் தோகை மயில் போல்
ஆடத் தொடங்கியன அவ்விடத்திலே!

கத்தரி காய்க்க நிலம் ஏற்றது கண்டார்
கடகங்க ளாய் நிறைத்து விற்பனை செய்தார்.
வத்தகை தான் செழித்து வந்தது கண்டார்,
வந்து பிறர் விரும்பிக் கொண்டனர், சென்றார்.
சத்து நிறைந்த முட்டைக் கோசு தழைக்கத்
தக்கதம் மண்ணெனவும் சான்றுகள் உண்டாம்.
"முத்தை விதைத்திடினும் முத்து விளைதல்
முடியும் இங்கே!" என ஊர் நம்பிலாச்சு!

"முந்திரிகைக் கொடி வளர்கிறதற்கு
முற்றும் தகுந்த நிலம் இந்நிலம்!" என்றும்,
"அந்தப் பயிர்தொடங்க வேண்டும்!" எனவும்
அங்கத்தவர் ஒருவர் முன்மொழிந்தனர்,
"எந்திரத்தால் இறைக்க வேண்டும்!" எனவும்
ஏகோபித்தோர் முடிவு கண்டபடியால்'
சிந்தனை யுற்றதவர் செயற்குழுதான்;
செய்யப் பொருள் வலிமை சேரவில்லையே!

–வளரும்

# விண்மீன்கள்

நீல வானம் எழிலோடு இலங்கிட
நித்திலம் சிந்தியதோ
ஆல கால விசந்தன்னில் அமுதத்
துளிகள் சிதறினவோ
வான வெளிதனிலே மலர்ப் பந்தல்
விரித்து இருககிறதோ
வானவ ரானவர் மேதினி மீது
வழங்கிடும் பூமழையோ
வெண்மணிகள் நலக் கம்பளம் மீது
விளங்கும அழகிதுவோ
பெண்மணிகள் கருங்கூந்த லிலங்கும்
வெண்மல்லிகை மொட்டுகளோ
ஆழக் கடல்தனிலே யுள்ள முத்துக்கள்
அத்தனையு மெழுந்து
வேழத்தின் தந்த மிலங்குதல் போற்பெரு
விண்ணில் தெரிவனவோ
தேவர்கள் பட்டண மீது ஒளிர்ந்திடும்
தீபங்களின் ஒளியோ
ஓவர்கள் தீட்டிய சித்திரங் கள் ஒளி
தந்திடும காட்சிகளோ
பண்டிகை கொண்டாடும் வானவர் அங்கே
கொளுத்திடும வாணங்களோ
தண்டிகை மீது இறைவன் வரஅவர்
சாததிடும பூததிரளோ
பக்தியுடன் மலர்சாத்தி இறைவனைப்
போற்றிடும பக்தர்குழு
முக்தி பெறுமிடம் என்ன விளங்கிடும்
மோட்சத திருவொளியோ
மீனவர் பெற்ற குழந்தைகள் வீசி
மகிழ்ந்திடும முத்துகள்போல்
வானவர் ஈனற மழலைகள் சிந்திய
ரத்தினக் கற்குவையோ
ஊடல் மகளிர் களைந்து எறிய
உதிர்ந்த மலர்தழ்போல்
ஆடல் மகளிர் அணிந்த மணிகள்
அவிழ்ந்து சிதறினவோ.
தூரத் திருக்கும நகரத் திடையொளிர்
மின்சார தீபங்கள்போல்
ஆரத் தெரியுமிவ் வண்ட வெளியின்
அழகிற்கு என்னசொல்வேன்.
அண்ட வெளியிடையில் ஒளிவீசும்
அழகு விண்மீன்களை நான்
கண்ட பொழுதொரு கற்பனைகள்; என்
கவிக்குள் அடங்கிடுமோ ?

காரை செ. சுந்தரம்பிள்ளை

# இல்லத்தரசி

அறிவுள்ள சுவையான விஷயங்கள் பேசினுல்
அவ்விடம் விட்டு நீங்காள்
அரும்பெரும் புதையல்கை வந்ததென் றெண்ணுவான்
ஆவலாய்க் கேட்டு நிற்பாள்
கறியில்லை ஆயினுங் கலங்காது கீரையைக்
காய்ச்சுவாள் அமுதமாகும்
கணவனதை யுண்டெனை கறியென்று கெஞ்சுவான்
கலகலவென் றேசிரிப்பாள்
நெறிகேடு துணைவனில் காணினுந் தெய்வமாய்
நெஞ்சிலே வைத்திருப்பாள்
நிந்தையவ மானங்கள் எந்தநா ளும் பேசாள்
நேசமுங் குறைக்கமாட்டாள்
முறிவான தொழில்செய்யும் மணவாள னயல் நின்று
மூச்சாக உதவிசெய்வாள்
மொய்க்கின்ற கவலை நீங்கு முற்சாக முண்டாகும்
மூதறிஞர் புகழ்ந்த பெண்ணே?

கடன் காரர் சினங்கொண்டு வீட்டுக்கு வரும்போது
கணவனுள் ளங்கலங்கும்
கல்லுங் கரைந்துபோம் வாய்திறந் தாலவள்
காய்ந்தவர் கருணை செய்வார்
கடிந்தாலுந் தலைவனைக் கனிவாக நோக்குவாள்
கணவன் குளிர்ந்து போவான்
கலியாண காலத்தி லன்பான வாழ்வெலாங்
கணப்பொழுதி லாங்கு தோன்றும்
உடம் பெலா முளையுதே சுடு நீரில் ஆடினுல்
உண்டுசுக மென்றெண்ணுவான்
உற்றகுறிப் பறிந்தில்லான் வெந்நீர் தயாராக
உண்டுகுளி யுங்களென்பாள்
விடும்போது வேலைக்கு வீதி மட்டும் வந்து
மெய்யன்போ டனுப்பிவைப்பாள்
வெற்றி வீரன் போல வீடுவந் தெய்துவான்
விளக்கென்ற திவளைத் தானே?

'சுதந்தி

*Registered at the G. P. O. as a Newspaper in Ceylon*


# ஆசீர்வாதம் அச்சகம்—புத்தகசாலை

**32, கண்டி வீதி, யாழ்ப்பாணம்**

தொலைபேசி: 274

## 'ஆசீர்' வெளியீடுகள் - விலை விபரம்

### படிமுறை எண் கணிதம்

| | |
|---|---|
| 2 ஆம் வகுப்புக்குரியது | 1-25 |
| 3 ,, ,, | 1-75 |
| 4 ,, ,, | 2-00 |
| 5 ,, ,, | 2-25 |
| 6 ,, ,, | 2-50 |
| 7 ,, ,, | 2-75 |
| 8 ,, ,, | 5-00 |
| 9 ,, ,, | 6-00 |

### கணிதப் பயிற்சிகள்:

| | |
|---|---|
| J. S. C. வகுப்புக்கு உரியது | 1-60 |
| G. C. E. ,, (தமிழ்) | 1-60 |
| ,, ,, (சிங்களம்) | 1-60 |
| ,, ,, (ஆங்கிலம்) | 1-60 |

### கணித மாதிரிகை வினைக்கள்:

| | |
|---|---|
| 5 ஆம் வகுப்புக்கு உரியது | -75 |
| J. S. C. | -75 |
| G. C. E. ,, | 1-00 |
| ஆசிரிய கலாசாலை பிர.பரீட். | 1-00 |

### படிமுறை அட்சரகணிதம்

| | |
|---|---|
| 6 ஆம் வகுப்புக்குரியது | 1-60 |
| 7 ,, | 1-60 |
| 8 ,, | 1-75 |

### படிமுறைக் கேத்திரகணிதம்

| | |
|---|---|
| 7 ஆம் வகுப்புக்கு உரியது | 2-00 |
| 9 ,, ,, ,, | 2-25 |
| பயிலுந் தமிழ் 1-ம் பாகம் | 2-00 |

### படிமுறை மனக் கணிதம்:

| | |
|---|---|
| 2 ஆம் வகுப்புக்கு உரியது | -60 |
| 3 ,, ,, ,, | -75 |
| 4 ,, ,, ,, | -90 |
| 5 ,, ,, ,, | 1-00 |

### புதிய தமிழ்ப் பயிற்சி

| | |
|---|---|
| 2 ஆம் வகுப்புக்கு உரியது | -1-25 |
| 3 ,, ,, ,, | -1-40 |
| 4 ,, ,, ,, | -1-25 |
| 5 ,, ,, ,, | -1-20 |

### பிற நூல்கள்:

| | |
|---|---|
| நோத்முதல் கோபல்லவா வரை | 8-50 |
| புதுஉலக சரித்திரம் | 7-75 |
| இலங்கைச் சரித்திரம் | 7-00 |
| பூரணன் கதை | 2-50 |
| G.C.E. பாஷை மாதி. வினு | 1-25 |
| இலங்கைப் பூமிசாத்திர வினு விடை | 1-25 |
| நாடோடிப் பாடல்கள் | 1-50 |
| வன்னியின் செல்வி | 1-50 |
| எஸ்தாக்கியார் நாடகம் | 1-50 |
| பரீட்சைகளிற் சித்திபெறுவது எப்படி? | 1-00 |
| இலங்கை வரலாற்று வினுவிடை | 3-50 |

''விவேகி'' மாத இதழ்

வருட சந்தா 4

**ASIRVATHAM PRESS & BOOK DE**

**32, KANDY ROAD, JAFFN**

**T'Phone: 274**


இப்பத்திரிகை 'விவேகி' சொந்தக்காரருக்காக யாழ்ப்பாணம்
ஆசீர்வாதம் அச்சகத்தில் 16-4-67 இல் பதிக்கப்பெற்று வெளி